THE OOLIAN Reg.No.M.

ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

SAW. GANESAN,
MEMBER, MADRAS LEGISLATIVE ASSEMBLY.



ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கசு. சென்னை, பவஹு ஆனிமீ 22உ, வெள்ளி (6-7-1934) இதழ் க.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா .
தனமேறி ஈடி லாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
யாவருமே சுகவாழ் வெய்த
இந்தநிலம் வந்தவருள் இலைபிறப்பில்
இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
நல்லனவெங் நாளும் வாழ்க !

"ஊழியன்"

"ஊழியன்" 1920-ம் ஆண்டு செப்டம்பர் எட்டாம் நாள் தோற்றுவிக்கப் பெற்றான். எனவே, "ஊழிய"னுக்கு இப்போது நடப்பது பதினான்காம் ஆண்டு. ஆதியில் நமது "ஊழியன்" தனவைசிய ஊழியன்" என்ற பெயரோடு விளங்கினான். தனது ஐந்தாவது ஆண்டின் ஈற்றில்—1925 ஜூலை பதினான்காம் நாள் தொட்டு—"தனவைசிய" என்னும் அடை விடுத்து "ஊழியன்" என்ற பொதுப் பெயர் தாங்கி வரலானான்.

"ஊழிய"னை அவனது இரண்டாவது ஆண்டின் முற்பகுதியிலிருந்து சிறியேன் ஆசிரியனாக இருந்து நடாத்தி வருகின்றேன். எனவே, "ஊழியன்" பத்திரிகையின் ஆசிரியப் பதவியை நான் ஏற்று ஏறக்குறையப் பதின்மூன்று ஆண்டுகள் ஆகின்றன. "ஊழியன்" தமிழ் நாட்டிற்குப் புதியவனல்லன்; அவனுடைய ஆசிரியனும் புதியவனல்லன். எனவே, என்னுடைய "ஊழிய"னைப் பதின்மூன்று ஆண்டுகளாக அறிந்திருக்கும் அன்பர்கட்கு என்னையே ஆசிரியனாகக்கொண்டு இன்று முதல் புத்துருவும் புத்துயிரும் பெற்று வெளியாகும் "ஊழியன்" கொள்கை இன்னின்னவெனப் பலப்பட விரித்துரைத்தல் மிகையே யன்றோ ?

"ஊழியன்" பல திறப்பட்ட இன்னல்கட் கிடையே அஞ்சாது பணியாற்றினான் என்பதைத் தமிழ் நாடு—சிறப்பாக அவன் வளர்ந்த பகுதியாகிய தனவணிக நாடு—நன்கு அறியும். "ஊழியன்" இந்தப் பதினான்கு ஆண்டுகட்கிடையே மூன்றுமுறை நிறுத்தப் பெற்றான். முதலிரண்டு முறைக்குக் காரணம் அரசியல். மூன்றாவது முறைக்குக் காரணம் பொருள் நஷ்டம். முதல் இரண்டு முறை அவன் கொள்கை காரணமாகவே நின்றிருந்தானாதலால் அதில் எனக்கு வருத்தம் சிறிதுமில்லை. மூன்றாவது முறை பெருவருத்தத்தோடுதான் "ஊழிய"னை நிறுத்தினேன். சென்ற ஆண்டு ஜூன் இருபத்தோராம் நாள் "ஊழிய"னில் நான் எழுதிய தலையங்கத்தைப் படித்தோர் அதனை அறிவர்.

"ஊழியன்" இன்று அழகிய உருவத்தோடு தோன்றுகின்றானாதலின் அவ்வருத்தம் ஒருவாறு இன்றோடு நீங்குகின்றது. ஊழியனை நிறுத்திவைத்த அன்று எழுதிய தலையங்கத்தில் ஒரு பகுதியைக் கீழே தருதல் பொருத்தமுடைத்தென ஈண்டுத் தருகின்றேன்.

"ஊழியன்" திரும்ப என்றால் தொடங்கப்படுவான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லாமல் இல்லை. தொடங்கப் படுங்கால் இன்று விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தே அவன் வருவான். ஆனால், கால எல்லை என்னால் இன்று சொல்லமுடியாது. எனது "ஊழியன்" நாட்டுக்குத் தேவை என்று தமிழ்நாடு நன்கு உணரு நாள் "ஊழியன்" தோன்றுவான் என்பதற்கு மேல் இன்று நான் ஒன்றும் சொல்லமுடியாதன்றோ ?


"ஊழிய"னை நிறுத்திவைத்தபோது சென்ற ஆண்டில் இவ்வாறு எழுதினேன். இன்று "ஊழியன்" தோன்றுகின்றான். ஆனால், முந்திய "ஊழிய"னுக்கும் இன்று தோன்றும் "ஊழிய"னுக்கும் கொஞ்சம் வேறுபாடு உளது. முந்திய ஊழியன் முற்றும் எனக்குச் சொந்தமாக இருந்தான். இன்று தோன்றும் "ஊழியன்" "இந்தியா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்" என்ற ஒரு கம்பெனிக்குச் சொந்தமானவன். ஆனாலும் எனக்கு அன்னியன் அல்லன். அக்கம்பெனியின் மானேஜிங் டைரெக்டராக நானே இருந்கி

றேன். தவிர "ஊழிய"னின் ஆசிரியன் என்ற முறையில் கொள்கை முற்றும் என்னுடையதாகவே பெற்று அவன் வெளி வருவான்.

"ஊழியன்" முதன் முறை நிறுத்தப்பட்டது 1930-ம் ஆண்டில். அப்போது நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் காரணமாக "ஊழியன்" ஜாமீன் கேட்கப்பட்டான்; தேசியப்பத்திரிகைகள் ஜாமீன்கட்டுதலாகாது என்ற காங்கிரஸ் தீர்மானத்தை யொட்டி அப்போது ஓய்வெடுத்துக் கொண்டான். அவசரச் சட்டம் ரத்தானவுடன் திரும்ப உடனே தோன்றினான். இரண்டாவது முறை நிறுத்தப்பெற்றது 1932-ம் ஆண்டில். சட்ட மறுப்புச் செய்து 1932 ஜனவரியில் யான் சிறைப்பட்டேன். அதனால் 'ஊழியன்' நின்றான். ஓராண்டுத் தண்டனை முடிந்து நான் வெளிப்போந்ததும் டிசம்பர் மாதம் திரும்ப "ஊழியன்" வெளியானான். ஆறு மாதங்கள் வெளிப் போந்தபின் நிற்கும் படியான அவசியம் ஏற்பட்டது. காரணம் பெரும் பொருள் நட்டமே. அதற்கிடையில் இரண்டாயிரம் ரூபாய் ஜாமீனும் கட்டியிருந்தான்.

'ஊழியன்' இன்றையத் தினம் புதிய கம்பெனியின் ஆதரவில் அழகிய முறையில் சித்திரப் படங்கள் பல தாங்கி வெளி வருகின்றான். புதிய கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்த அநுபவமும் பொறுப்பும் கம்பெனியின் நலத்தில் நாட்டமும் கொண்டவர்களாதலால் "ஊழியன்" பொருளாதாரச் செழிப்பைப் பெரிதும் பெற்று உரமாக வளர்ந்தோங்கி இனி இடைமறிக்கப்படாமல் என்றும் நின்று நிலவுவான் என உறுதியாக நம்ப இடமிருக்கிறது.

"ஊழியன்" முன்னே காரைகுடியினின்றும் வந்து கொண்டிருந்தான். இன்று முதல் சென்னையைத் தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றான். பத்திரிகை வெளியீட்டிற்குப் பலவித வசதி



ஜுலை 4-ந் தேதி காலை காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டின் பொதுக் காரியதரிசியாகிய ஸ்ரீ புலபாய் தேசாய் சென்னை வந்திறங்கினார். பலர் அன்புடன் வரவேற்றார்கள். படத்தின் நடுவில் ஸ்ரீ தேசாயும் அவரது குமாரியும் காணப்படுகின்றனர். —P. P. B.

களும் அமைந்தது சென்னை நகரம் என்பது அனைவரும் அறிந்ததே. "ஊழிய"னைச் சென்னைக்குக் கொணர்ந்து நடாத்தித் தமிழ் நாடு முழுமைக்கும் ஊழியம் புரிந்துயரவேண்டும் என்ற எண்ணம் எனக்கு நீண்ட நாட்களாக உண்டு. அவ்வெண்ணம் இன்று கைகூடுகிறது. "ஊழிய"னுக்கு, தேசியமும் சீர்திருத்தமுமே இரண்டு கண்கள். "ஊழிய"னைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த "ஊழிய"னைக் கருதி அவன் ஊழியத்தைப் பயன்படுத்திக்கொண்டு "ஊழிய"னுக்கு ஊக்க மளிப்பார்கள் என நம்புகிறேன். 'ஊழியன்' அன்பர் அனைவர்க்கும் வணக்கம்.

வாழிய உலகம்! வாழிய உயிர்கள்!
வாழிய நல்லறம் யாவும்!

கோழைமை ஒழிக! ஏழைமை அழிக!
கொலைபுலை யாதிய வீழ்க!

ஆழியும் மதியும் இரவியுள் வரையும்
அன்னையார் அரசுவீற் றிருக்க!

ஊழியம் சிறக்க! "ஊழியன்" வளர்க!
ஓங்குக உயருக தமிழே!

ராய. சொக்கலிங்கன்.

வெடிக்குண்டு

வெடிக்குண்டு வீசுதல் என்பது எவ்விடத்தும் பேடித்தனமான செய்கையாகும். ஒரு மனிதனை மறைவிலிருந்து வெடிக்குண்டு வீசிக்கொல்ல முயற்சிப்பது பெரிய காரியமா? எதிரியை அடக்குதற்கு இம்முறையைக் கையாள்தல் அருவருக்கத்தக்கது. இம்முயற்சி அரசியலில் அடிக்கடி நடப்பதுண்டு. நடக்கும் போதெல்லாம் நாட்டிலுள்ள அறிஞர் அனைவரும் ஒரே முகமாகக் கண்டித்தும் வந்திருக்கின்றனர். நேரில் எதிர்க்க முடியாதவனன்றோ எங்கேனும் ஒதுங்கிக் கூட்டத்துள் நின்று இப்படிச் செய்வான். கூட்டத்துள் மூலையில் நின்று கற்களை வீசும் சிறு செய்கைக்கும் இதற்கும் எறிதல் அளவில் என்ன வேறுபாடு? வெடிக்குண்டு எறிந்ததால் மட்டும் ஒருவன் வீரனாகி விட முடியுமா? எதிர்வாதம் செய்ய முடியா நிலையில் பின் புறமாக நின்று அடித்து விட்டு ஓடும் கோழைச் செயல் போன்றதல்லவா சும்மா செல்லும் ஒருவர் மீது ஒளிந்து நின்று வெடிக்குண்டு வீசுவது?

இப்போது வெடிக்குண்டு வீசுதல் கொள்கை மாறுபாட்டிலும் புகுந்திருக்கின்றது. ஒருவன் கொள்கை பிடிக்கவில்லையானால் மாறுபட்டவன் அவனை வெடிக்குண்டை வீசிக் கொன்று போட்டு விட வேண்டியது. இம்முறை கையாளப்படுமானால் அறிவு நூல்களையெல்லாம் கட்டி வைத்து விடலாம்; ஆராய்ச்சி எதும் வேண்டுவதில்லை; வெடிக்குண்டு வீச மட்டும் பழகிக் கொண்டால் போதும். இந்த நிலைமைக்கு நாடு வந்தது மிகவும் வருந்தத்தக்கது. பொதுவாக வெடிக்குண்டு வீச்சு இழிவான தென்பது ஒரு புறமிருக்க.

பூனா நகரத்தில் நடந்த நிகழ்ச்சியை நோக்கினால் மனம் வெடித்துப் போகும். இப்படியும் ஒரு மனிதப்பதர் இருக்கின்றனா? வெடிக்குண்டை யார் மீது அம் மாபாவி எறிந்தான்? பிடித்துத் தள்ளினால் விழக் கூடிய ஒரு சிறிய உடலின் மீதா? அன்று! அன்று!! பல கோடி மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒரு பொருளின் மீது—கருணைக்கடலின் மீது—அன்பின் உறைவிடத்தின் மீது—அறத்தின் ஆணிவேர் மீது—பொறுமைப் பெருமலையின் மீதல்லவா பாதகன் வெடிக்குண்டை வீசினான்!

காந்திமீது வெடிக்குண்டை ஒருவன் வீசினான் என்று எழுதவும் கை நடுங்குகின்றது; எண்ணவும் மனம் கூசுகின்றது! இத்தகைய அரக்கன் ஒருவனையும் உலகமாதா ஈன்றாளா? காந்தியென்ற சொல்லைக் கேட்டால், கொலைக்களத்தே வாளாயுதத்தை உருவி எதிரியின் கழுத்துக்கு மிகவும் அணுகிய கை, வாளை நழுவ விட்டுச் சோர்ந்து செயலற்று விழும் என்று சொல்லலாம். அத்துணைக் கருணையை யாரிடத்தும் காட்டும் அன்பு வெள்ளம் பரவிய ஒரு கூட்டை—இந்நாள் எவ்வளவு கற்ப கோடிகாலம் உலகில் இருந்தாலும் சலியாது போற்றக் கூடிய பொருள் ஒன்று இருக்குமானால் அது எதுவோ அதை—இருபதாம் நூற்றாண்டின் உலகத்தின் முடிமணியைத் கொலைக்க நினைத்தான் ஒருவன் என்பது மனித உருவந்தாங்கியவருள் எத்தகையாரெல்லாம் உலகில் இருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றதே யன்றி வேறன்று! அந்தோ! காட்டில் வாழும் கடும்புலி கூடக் காந்தியைக் கொல்ல நினைக்காதே.

காந்தியைக் கொன்று விட்டால் தம் கட்சி வென்று விடும் என்று கருதிய மனிதனின் அறியாமை மிகப் பெரிது. இந் நிகழ்ச்சியால் காந்தியடிகட்கு எதும் நேர்ந்திருக்குமேல் அடிகள் கட்சி அப்போழுதே வென்று விட்ட தென்பது நிச்சயம். இன்னோரன்ன அச்சுறுத்தலுக்கஞ்சி அடிகள் கொண்ட கொள்கையை விடுத்து வாளா இருந்து விடப்போகின்றாரா? இதுபற்றி அடிகள் விடுத்த அறிக்கை பொன்னேடு செய்து இரத்தினம் பதிக்கத்தக்கது.

காந்தியடிகட்கு இவ் உலகில் இன்னும் பன்னாள் எப்படியாவது வாழ வேண்டும் என்ற ஆசை கிடையாது. அவருக்கு அந்த ஆசை சிறிதும் இருக்க நியாயமில்லை. இந்த உலகத்தில் எந்த மனிதனும் நாட்டாத பெரும் புகழைக் காந்தி நாட்டி விட்டார். உண்மையில் இவ் உலகம் தவிர நாமறியாத வேறு உலகங்கள் எங்கும் இருக்குமானால் அங்கும் இப்போது காந்தியின் புகழ்தான் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் என்று நம்பலாம். அதற்கு மேல் கீர்த்தியை நிலைநாட்ட இடமில்லை யென்று சொல்லத்தக்க அளவுக்கு வந்து விட்ட ஒருவருக்கு இனி உலக வாழ்வு தேவையில்லைதான்; தவிர இயேசு நாதரைப்போல் கொள்கைக்காக மாண்டார் காந்தி என்று சரித்திரம் கூறப்படுமானால் அது முடியாப் பெரும் புகழாகும். அதனால் அவர் கொள்கை நன்கு செழித்தோங்கி உலகம் முழுமையும் மூலை முடுக்குகளெல்லாம் பரவி வேரூன்றி நிற்கும் என்பது கூட நிச்சயமே. ஆனால்,

உலகம் அப் பெரியாரை இழக்கத் தயாராகவில்லை. எவ்வளவு காலம் அவர் நம்மிடை இருக்க முடியுமோ அவ்வளவு காலமும் அவரை வைத்திருக்க நாம் விரும்புகிறோம்! அருமையாகக் கிடைத்த பெறற்கரிய மாணிக்கத்தை இழக்க யாரே சம்மதிப்பார்! வெடிக்குண்டுக்குத் தப்பிய காந்தியடிகள் பன்னெடு நாள் வாழ இறையருள்வதாக!

இடி முழக்கம்

அடுத்த வைசிராய்

ஒரு வைசிராய் தம் காலம் முடிந்து போவதற்குச் சில மாதங்களிருக்கும் போதே அடுத்தபடியாக வரப்போகிறவர் யார் என்பது பற்றிப் பல ஜோசியங்கள் கிளம்புவது இயல்பு. அதே போல இப்போது லார்டு வில்லிங்டனுக்குப் பின்பு வரப்போகிறவரைப் பற்றி லண்டனில் பேச்சு நடைபெறுகிறதாம். பற்பல தரத்தினர் பற்பலவைப் பற்றிக் கூறினாலும், அரசியல் நுட்பம் கொஞ்சமதிகம் தெரிந்தோர் லார்டு லின் லித்கௌ என்பவரே வரக்கூடுமென்று உறுதியாகக் கூறுகின்றனர். பெரும்பான்மையும் இந்த ஜோசியம் மெய்யாகுமென்று நம்பலாம். ஏனெனில், அவர் வெள்ளையறிக்கையை ஆராயும் பார்லிமெண்டரிக் கமிட்டியின் தற்காலத் தலைவரா யிருக்கிறார்; ஆதலால் அவருக்கு இந்தியாவைப் பற்றிக் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்திருக்கக்கூடும். அன்றியும் சமீபத்தில் அவ்வறிக்கையில் சில மாறுதல்கள் ஏற்படுத்தப்படப் போவதாக வதந்தியுலாவுவதால் அவரே அறிக்கையை அமுல் நடத்த வருவது பொருத்தமானதாக விருக்கலாமல்லவா? இந்த ஜோசியத்தை இங்கிலாந்து அரசியல் நுட்பம் தெரிந்த சர்ச்சிலின் புதல்வர் ரான்டால்பும் உறுதிப்படுத்திக் கூறுகிறாராம். உண்மை நியமனம் எப்படியானாலும் சரி, காங்கிரஸ்காரர்கள் சட்டமறுப்பைக் கைவிட்டுச் சட்டசபைகளில் கலந்துகொள்ள முயல்வதால், எதிர்காலத்தில் வைசிராய் பதவி ஏற்பவர் பொறுப்பு அதிகமாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை.

சட்ட சபை நுழைவு

பாட்னாவில் கூடிய தலைவர்கள் மகாநாடு சட்ட சபைகட்குக் காங்கிரஸ்காரர்கள் செல்வதில் ஆக்ஷேபனையில்லை யென்று தீர்மானித்திருப்பதை நேயர்கள் அறிந்திருக்கலாம். இது காறும் சட்டசபைப்பகிஷ்காரம் செய்துவந்த காங்கிரஸ்காரர்கள் இப்போது ஏன் அதில் இடம் பெற விரும்புகின்றனர் என்றால் சட்டசபை மூலமாக அவர்கள் பெரிய நன்மைகளை அடைந்து விடலாம் என்றெண்ணியல்ல. ஸ்ரீ பிரகாசம் டில்லியில் கூறிய மாதிரி இன்று சட்டசபைகள் அடக்குமுறை யுற்பத்திச் சாலையாகவும், பயங்கர ஆட்சியின் விளை நிலமாகவும், தேசநல மழிக்கும் ரங்கமாகவு மாகிவிட்டன. ஆகவே அவைகளைக் கைப்பற்றி, நன்மை செய்யாமற் போனாலும், தீமை வாராமலாவது காக்கலாமென்று நினைக்கின்றார்கள் காங்கிரஸ்காரர். இந்தக் கருத்தை நிறைவேற்றிக் கொடுப்பதில் கனணுங் கருத்துமா யிருக்கவேண்டுவது தேச மக்கள் கடமையாகும். சொத்துச்சுகங்களையும் பெண்டு பிள்ளைகளையும் விட்டு (தேசநலத்திற்காகச்) சிறைவாழ்வு வாழ் ந்தார்கள் காங்கிரஸ்காரர்கள் என்று யார்தான் ஓட்டு மூலம் நன்றி செலு தாதிருப்பார்கள்? நேர்மையாகக் கூற மிடத்து, ஸ்ரீ பிரகாசம் கூறியதுபோ காங்கிரஸ் தோல்வியுற்றால் தேசம்தோ வியுற்றதாகு மென்று ஒவ்வொரு இந் தியனும் நினைப்பது கடமையாகும்.



மகாத்மாவின் அகமதாபாத் கூட்டத்திற்குத் தேசிய கீதத்தை ஒலி பரப்பும் கருவி மூலம் பெண்கள் பாடும் காட்சி. —S. P. B.

எந்நாட் கண்ணி.

ராய. சோ.

வேலூர்ச் சிறையில் பாடப்பட்ட
எந்நாட் கண்ணியில் சில



பாயிரம்.

அறுசீர் விருத்தம்.

சாலிவா கனசகமாண் டாயிரத்தெண்
ணூற்றின்மேற் சார்ந்து நின்ற
நாலினே டொருபத்து நான்கொன்
றேசவில் ஆடி நான்காம் [றுங்
ஏலுநாள் எழில்ராய வேலூர்ச்சீர்ச்
சிறையதனில் எந்நாட் கண்ணி
கோலினன் காரைநகர் ராயசொக்க
லிங்கனுயர் கொள்கை மேவ.

வாய்த்த பெருங்காந்தி மன்னும் அறமுலகில்
பூத்து மணம்வீசிப் பொலியுநாள் எந்நாளோ ? (௧)

வீயாப் புகழோடு மேனாள் உலகாண்ட
தாயார் விலங்கு தகருநாள் எந்நாளோ ? (௨)

சரிநிகராய் உலகதனில் தண்ணளிசேர் நம்மன்னை
அரியணையில் முடிதாங்கி அமருநாள் எந்நாளோ ? (௩)

மண்குளிர எங்கள் மாதா அரசிருக்கக்
கண்குளிரக் கண்டு களிக்குநாள் எந்நாளோ ? (௪)

நாட்டை மறந்துசுய நன்மை தனைநாடிக்
காட்டிக் கொடுப்போர் கண்பெறுநாள் எந்நாளோ ? (௫)

தகவறியா அதிகாரி சாரும் அடிவருடும்
பகதூர்கள் நல்லறிவு படருநாள் எந்நாளோ ? (௬)

புனிதம் அறியாது புல்லடிமை போதுமென்பார்
மனிதர் எனஉலகில் வாழுநாள் எந்நாளோ ? (௭)

ஒன்றறியா அதிகாரி உதைத்தகால் முத்தமிடும்
நன்றறியா மூடரெலாம் நலமுணர்நாள் எந்நாளோ ? (௮)

ஆழி கிடக்குமிந்த அளவிலாப் பேருலகில்
ஏழை அடிமையெலாம் இலவாநாள் எந்நாளோ ? (௯)

வீறோ டரசாளும் வேற்றார்முன் இந்தியர்கள்
ஏறுபோல் பீடுநடை ஏற்குநாள் எந்நாளோ ? (௧௦)

கோடி படைத்தோரும் குடிப்பதற்குக் கூழின்றி
ஓடி யலைவரெனும் ஒன்றறிநாள் எந்நாளோ ? (௧௧)

புலைமைத் தொழில்செயினும் புன்பிறப்பே காரணமாத்
தலைமை பெறவிழைவோர் சாய்ந்தொழிநாள் எந்நாளோ ? (௧௨)

சாதியால் தீண்டாதார் என்னவொரு சாராரை
வாதிக்கும் மெய்யறியார் மதிபெறுநாள் எந்நாளோ ? (௧௩)

பழைய வழக்கமெனும் பகுத்தறிவில் செய்கைகளைக்
குழியில் புதைத்தழுந்தக் கோதறுநாள் எந்நாளோ ? (௧௪)

பித்துக்கொண் டொப்புயர்வில் பெண்மை தனைப்பழிப்போர்
செத்தஇடம் புல்முளைக்கச் செய்யுநாள் எந்நாளோ ? (௧௫)

காதல் புரியிருவர் கருத்தை இடைதடுக்கும்
சாதி சமயமெலாம் தகர்ந்திடுநாள் எந்நாளோ ? (௧௬)

குதலைச் சிறுமியரைக் கோதில் நலங்கெடுத்து
விதவைப் பெயர்தருவோர் வீழுநாள் எந்நாளோ ? (௧௭)

எனக்குத் தமிழ்வாரா தென்றுரைக்கும் புன்றமிழர்
இனித்த தமிழ்பேசி எழிலுறுநாள் எந்நாளோ ? (௧௮)

தூண்டும் அறியாமைத் தொடரான புன்மையெலாம்
மாண்டு மடிந்தழிந்து மண்ணுறுநாள் எந்நாளோ ? (௧௯)

உலகம் செழித்தோங்கி உயர்ந்த அறம்வளர்ந்து
கலைகள் கனிநிரம்பக் காணுநாள் எந்நாளோ ? (௨௦)

புராண விநோதம்

(வைசம்பாயனன்)

பிரமா என்ற படைப்புக் கடவுள் தன் மனைவியாகிய சரஸ்வதி என்ற கலைக் கடவுளைத் தன் நாவில் வைத்துக் கொண்டிருக்கிறான் என்பது புராணம்.

ஒரு பெண்ணை, ஓயாமல்—சதா சர்வ காலமும்—இராப் பகலாக—உண்ணும் போதும் உறங்கும் போதும் கூட—ஒரு மனிதன் நாக்கிலேயே வைத்துக்கொண்டிருப்பது எப்படி? நாக்கின் அகலம் கனம் முதலியவைதான் என்ன! நாக்கு வாய்க்கு வெளியில் ஒரு ஆள் உட்கார்ந்திருக்கத் தக்க மாதிரியில் தொங்கும் நாற்காலி போல் நீட்டிக்கொண்டிருக்குமா! இது விநோதம்.

உலகத்தில் ஒருவன் எல்லாரையும் விட மனைவியை அதிகமாக நேசிக்கலாம். எனவே இடையறாது தன் காதலியைப் பற்றியே நாவால் பேசிக்கொண்டிருக்கலாம். அப்படிக் காதலி புகழையே பேசிக்கொண்டிருந்திருக்கலாம் பிரமா; ஆனால் அவன் நாவில் வைத்துக் கொண்டிருக்கின்றான் என்று கூறப்பட்டதாகக் கொள்ளலாமா? அப்படியானால் 'பெண் பித்தன்; அவனுக்கு இதுதானா வேலை!' என்று கேட்பீர்கள்!

* * *

அப்படியேதான் முப்பெருங் கடவுளர்களில் அவன் போக எஞ்சிய இருவர்களிலும். படைப்புக் கடவுள் நாவில் வைத்தால், காப்புக் கடவுள் என்றும் அவன் தந்தை யென்றும் சாற்றப்படும் விஷ்ணு மூர்த்தி மகனுக்கு இளைத்தவரா? அவர் மார்பில் வைத்துக் கொண்டாராம் மனைவியை, மகா கண்டியைப் போல். அவர் மைத்துனராகிய இன்னொரு கடவுளின் உடம்பு முழுமையும் ஒரு பாதியில் ஒரு பச்சைப் பெண்ணும்; தலையின் மேல் வேறொரு பெண்ணை அவர் சுமந்து கொண்டிருக்கிறாராம்.

பெண்கள் மீது எவ்வளவு தான் இவர்களுக்குப் பிரேமை யிருந்தாலும் எப்பொழுதும் மார்பிலும் உடம்பிலும் தலையிலும் தாங்கிக் கொண்டே யிருப்பதென்பது முடியாத காரியம். எனவே மார்பில் வைத்துக் கொண்டார் என்றால் என்றும் மறவாமல் மனதில் இருத்திக் கொண்டார் என்றும், உடம்பில் ஒரு பாதியில் இருத்தினார் என்பதற்கு இணை பிரியாது வாழ்ந்தார் என்றும் தலை மீது கொண்டார் என்பதற்கு எல்லாவற்றிலும் மேலான ஒரு இடத்தை அளித்தார் என்றும் கொள்ளுதல் பொருந்தலாம். இருக்கட்டுமையா, உடம்பில் ஒன்று; தலையில் என் இன்னொன்று என்று கேட்டு விடாதீர்கள். போனால் போகிறது.

* * *

தலைபத்து; கை யிருபது; கால் இரண்டு; உடம்பு ஒன்று; இப்படி ஒரு அரக்கன். இவன் பெயர் இராவணன். இவன்தான் இராமாயணத்தில் எதிர்க் கட்சித் தலைவன். இந்த மலைபோன்ற மேனியுடைய இயற்கைக்கு மாறான பேரரக்கன், இரண்டு கைகள் ஒரே ஒரு தலை, சிறிய உருவம்படைத்த ஒரு மெல்லிய பெண்ணை இன்பம் நுகர விரும்பினானும். இது விநோதமல்லவா ?

* * *

அவன் தம்பியாம் ஒருவன்; அவன் தொடர்ந்து ஆறுமாதங்கள் தூங்கித் தொலைப்பானும். அவனைப் பற்றிய வரைப் பஞ்ச காலத்தில் ஆறுமாதச் சாப்பட்டிற்குக் கவலையில்லை. ஆனால் எழுந்தவுடன், "ஆறுநூறு சகடத்தயிரும், நூறு நூறு குடங்களும்" வேண்டுமாமே. அறுநூறு வண்டி சோறும் பதினயிரம் குடம் கள்ளும்! இவற்றிற்கு எங்குபோவது? நல்ல வேளை! அவன் இப்பொழுது இல்லாது தொலைந்தான்.

* * *

தையற்காரர்களைப் பரிட்சை பார்ப்பதற்கு இராவணன் இப்போது இருப்பானால் சவுகரியமாக இருக்கும். ஒரு உடலுக்கு இருபது கைகள் வைத்துத் தைப்பது சிரமந்தான். ஆனால், நான்கு கை வக்கீல்களுக்குச் சட்டை தைத்துப் பழகிய பட்டணத்துத் தையற்காரர்களுக்குக் கொஞ்சம் எளிதாக இருக்கலாம். இராவணன் இப்போது இல்லையாதலால் அதைப்பற்றிப் பேசி என்ன பயன் ?

* * *

'வீமன் ஆயிரம் யானைப் பலமுள்ளவன்' என்று வியாசர் கூறுகிறார். ஆயிரம் யானைப் பலத்தை ஒரு மனிதன் பெற்றிருந்தான் என்பது விநோதமே. அதற்கு அதிகப் பலம் உள்ளவன் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். இதை நமது கவியரசர் பாரதியார் "கரியோர் ஆயிரத்தின்—வலி, காட்டிடுவோன் என்று அக்கவிஞர்பிரான், பெரியோன் வேதமுனி—அன்று, பேசிடும்படி திகழ் தோள்வலியான்." என்று தமது பாஞ்சாலி சபதத்தில் அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

* * *


கார்த்த வீரியார்ச்சுனன் என்று ஒருவன் இருந்தானும் முன்பு. அவன் இப்போது இல்லாமற் போனதில் எனக்கு உண்மையில் மிகவும் வருத்தம். ஏன்? அவனுக்குத் தலை ஆயிரம் அல்லவா? அவனுடைய அழகான ஆயிரம் தலைகளிலும் வெளுப்பான காந்தி குல்லாய்களை வரிசையாகப் போட்டு, காந்தி குல்லாய்களைக் கண்டு மருளும் அதிகாரிகள் முன்பு அவனை நிறுத்தி ஆனந்தப்பட முடியாமற் போய்விட்டதல்லவா?

* * *

தசரதனுக்குக் காமக்கிழத்தி அறுபதினாயிரமாம்! அடபாவி! ஏன் அவனுக்கு இவ்வளவு கேடு! தவிர அரண்மனையில் மூன்று மனைவிகளாம்! சாகப் போகும் கிழ வயதிற் கூடக் கைகேயியோடு கொஞ்சி விளையாடினானும்! அவள் மையல் காரணமாகவே கண்மணியனைய வள்ளலைக் காட்டிற்கு ஓட்டினானும்; நன்றாக இருக்கிறது தசரதன் பெண்பித்து!

* * *

பாரதத்தில் ஒரு மன்னன் தன் மகனுக்குத் தன்னுடைய முதுமையைக் கொடுத்து அவனுடைய இளமையைத் தான் வாங்கிக் கொண்டு கண்டபடி இன்பம் நுகர்ந்தானும்! இளமை என்பது கடையில் மலிவாக வாங்கக் கூடிய கத்தரிக்காய் போலும்!



இலக்கியப்பகுதி

கலைமான் வினுதல்.

ராய. சொ.

'கலைமான் வினுதல்' என்பது பண்டைக் காலந் தொட்டு இலக்கியங்களுள் போந்த ஓர் அகப்பொருள் துறை. 'கலைமான் வினுதல்' என்பதற்கு 'மானைக் கேட்டல்' என்பது பொருள். உரைத்தக்க பொருளை உள்ளே அடக்கிக் கொண்டிருப்பது அகப்பொருள். துறையென்பது வழியாகும். துறைகள் பலவற்றுள் 'மான் வினுதல்' ஒன்று. துறைகளையெல்லாம் பெரும்பான்மை 'கட்டளைக் கலித்துறை' என்னும் பாவடிவாகவே பாடுவது மரபாக இருந்திருக்கிறது. துறைகள்கூறும் இன்பப் பொருள் அமைந்த பாக்கட்குப் பொருத்தமுடையது கட்டளைக் கலித்துறையே என்பதைப் 'பா'ச்சுவை கண்ட பாவலர் மறுக்கமாட்டார். பாவகைகளுள் நுணுகிய கணக்குக் குட்பட்டது கட்டளைக் கலித்துறை. கட்டளை என்பதற்கே அளவு என்றன்றோ பொருள்? யாப்பிலக்கணத்தை இங்கு விரித்தல் என்கருத்தன்று. ஆதலின் அது நிற்கட்டும்.

மக்கள் உள்ளத்தை இன்பக்கடலாட்டுவது துறைப்பாக்களே. திருக்குறள் இன்பப் பாலைப் பருகிச் சுவையறியும் மனிதன் அப்பெருங் கடலைவிட்டகல ஒரு நாளும் ஒருப்படான். அத்துணை அழகும் நுணுக்கமும் அருமையும் கொண்டது அப்பகுதி. அவையனைத்தும் துறைப்பாக்களே. இறைவன் அடியார்கள் பாடிய துறைப்பாக்கள் அநந்தம். அதற்கு நாலாயிரத்தில் பல பாக்களும் திருக்கோவையாரும் பெருஞ் சான்று. துறைப்பாக்களில் பொதிந்து கிடக்கும்இனிமையைஅகக்கண்முன்னே கொணர்ந்து காட்டினுல் அப்பொழுதே கரையிலா ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைக்காதார் யாரே யிருக்கமுடியும்? ஈண்டுக் கலைமான் வினுதல் என்னும் துறையிற் புகலாம்.

ஓர் மனிதன் தன்னுடைக் காதற் தனியை நாடி வருகின்றுன். அம்மடமான் ஓரிடத்து மெல்லியலார் தனிக்குழுவினுள் இருக்கின்றுள். பெண்களே மல்கிய அப் பெருங் கூட்டத்துள் அம் மனிதன் நுழைவதெப்படி? ஆண்டுப் புகவில்லையாலுல் தன் காதல் மானைக் காணமுடியாது. தன் காதற்குரியாள் இருக்குமிடம் அறிந்தும் அவள் காதலைப் பருக ஏங்கிநிற்கும் கண்களை வஞ்சித்துத் தன் உயிரினின்றும் எழுந்த பேராவாவை அடிக்கிக் கொண்டு காதலியைக் காணுது போக அவன் மனம் யாங்ஙனம் ஒருப்படும்? எனவே நங்கையர் கூட்டத்துள் நுழைய ஒரு வழியைக் காண்கின்றுன் அவன். முரட்டுத்தனமாகப் பெண்கள் கூட்டத்துள் மடமடவென்று நுழையும் அநாகரிகனன்று அம்மனிதன். ஆதலின் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட—ஆண்டுள்ள மற்றைப் பெண்களின் கண்களையெல்லாம் வென்ற மருட்சிக் கண் கொண்ட—தன்னுடைக் களைகற்ற முத்தத்தைப் பெறவல்ல— எழில் மிக்க காதற் கலைமான், மாட்சி மிக்க மாதரார் வைகும் தேன் சொட்டும் பூஞ்சோலையுள் புகுந்து விட்டதாகப் புகன்று, அம்மானை வேண்டி அனங்கனூர் ஆயத்துள் சேர்ந்து விடுகிறுன். ஆண்டுள்ளாரிடம் தன் காதற்குரிய கலைமானை வினவி நிற்கின்றுன். இத்துணை விரிந்த கருத்தமைந்த சிறந்த அகப் பொருளை உள்ளடக்கி ஐந்து சீர் கொண்ட—ஒற்றெழுத்துக்களைத் தள்ளிப் பதினறு, அல்லது பதினேழு எழுத்துக்களைக்கொண்ட, நான்கு அடிப் பாவால்பாடும் துறைப்பாட்டுக்குப் பெயர் "கலைமான் வினுதல்".

பகீரதன் தபாற் பெட்டி

போலீசதிகாரி,
லாகூர்.

ஐயா,

மகாத்மா காந்தி 12-ந் தேதி லாகூருக்கு விஜயம் செய்வது சம்பந்தமாக ராவல் பிண்டியிலுள்ள சநாதனிகள் ஓர் சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அதில் பல விடங்களிலுமுள்ள சநாதனிகள் 12-ந் தேதி அங்கு கூடவேண்டு மென்றும், ஆதி இந்து இயக்கத்தைக் கண்டித்து ஆரவாரம் செய்யவேண்டு மென்றும் கேட்டிருக்கிறார்கள். இச்சுற்றறிக்கையைப் பூனா சம்பவத்தோடு இணைத்துப் பார்த்தால் என்னென்னவோ சந்தேகங்கள் வருகின்றன. வெளியூரிலிருந்து விருந்துக்கு ஆள் தேடுவதனால், ராவல்பிண்டியிலுள்ளவர்கட்குப் போதுமானபடிக் கூச்சல்போடத் தெரியாதென்று நினைப்பதா அல்லது தொண்டை கம்மி யிருக்கிறதென்று கருதுவதா வென்று தெரியவில்லை. வெடிக் குண்டியோசைக்கே கலங்காத மகாத்மாஜீ சநாதனிகள் ஓசைக்கு நடுங்க மாட்டாரென்றாலும் ஆளதிகப்படும்போது பயந்தான். பைத்தியக்காரர்கள் சிலரும் இருக்கலாமல்லவா? ஆகவே போலீசார் பொறுப்பு அதிகரிக்கின்றதென்று ஞாபகப்படுத்துகிறேன். காந்திஜீயின் உயிர் இந்தியாவிற்குத் தீபம் போன்றது. அதன் ஒளியினால் சநாதனிகளுட்பட—சங்கராச்சாரியா ருட்பட—வெடிக்குண்டு எறிந்தவனுட்பட—எல்லோரும் கண் திறக்கின்றார்கள். ஆகவே அந்தத் தீபத்தை, (ஊறு ஏற்பட்டு இந்தியா பார்வை இழந்து விடாதபடி) பார்த்துக் கொள்வது உங்கள் கடன்.

பணிவுள்ள,
பகீரதன்.

சநாதனிகள்,
தென்னாடு.

அன்பீர்,

கொள்கைக்காகச் சண்டை யிடுவது வேறு; மனிதத் தன்மை காண்பிப்பது வேறு. தம் கொள்கைக்காகப் போராடு கிறவர் [illegible] விருக்கலாம்; அது மனிதத் தன்மை. அதனை விட்டு நீங்குவதை நல்லோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். காந்திஜீ "என் மீது குண்டெறிந்தவனை—என் மனம் போல் விட்டு விட்டால்—மன்னித்து விடுவேன்" என்றதின் புனிதத் தன்மையுங்கட்கு விளங்கவில்லையா? நீங்கள் உண்மையில் அன்புணர்ச்சியுடையவர்களாக விருந்தால், பூனா வெடிக்குண்டு சம்பவத்தைக் கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கக்கூடாதா? நீங்கள் மௌனமாக விருப்பதைக் கண்டால் என்னென்னதான் நினைக்கக்கூடாது? உங்கள் அண்ணாக்களாகிய வங்காள சநாதனிகள்எவ்வளவு பக்குவமாகப்பூனா நிகழ்ச்சியைக் கண்டித்துத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்! ஒரு தேசத்திலிருக்கும் சநாதனிகளுக்குள்ளேயே மனப்பான்மை மாறி இருந்தால், சநாதன தர்மம் போதிக்கும் நீதியை எப்படி ஒப்புவது; எப்படி அதனுபதேசத்திற்குச் செவி சாய்ப்பது? நீங்கள் காங்கிரசைக் கைப்பற்றி (காப்ச்சர்) செய்துவிட வேண்டுமென்று தருப்பாயுதத்தையும், திருமண் வெடி மருந்தையும், தீர்த்த விஷ நீரையும், கமண்டல வெடிகுண்டையும் தயார் செய்கின்றீர்களே. அப்படிச் செய்யவேண்டுமென்றால் காங்கிரசின் சர்வாதிகாரியா யிருக்கும் காந்திஜீயை ஒரு நாளாவது பணிந்துதானே தீர வேண்டும். இனியாவது ஒரு ஊர் தவறாது, தமிழ் நாடு முழுதும்—எங்காவது இதற்குமுன் தீர்மானம் போட்டிருந்தால் போகட்டும்—கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிப் பகைவனானாலும் இறக்கலாகாதென்னும் மனித தருமத்தையும், 'சத்யம் வத, தர்மம் சர' என்ற சநாதன தர்மத்தையும் செயலில் காண்பிப்பீர்களென்று நம்புகிறேன்.

தர்மம் விரும்பும்,
பகீரதன்.

சர். ஷுஸ்டர்,
லண்டன்.


ஐயா,

இந்தியாவில் நிதி மந்திரியா யிருந்து போன் நீங்கள் சமீபத்தில் அமெரிக்கா சென்று மிஸ்டர். ரூஸ்வெல்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், ரோம் நகர் புகுந்து சீனர் முசோலினியின் நிதிக் கொள்கைகளையும் படிக்கப் போகிறீர்களென்று பத்திரிகையில் ஒரு செய்தி படித்தேன். அது உண்மையானால் தயவு செய்து அமெரிக்கரிடம் நீங்கள் இந்தியாவில் கையாண்ட கொள்கைகளைப் பற்றிக் கூறுதீர்கள். மிஸ்டர் ரூஸ்வெல்ட் தங்கம் முழுமையையும் பொக்கிஷத்தில் நிரப்பி வைப்பதுதான் தேசத்தின் செல்வத்தை ஊக்குமென்று வேலை செய்தவர். ஆனால் நீங்களோ, எத்தனையோ தலைவர்களும் அர்த்த சாஸ்திரப் பண்டிதரும் மன்றாடிக் கேட்டுக் கொண்டபோதும் தங்கத்தை இந்தியாவை விட்டு வெளியேற்றுவதுதான் சிறந்தது என்றீர்கள். ஆதலால் இன்று எத்தனையோ கோடி பெறுமானமுள்ள தங்கம் கப்பலேறிப் போய் விட்டது. ஐயா! இந்தச் செயலைச் செய்திருப்பதாக அமெரிக்கர் தெரிந்தால் என்ன நினைப்பர்? மேலும் எல்லாம் செய்து முடித்துவிட்டுக் கடைசியில் படிக்க வந்திருக்கின்றீர்களென்றால் என்னென்ன சொல்லமாட்டார்கள்? இதே மாதிரி முசோலினி தங்கள் நோக்கத்தைத் தெரிந்தாலும் நகைத்தாலும் நகைக்கலாம். நல்லது நீங்கள் இப்போதாவது படிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டதற்காக வணக்கம். உங்களோடு வரும் உங்கள் புதல்வனாவது இனி உத்தியோகம் கையேற்றால் சரியானபடிச்செய்வாரல்லவா? நன்றி உங்கள் பிரயாணத்திற்கு.

பத்திரிகை படிக்கும்,
பகீரதன்.

லக்ஷ்மணபுரியில் சிக்கனத் திட்டத்தால் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 30 சர்க்கில் இன்ஸ்பெக்டர்கள் மீண்டும் வேலைக் கெடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

என்ன! போலீஸ்காரர்கள் மட்டிலும் திருப்பி எடுக்கப்படுவதால் லக்ஷ்மணபுரியில் பணப் பஞ்சம் தீர்ந்துவிட்டதென்பது கருத்தா? அல்லது......................



ராய. சோ.

"கலைமான் வினுதல்" என்னும் கட்டளைக் கலித்துறை.

கத்தர் உடுத்தியே கைராட்டு
　　உருட்டுநற் காரிகையீர் !
இத்தரை காண உளங்குடி
　　ஏறும்என் மோகனன்வாழ்
சித்தம் குலைப்பது ! நும்கண்
　　பழிப்பது ! சீர்பெறும்என்
முத்தம் பெறுவது ! மொய்கலை
　　மான்இங்கு வந்ததுண்டே !!

மான்நேர் விழியீர் ! மயில்நேர்
　　எழிலீர் ! மலையுறையும்
தேன்நேர் மொழியீர் ! புயல்நேர்
　　குழலீர் ! திருவளரும்
தான்நேர் தமிழ்நேர் இயலீர் !
　　தனியருள் காந்தியெனும்
கோனே தலைவன் எனும்மீர்
　　எனமான் கொடுத்திலிரே !

—'காந்தி கலித்துறை யந்தாதி'



பட்டணத்து வேட்டை.

காபாலி.

மாலை மணி ஆறு முப்பது. சென்னைக் கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் ஜனங்கள் கும்பல் கும்பலாய் உட்கார்ந்திருந்தனர். பரந்து தோற்றிய விரிகடல் துள்ளிக் குதித்து சந்தோஷ ஆதிக்கத்தால் தம் கைகளைக் கரையிலடித்துக் கொண்டிருந்தது. வானத்தைச் செந்நிற மாக்கிநின்ற சூரியன் மறைந்துவிட்டான். இருள் என்னும் மாய வெள்ளம் கீழ்த்திசையிலிருந்து பாய்ந்து கொண்டிருந்தது. அதன் வேகத்தை அறிதற்குப் போட்டாற் போல அநந்தம் மின்சார விளக்குகள் ஆங்காங்கே பிரகாசித்தன. மோட்டார் வண்டிகளும் கண்விழித்து இயங்கலாயின.

இத்தகைய மாலை வேளையில் நான் "லெவல் கிராசிங்" கேட்டுக்குச் சமீபம் நின்று பாக்கப் பாக்க விழித்துக் கொண்டிருந்தேன். சென்னைக்குப் புதியவனாகையினால் கண்ணுக்குத் தெரிந்தவைகளெல்லாம் ஆச்சரியமாகவே தோற்றின. ஆ! நகரில் எத்தனை மாடிகள்! எத்தனை கோபுரங்கள்!! எத்தனை ஸ்தூபிகள்! அவற்றை நோக்கிய போது பகல் முழுதும் வெம்மை கக்கிக் கொண்டிருந்த சூரியன் மாலையில் எங்குபோய் விட்டானென்று கட்டிடங்கள் தம் கழுத்தை நீட்டி நோக்கினவோ என்று எண்ணினேன். உண்மையில் சென்னை நகரம் டாம்பீகம், படாடோபம், ஆர்ப்பாட்டம் முதிர்ந்த ஓர் பட்டணம்தான்!

* * *

மேற் சொல்லியவாறு திகைத்து நின்ற நான், சற்று நேரத்திற்குப் பிறகு "பீச்சை" நோக்கி நடந்தேன். அப்போது என் கண்கள் நாட்டுப்புறத்தான் யானை பார்த்த மாதிரி--அல்லது புதிதாக வந்த ஐரோப்பியன் காந்திஜியைப் பார்ப்பது மாதிரி--அல்லது உடம்பெல்லாம் பட்டை நாமம் தீட்டிய வைணவ பக்த சிகாமணியைச் சிங்கப்பூர்ச் சீனச் சிறுவர்கள் நோக்கிய மாதிரி—ஆச்சரியமும் வியப்பும் துவண்டிருக்கலாம்.

பக்கத்தில் ஏராளமான ஆடவரும் பெண்டிரும் ஐரோப்பிய நாகரிகச் சுழலில் மூழ்கிய ஈரத்துடன் போய்க் கொண்டிருந்தனர். அவர்களைக் காணக் காண எனக்கென்னென்னவோ எண்ணங்கள் வந்தன! அவர்களில் என் கண்ணைப் பறித்தவர்கள் நாசுக்கான ஆடையணிகளணிந்து சென்ற நங்கையர்கள் தாம் என்பதை ஒளியாது கூறவேண்டும். சென்னைப் பெண்கள் நான் காரைக்குடியில் தினந்தினம் பார்க்கும் மங்கையரைப் போன்றவரல்லர்; ஏதோ ஒருவித "டௌன் பாலிஷ்" (பட்டணப் பளப்பளப்பு) இவர்களிடம் வீசிக் கொண்டிருக்கிறது.

ஆதலால், விளக்கொளியில் மயங்கிச் சுற்றிச் சுற்றிவரும் ஈசல் போல் நான்-ஒருவாறு படாடோபமாகவும், டாம்பீகமாகவும், ஆடம்பரமாகவும் உடையுடுத்தியிருந்தாலும் தோற்றத்தில் நாட்டுப்புறத்தான் என்பதை மறைமுகமாகக் காண்பித்துக் கொண்டு—நகர்ந்து சென்றேன். இங்ஙனம் என்னியல்பைக் கூறுவது ஒருவிதமான அபூர்வமாகச் சிலருக்குத் தோன்றலாம். உண்மையைச் சொல்வதில் என்ன பிசகிருக்கிறது? மேலும் காதலுக்கும் பெண்கட்கும் அடிமைப் படாதவர்கள் யாவர்? எவரேனுமிருப்பதாகக்கூறின் அவர்கள் பெண்ணுலகை அறியாதவரென்பதன்றோ பொருள்?


நான், என்னுடன் கடலை நாடி நடந்துக் கொண்டிருந்த நங்கையரில் நாட்டம் வைத்து நாலைந்து கஜதூரம் நடந்ததும், எக்காரணம்பற்றியோ, ஒரு இளம் மங்கையை என்னிரு கண்களும் கட்டிப் பிடித்துக் கொண்டு சுற்றி வர ஆரம்பித்தன. அப்பெண்ணுக்கு 17 அல்லது 18 வயதிருக்கலாம். அவளிடம் நல்ல உடற்கட்டு, நாகரிக முகவெட்டு, நயமான ஆடைக்கட்டு, நலம்திகழும் பகட்டு முதலியவை பொருந்தியிருந்தன. அவள் நிறத்தை மாநிறமென்றுதான் சொல்வோம். அதிகமான நகைகளணிந்

திருக்கவில்லை; இதா பெண்களைவிட எவ்வழியிலும் எழில் மிகுந்தவள் என்றும் இயம்பிவிட இயலாது; எனினும் அவள் பார்வைக்கு, அவள் உடல் குழைக்கும் நயத்துக்கு, அவள் கால்வைக்கும் தினுசுக்கு வயப்பட்டேன். வயப்பட்ட எனக்கும் ஒரு தாமியங்கிக்கும் யாதேனும் வித்யாசம் கூற முடியுமா? சுமார் ஒரு பர்லாங்கு வரையிலும் அவளைப் பின்பற்றினேன். இதற்கிடையில் யார் யார் என்னைக் கவனித்தார்களோ—யார் யார் என் காதல் போன போக்கைப் பார்த்தார்களோ—யார் யார் என் 'லாட்டரி'யை வியந்தார்களோ—எனக்குத் தெரியாது. ஆனல் அந்தச் சுந்தரி என்னை முழுதும் தெரிந்துகொண்டு, இரண்டுமூன்று—இல்லை கொஞ்சம் அதிகமான—பார்வைத் தூண்டில்களை என் மீது வீசி, அத்தூண்டில்களை நான் விழுங்க, அவற்றின் மறுநுனியைப் பிடித்துக் கொண்டு நடந்தாள். நடந்தவள் வழியில் எதிர்ப்பட்ட ஒரு வேர்க்கடலைக் காரனிடம் மெல்லச் சில வார்த்தைகளைச் சொன்னள் என்பதை உணர்ந்தேன். அவ்வார்த்தைகள் எவை யென்று எனக்குத் தெரியா. ஐயோ! நான் அக்கடலை வியாபாரியாகவாவது இருந்தேனு?

* * *

பின் அம்மங்கை யோரிடத்தில் தனியாக உட்கார்ந்தாள். நானும் சிரமப்படாது அவளுக்கெதிராக—கிட்டத்தட்ட 5 கஜ தூரத்தில்—என் தூண்டில் கயிற்றின் நுனி அவள் கையிலன்றோ இருக்கின்றது?—உட்கார்ந்தேன். நாங்கள் உட்கார்ந்த விடம் ரேடியோ ஆம்ப்ளிபயரின் சற்று கீழ்ப்புறமாகும். அங்கு எண்ணிறந்தோர் "போனை" நோக்கிக்கொண்டு சங்கீதத்தைப் பருகிக் கொண்டிருந்தார்கள். ஆனல் நானே போனுக்குப் பதிலாகப் பெண்ணை நோக்கிப் பார்வைத் தேனைப் பருகிக் கொண்டிருந்தேன். அவளும் சலிப்பெய்தாது பார்வையைத் தானம் செய்து என்னைக் காப்பாற்றிக் கொண்டிருந்தாள்.

அப்படியே நான் சிறிது நேரம் உட்கார்ந்திருக்க, மேலே குறிப்பிட்ட வேர்க்கடலைக்காரன் — வேங்கிடசாமி யாம் அவன் பெயர்—அங்கு வந்தான். அவனைக் கண்டபோது—ஆம்—ஏதோவொரு உறவினனைப் பார்த்தாற் போன்றிருந்தது. நான் அவனை அழைத்து அரையணவுக்குக் கடலை கேட்டேன்; அவன் தந்தான்; ஆனல் என் கைக் குட்டையில் கொட்டும்போது ஒன்றிரண்டு முறை என் காதலியைச் சாய லாகப் பார்த்தான். அவளும்—என்னவோ ஒன்றிரண்டு முறை—மெல்லத் தலையை யசைத்தாள் குறிப்பாக!!



பங்கஜமும் வேங்கிடசாமியும் கண்ணினல் தந்தி பேசுகிருர்கள்.

அந்நிலைமை என்னை எவ்வளவு குழப்பியிருக்கும்? எழுகரும் இயற்கையில், என் இருதய நாளத்தை இயக்கி, என்னை எரித்துக்கொண்டிருந்த ஒரு எழிலமுது ஏதோவொரு சாதாரண மனிதனிடம் சைகை காண்பிக்கவா?........ஆ! என் மனம் வேறுபட, நான் துணிச்சல் கொண்டு, அவனிடம், "என்ன ஐயா? அந்தப் பெண் யார்? என்ன சொல்கின்றார்? எந்தத் தெரு? உனக்கு எப்படித் தெரியும்?..........." என்று வினவினேன்.

அதற்கு அவன்:—இல்லை. நீங்கள் அவருக்குக் கொஞ்சமும் அறிமுகமில்லாதவர்களாம்............ஆனலும்....என் ஒளிக்க வேண்டும்—நீங்கள் அவரையே கவனித்துக் கொண்டிருக்கிறீர்களாம். தனியாக வொரு பெண் வந்து விட்டால் இப்படி செய்யலாமா? அவருக்கு அது பற்றி வருத்தம்.

* * *

"வேர்க் கடலைக் காரனுக்கும் அவருக்கும் என்ன உறவு? நான் அவரைக் கவனித்தால் ஏன் ஒரு சாதாரண மனிதனிடம் கூறவேண்டும்? கூறினும்.... ....என்னை முன்னிருந்ததை விட அதிகமாகக் கவனிக்கின்றாரே; ஏன்? வேங்கிடசாமி என் மீது கோபங்கொண்டானென்றல் மெதுவான தொனியில் ஏன் பேசுகின்றான்? மேலும் அப்பெண் என் பார்வையில் வெறுப்புக் கொண்டவரானல் ஏன் என்னை நோக்கியே இருக்கவேண்டும்? ஏன் இருந்த விடத்திலேயே இருக்கவேண்டும்? வேறு, பெண்கள் குழுமி இருக்கும் இடத்திற்கு ஏன் போய் விடலாகாது?" என்று நினைக்கவும் வேங்கிடசாமியிடம் ஏதோவொரு இரகசியமிருக்கிற தென்று தெரிந்து கொண்டேன். ஆதலால் அவனை அழைத்து "என்னையா நான் கேட்ட கேள்விகட்கெல்லாம் பதில் சொல்ல வில்லையே; அவர் யார்?" என்றேன்.

வேங்கிடசாமி:—போஸ்டாபீஸ் சந்தில் 87½ம் நம்பர் வீட்டில் குடியிருக்கிருள். கோவிந்தசாமி நாயுடுவின் புதல்வி பங்கஜம். நல்ல கல்வி கற்றிருக்கிருர்; இன்னும் மணமாகவில்லை; மற்றப்படி ....(சும்மா விருந்தான்).

நான்:—சொல்லையா மேலே..........

வேங்கிடசாமி:— வேறொன்று மில்லை. இருந்தாலும் எனக்கெப்படித் தெரியும்? எனக்குக் கடலை விற்ற பழக்கந்தான்.....

நான்:—ஒளியாமற் சொல்.

வேங்கிட:—தங்களுக்கு என்ன சம்பளம்? எங்கு வேலை பார்க்கிறீர்கள்?.....

நான்:—இதுவா? ....அடடா....... நேரில் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காதோ?

வேங்கிட:—பார்ப்போம்..........


உடன் ஓர் யோசனை தோன்ற "நான் கூறியதாக அவருக்குக் கொஞ்சம் கடலை கொடு. இதோ இந்த ரூபாயைப் பரிசாக வைத்துக் கொள்" என்று கூறி ஒரு ரூபாயை அவன் கூடையில் போட்டேன். அவன் முக மெல்லாம் சந்தோஷத்தால் விகாச மடைய, ஆகாய விமானம் போல் பறந்து சென்று அவர் கையில் நாலைந்து உழக்குக் கடலையைக் கொட்டினான்.—அவன் வாயில் எத்தனையோ வாக்கியங்களும் தோன்றித் தோன்றி மறைந்தன—அது போழ்து அவள் நாணத்துடன் என்னை நோக்கி ஒரு முறை புன்முறுவலும் பூத்தாள். ஆ! நான் அதனை எவ்வளவு பெரிய வரப்பிரசாதமென்று நினைத்திருப்பேன்!

வேங்கிடசாமி சில நிமிஷத்துக்குள் எழுந்து நின்று என்னை நோக்கிப் புன்சிரிப்புக் கொண்டு ஒரு முறை தலையை அசைத்து விட்டு அப்பால் போனான். இவ்வளவுதான்! அவள் மெதுவாக எழுந்து நகரை நோக்கி நடந்தாள். அப்போது மணி ஏழிருக்கலாம். ஜனக்கூட்டத்தில் பகுதி போய் விட்டது; எஞ்சியது புறப்படவிருந்தது. நானும் எழுந்து அவளைப் பின் தொடர்ந்து நடந்தேன். இருவரும் சுமார் அரை மணி நேரம் நடந்ததும் ஜெனரல் போஸ்டாபீசின் சமீபம் ஒரு ரோடை யடைந்தோம். (நகருக்குப் புதியவனான) என்னால் திட்டமாய் என்ன தெருவென்று கூற முடியவில்லை.

* * *

சுமார் 7-30-க்கு அவள் முன்னாடியும் நான் பின்னாடியும் ஒரு வீட்டுக்குள் புகுந்தோம். அவ்வீடு ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தின் ஒரு மூலையிலிருந்தது. அதிலிருந்த அறைகள் மூன்றே. மூன்றும் மின்சார விளக்குகளால் நிழற்றப்பட்டிருந்தன. நான் வீட்டினுட் புகுந்ததும் வெட்க (நாண)மே உருவாயிருந்த அம்மங்கை மேனி குழைத்துக் குனிந்த முகத்துடன் ஒதுங்கி நின்று மூன்றாவது அறையைக் காண்பித்து உள்ளே போகச் சொன்னான். நான் அப் பாம்பொருளின் கட்டளைப்படி யொழுகினேன். ஆ! அவ்வறையோ........மிகவும் சிங்காரமானது! ....நல்ல மேஜையின் இருபுறமும் இரு நாற்காலிகள் போடப்பட்டு, பக்கத்தில் ஒரு சோபாவும் வைக்கப்பட்டு, தாம்பூலம், ஊதுவர்த்தி, 'பிளவர் வேஸ்' முதலியவற்றால் அழகு படுத்தப்பட்டிருந்தது.

நான் அங்கு நுழைந்ததும் நாற்காலியில் உட்கார்ந்தேன். அப்பெண் அடுத்த அறையில் கதவோரம் ஒதுங்கி நின்று ஒரு சோடாப் புட்டியை மேஜைமீது வைத்தாள். ஆ! அவளது ஒய்யாரக்கை என்னிருதயத்தின் இருதயத்தைப் பற்றிப் பிடிப்பது போலிருந்தது. உடனே அடக்க முடியாத உணர்ச்சியுடன் நான் அத்திருக்கரங்களைப் பற்றி "என்ன முதே! நான் உன் வீட்டை நாடி வந்த பின்னரும் நாணமடைவதென்றால்....... எவ்வளவு விஷயங்கள் நாம் பேசிக் கொள்ளவேண்டியிருக்கின்றன!" என்று புலம்பிக்கொண்டே உள்ளே இழுத்தேன். ஆ! என்ன வெற்றி! அப்பூங்கரங்களின் சொந்தக்கார உருவம் அறைக்குள் வந்தது. அது என் உடம்பின் உறவை யனுபவிக்க அஞ்சினாலும் நான் வலிந்திழுத்தேன்; அன்றி ஆழ்ந்தும் நோக்கினேன். அப்போது—என்ன ஆச்சரியம்! அங்கு வந்த உருவம் வேறு! அதன் தோற்றம் வேறு! அதன் பின்புறம் வேங்கடசாமி நின்றான். நான் ஆச்சரியத்துடன் விழிக்க, திடீரென்று விளக்கணைந்தது.



"போதும் போதும் சென்னைக் கடற்கரை."

அதிகம் வியப்புக்கொண்டு எழுந்திருக்க முயன்றேன். உடனே என் கைகள் பிடித்தழுத்தப்பட, என் வாய் மூடப்பட்டது. நான் ஒருவாறு மூச்சுத் திணறினேன்; "உம்ம்ம்" என்று கத்த முயன்றேன். அதற்குள் என் சட்டைப் பைகள் சோதிக்கப்பட்டு "மணிபர்ஸ்" கொள்ளையிடப்பட்டது. நகரத்திற்கு வருவதற்காக நான் அணிந்துகொண்ட சுமார் 500 ரூபாய் பெறுமானமுள்ள மோதிரங்கள் இரண்டும் போயின. பௌண்டன் பேனா, மூக்குக்கண்ணாடி, பூட்ஸ், 'ரிஸ்ட் வாட்ச்' ஆகியவைகளும் அப்புறப்படுத்தப்பட்டன. அவற்றுடன் என் முதுகு கொஞ்ச நேரம் மிருதங்கமாக்கப்பட்டது. கால்கள் இரண்டும் உதை பந்தாகவுமாயின. இத்தனையும் 10 நிமிஷத்தில் நடைபெற, நான் ஒரே தள்ளாக வெளிவாயிலுக்குக் கொணர்ந்து ரோட்டில் தள்ளப்பட்டேன்....... ஆ! நானடைந்த அவமானத்திற்கு அளவில்லை. என்னை உதைத்தவர்கள் பலர் கடலைக்காரர்களாம். சுற்றுமுற்றும் பாராமல் நெடுக ஓடிவிட்டேன். போதும் போதும் சென்னைக் கடற்கரை என்றாகிவிட்டது. பங்கஜமும் வெங்கிடசாமியும் சேர்ந்துதான் இப்படி என்னை அலங்கோலப்படுத்தியிருக்கவேண்டும். வெங்கிடசாமி கடலை விற்பதின் அந்தரங்கம் இப்போது

விஞ்ஞான அதிசயங்கள்

(நவீனன்)

வயதளக்கும் கருவி

கலிபோர்னிய சர்வ கலாசாலை பண்டிதரான டாக்டர் ராப்லி டி. இவான்ஸ் என்பவர் கற்களின் வயதை நிர்ணயிக்கும் ஒருவிதக் கருவியைக்கண்டு பிடித்திருக்கிறார். அக்கருவியில் ஒரு உலை இருக்கிறது. அதில், பரிசோதிக்கவேண்டிய கற்களைப் போட்டால் உருகி ஆவியாக மாறும். கல் உருகுவதற்குப் பிடிக்கும் நேரத்தைக் கணக்கிட்டால் கல்லின் வயது தெரிந்து விடுமாம். இந்த அபூர்வக் கருவி எதிர்கால ஆராய்ச்சிகட்கு மிகவும் பயன் படுமென்று நிபுணர்கள் குதூகலிக்கின்றனர்.


போரில் விஷக்கிருமிகள்

எதிர்கால யுத்தங்களில் பற்பலவிதப் படைகள் உபயோகிக்கப்பெறப் போவது போல விஷக் கிருமிகளும் உபயோகிக்கப் படலாம். இதனை உணர்ந்து பல ரசாயன சாஸ்திரிகள் தடுக்கும் முறைகளையும் தடை செய்யாமலிருந்து விடத் தகுந்த முறைகளையும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

நோய் பரப்புதற்கு இக் கிருமிகளை மூன்று வகையில் உபயோகப்படுத்தலாம். (1) எதிரிகளின் தேசத்திலுள்ள ஜலாசயங்களில் (நீர் நிலைகளில்) கிருமிகளை கலந்துவிடுவது (2) உடையும் வெடிகுண்டுகளில் ஏராளமான கிருமிகளைப் புகுத்தி எதிரிகளின் தேசத்தில் எறிந்து நோயைப் பரப்பி ஜனங்களை மடியச் செய்வது (3) அக்கிருமிகளைப் பரப்பும் மிருகங்களை எதிரி தேசத்தில் விட்டு விடுவது.

எக்ஸ் ரே தானம்

பண்டைக் காலத்தில் டாக்டர்கள்



நவீன ஜப்பான் மங்கையர். டோக்கியோ நகரில் உல்லாசமாக வழி நடக்கின்றனர். பெண்கள் கால் குழாய்களும், ஸ்வெட்டர்களும் அணியும் வழக்கம் ஜப்பானில் தற்போதுதான் பரவி வருகின்றது.

விளங்கிவிட்டது. பங்கஜமென்கின்ற பெண் அவனது சொந்தக்காரப் பெண். அவளைக் கடற்கரைக்கு உலாவ அனுப்பிவிட்டு அவனும் பின்னடிப் போகின்றான். எவனாவது என் போன்ற பேர்வழிகள் சிக்கினால் கடலை வியாபாரத்தை வேறு விதமாகத் திருப்பி விடுகிறான். நகரில் தாசித் தொழில் ஒழிந்ததின் பிரதித்தொனியாம் இக் கடலை வியாபாரம்.

ஸ்பர்சத்தால் உடம்புக்குள் இன்ன மாதிரி கெடுதி ஏற்பட்டுள்ளது அல்லது இன்ன மாதிரியாகக் குடல் அல்லது எலும்பு அல்லது ஒரு காலை பிசகியிருக்கிறது என்று கூறிவந்தார்கள். அக் கூற்று (நேரடியாகப் பார்த்துச்சொல்லப் பெறாததால்) பெரும்பான்மையாகத் தவறியே வந்தது. இந்தத் தவற்றை நீக்கும்பொருட்டு ஒருவர் ஒரு இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். அதற்குத்தான் எக்ஸ்ரே இயந்திரம் என்று பெயர். இவ்வியந்திரத்திலிருந்து வெளிப்படும் ஒளியில் ஒரு மனிதனை வைத்தால் அவன் உடம்பில் இயற்கைக்கு மாறாக என்னென்ன அமைப்பிருக்கின்றதென்று ஒரு திரையில் தெரியும். உடன் அதனைப் ! புகைப்படமெடுத்துக்கொள்வார்கள். (ஆயிரக் கணக்கில் விலையிருந்த இந்த எக்ஸ் ரே இயந்திரத்தை மிகக் குறைந்த விலைக்கு ஒரு சிறு குழாய் வடிவத்தில் செய்துவிட்டாள் ஒரு பெண். அது ஒருபாலிருக்க) தற்போது ஆங்கில சர்க்கார் வருஷா வருஷம் ஒரு தடவை எந்த மனிதனுக்கும் இலவசமாகப் படம் பிடித்துக் கொடுக்க இசைந்துள்ளார்கள். கிங் ஜார்ஜ் ஆரோக்கிய நிலையத்தின் சூப்பரின்டென்டான டாக்டர் வாட் என்பவர் வருஷா வருஷம் க்ஷய நோயினால் இங்கிலாந்தின் ஒரு பகுதியில் மட்டிலும் 35 ஆயிரம் முதல் 36 ஆயிரம் வரையில் மக்கள் உயிரிழக்கின்றனரென்றும் அத்தகைய மரணமேற்படாமலிருப்பதற்கு அவ்வப்போது எக்ஸ் ரே படம் பிடித்து உடம்பைப் பரிசோதித்து நோயாரம்பமாயிருந்தால் மருந்து சாப்பிட்டுத் தடை செய்துகொள்வது பொருத்தமாக இருக்குமென்றும் மார்பைப் படம் பிடிப்பதில் ஒரு மனிதனுக்கு 10 ஷில்லிங்குக்கு அதிகமாகச் செலவாகி விடாதென்றும் அச்செலவைப் பொறுத்துக் கொள்வது சர்க்காருக்குக் கஷ்டமல்லவென்றும் அபிப்பிராயம் கூறியதனால்தான் மேற்படி ஏற்பாட்டிற்கு சர்க்கார் இசைந்தனர். டாக்டர் வாட் ஒவ்வொரு பாடசாலையிலும் எக்ஸ் ரே கருவிகளமைத்து மாணவர்களைப் பரிசோதிக்க வேண்டுமென்றும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

லண்டனில் டெலிவிஷன் நிலையம்

பல மைல்களுக்கப்பாலிருந்து பேசப்படுவதை நாம் டெலிபோன் மூலம் எளி

தில் கேட்டுக்கொள்வதுபோல, பேசுபவரைப் பார்த்துக்கொள்ளவும் தகுந்த ஒரு தந்தி யமைப்பிற்குத்தான் டெலிவிஷன் என்று பெயர். இதனைக் கண்டுபிடித்தவர் ஸ்ரீ பேர்டு என்ற விஞ்ஞான சாஸ்திரியாம். அவருடைய புதுமை இப்போது லண்டன் வாசிகள் எல்லாருக்கும் உபயோகப்படுமாறு ஓர் பெரிய நிலையம் அமைக்கப்படப் போகிறது. சர்க்கார், அதற்காக, தென்கிழக்கு லண்டனிலிருக்கும் ஸ்படிக மாளிகையை விழுங்கியுள்ளார்கள். தற்போது இம்மாளிகை தமாஷ்களுக்கும் பொழுதுபோக்குக்கும் உபயோகிக்கப்படுகிறது. விடுமுறை நாட்களில் தனவந்தர்கள் பலர் கூடிக்கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்துவார்கள். சுமார் 300 அடிக்கு மேல் இம்மாளிகை உயர்ந்திருக்கிறது. இவ்வளவு உயர்ந்ததும் அழகியதும் வசதியானதுமான மாளிகையை சர்க்கார் கொடுத்திருப்பதால் விஞ்ஞான அறிவு பலபடப் பெருகிவளர இடமுண்டு என்று யூகிக்கின்றார்கள் பலர்.

பறக்கும் மாளிகை

ஜர்மனியில் பிரைட்ரீஷ் ஷாபன் என்ற விடத்தில் ஒரு ஆகாய விமானம் கட்டப்படுகிறது. அதன் பருமனும் சௌகரியமும் மிகப் பிரமாதமாகும். இதுவரையிலும் இத்தகைய விமானமொன்று கட்டப்படவில்லை யென்னலாம். தற்போது வேலை நடந்துகொண்டிருக்கின்ற மாதிரியைப் பார்த்தால் இவ்வருஷத்திலேயே விமானம் கட்டி முடிந்து விடுமென்று சொல்லலாம்.

இவ்விமானத்தில் 25 விஸ்தாரமான காபின் (அறை)கள் இருக்கின்றன. அவற்றில் 50 பேர்களுக்குத் தூங்குவதற்கான எல்லா வசதியுமுண்டு. இரண்டு டெக்குகளும் அவற்றில் சாப்பிடுமிடங்களும் அவற்றோடு எழுதும் அறைகள், வாசிக்கும் அறைகள் முதலியவைகளும் நடுவில் பெரிய ஹாலும் உண்டு. அன்றி, சுருட்டுப் பிடிப்பதற்குத் தனியிடம், சமையல் செய்வதற்குத் தனியிடம், ஆபீஸ் ரூம், விமான வேலைக்காரர்கள் தங்குமிடம் ஆகிய இவைகளு முண்டென்று தெரிகிறது. ஒவ்வொரு பகுதியும் நன்றாகக் கட்டப்படுகிறது. பொதுவாக இதனையோர் பறக்கும் மாளிகை என்று சொல்லலாம்.

நகைக்கும் பெண்

"நகைக்கும் பெண்" என்று ஒரு இயந்திரத்தைக் கட்டியிருக்கிறார்கள். அதில் ஒரு அழகிய பெண்ணின் முகமும் கழுத்தும் (மார்பு வரையிலும்) அவற்றினடியில் ஒரு இயந்திரக் கூண்டுமிருக்கின்றன. கூண்டுக்குள்ளிருக்கும் யந்திரம் வேலை செய்ய ஆரம்பித்ததும், அப்பெண், புன்னகை புரியவோ, நகைக்கவோ, கோபங் கொள்ளவோ, வெறுப்புக் குறியைக் காண்பிக்கவோ செய்வாள். பெரும்பான்மையும் மனிதர் முகத்தில் தோன்றும் குறிகள் யாவும் பார்க்கலாம்.

துப்பாக்கிப் புகைப்படக் கூண்டு

பிரான்சிஸ் எக்ஸ் புஷ்மான் என்ற சினிமா நடிகர் ஒருவிதத் துப்பாக்கியை உபயோகித்து வருகிறார். இதில் துப்பாக்கியும் புகைப்படமெடுக்கும் கூண்டும் இருக்கின்றன. "ட்ரிக"ரை அழுத்தும்போது கூண்டு வேலை செய்ய ஆரம்பித்துப் படம் பிடிக்கின்றது; துப்பாக்கி, குண்டுகளைச் சொரிய ஆரம்பிக்கின்றது. இதனைப் போலீசார் பெரிதும் விரும்புகின்றனர். ஏனெனில் ஒரு கைதி, அல்லது குற்றவாளி யோட ஆரம்பிக்கும்போது சுட்டால், ஒருக்கால் துப்பாக்கி தவறிவிட்டாலும், ஓடுபவனின் செயல் முழுதும் படம் பிடித்துவிடப்படும். இதே போன்று வேட்டைக்காரரும் இத்துப்பாக்கியை வேண்டுகின்றனர். ஒரு மிருகத்தை அவர்கள் குறி வைத்துச் சுட்டால் அந்த நிமிஷம் முதல் துப்பாக்கி எடுக்கப்படுவது வரையிலுமுள்ள சகல நிகழ்ச்சிகளும் புகைப்படமாக அமைந்து விடும். தற்போது கிழப் பருவமடைந்திருக்கும் புஷ்மான் பெரிய அதிசயத்தை இயற்றிவிட்டார் துப்பாக்கி உலகில்.

இத்தாலியில், சர்க்கார், பாடசாலைகட்குப் போதிய அளவு ஆகாயத் தந்தி இயந்திரங்களைக் கொடுத்து அவற்றின் மூலம் கல்வி போதித்து வர ஏற்பாடு செய்கிறார்கள். நாளுக்கு நாள் பொது ஜனங்களும் அங்கு அதிகமாக ஆகாயத் தந்தியை உபயோகிக்கும் வழக்கம் பெருகி வருகிறது.

உண்மை மதம் எது?

உலகில் ஓர் உத்தமமான மதம் ஏற்படப்போவதாயின், அம்மதம் எல்லாருடைய மனங்களையும் போஷிக்கத் தகுந்த அளவில் விஸ்தார முடையதாகவும் பரந்ததாகவு மிருக்கவேண்டும். பெரிய வேதாந்திகட்கு அது வேதாந்த பலத்தைக் கொடுக்கவேண்டும்; பக்தர்கட்குப் பக்தியை வாரிச் சொரியவேண்டும்; சடங்குகளை நயப்பவர்கட்கு விக்ரகாராதனை ஊட்டவல்ல எல்லா ஆச்சரியங்களையும் நல்கவேண்டும். புலவர்கட்கு, தேவைப்பட்ட கற்பனைசக்தியை வழங்கவேண்டும்; இங்ஙனமே பிற தேவைகளையும் உள்ளடக்கியதாயிருத்தல் வேண்டும். அத்தகைய ஓர் பரந்த மதத்தை உற்பத்தி செய்வதற்கு, நாம் ஆதியில் மதங்கள் தலையெடுக்க ஆரம்பித்த காலத்திற்குச் சென்று அவற்றை ஆராயவேண்டும். அவ்வாறு செய்வதனால் நமது மனோ நிலைமை "ஏற்றுக்கொள்வது" என்பதா யிருக்குமே யன்றி, நிராகரித்த லென்பதாயிருக்கவே இருக்காது. நான் எம்மதமும் நிசழட்டும் என்னும் விட்டுக்கொடுத்தல் மனப்பான்மையை ஒத்துக்கொள்ளமாட்டேன். ஏன் நான் விட்டுக் கொடுக்கவேண்டும்? விட்டுக் கொடுக்கிறேனென்பதனால் 'நீயொரு தவறு செய்கிறாய், அதனை நான் பொறுத்துக்கொண்டு உன்னை உயிர் வாழ விடுகின்றேன்' என்றன்றோ பொருள்படுகின்றது? எனவே நீயும் நானும் சேர்ந்து ஏதோ சிலரை விட்டு வைக்கிறோமென்றால் அது ஒரு ஏமாற்றல்லவா? நான் தொன்மையிலிருந்த எல்லா மதங்களையும் ஒத்துக் கொள்கிறேன்; அவைகள் கூறுமாறு ஆண்டவனைப் பணியவும் செய்கிறேன். நான் முஸல்மான்களோடு மசூதிக்குச் செல்வேன்; கிருஸ்தவர்களோடு ஆலயம் புகுந்து சிலுவையின் முன்பு முழங்காலிடுவேன்; பௌத்தர்கள் சூழப் புத்தக் கோவிலில் நுழைந்து புத்தபிரானைச் சரணடைந்து அவருடைய தத்துவங்களைக் கடைப்பிடிப்பேன். ஒரு ஹிந்துவுடன் காட்டை யடைந்து மர நிழலில் தவங்கிடப்பேன். அவனுடன் இருதயத்திற்கு வெளிச்சமளிக்கும் பேரொளியைக் காண முயல்வேன்.

—சுவாமி விவேகானந்தா.

கதரே கருந்தனம்

எனது நண்பர்

(திரு. பொ. திருகூடசுந்தரம்)

எனது நண்பர் என்று நான் எழுதுவதைப் பார்த்தவுடன் சிலர் இவன் என்ன வெளியில் அதிகம் போவதில்லையே, இங்கு எழுதக் கூடிய விதத்தில் இவனுக்கு நண்பர் ஏது என்று கேட்பர். ஆம், நான் அதிகம் வீட்டிலேயே தங்குபவன்தான்; ஆனால் பிறர் தம் நண்பர்களை வெளியிலே போய்த்தேடவேண்டியது போல் நான் தேட வேண்டியதில்லை. நான் பேசப் போகும் நண்பர்கள் அனைவரும் நான் தேடிப் போகாமலே என் தயவை நாடி என்னிடம் வந்து என் நட்பை விரும்பிப் பெற்றவர்களே. என்னோடு சம்பாஷிக்கவிரும்பி என் அன்பை எதிர் பார்த்து என் வாசலில் காத்திருப்போர் எத்தனையோ பேர்!

'இவன் எழுதப் போகும் நண்பர்கள் என்ன-அவ்வளவு பிரமாதமான விசேஷ கௌரவ முடையவர்களா? விசேஷ அந்தஸ்துடையவர்களா யிருந்தாலும் வெளியில் அவர்களைப் பற்றிப் பேசிக் கொள்வதும் எழுதுவதும் தற் பெருமையல்லவா? தற்பெருமை இழிவான குணமல்லவா?' என்று கேட்பர் சிலர். எனது ஸ்நேகிதர் சாதாரணமானவர்கள் அல்லர்; எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பெற்ற பெரியோரேயாவர். யாரிடம் கூறினாலும் இவர்கள் நட்பு எங்கட்கும் வேண்டுமே என்று விரும்பி நிற்பர் என்பதில் சந்தேகமில்லை. தவிர, தற்பெருமை தவறு, தன்னை வியவாமையே சிறப்பு என்பது உண்மையே. ஆயினும் சில சமயங்களில் தற்பெருமை நியாயமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கும் என்பதை மறுக்க இயலாது. அதோடு இவர்கள்—இப்பெரியோர்—எனது நண்பர், அதனால் நீங்கள் என்னைப் பெருமைப்படுத்துங்கள் என்று கூறுவதற்காக நான் என் நண்பர்களைப் பற்றி எழுதப் புகவில்லை. இவர்களின் நட்பை நீங்களும் பெற வேண்டாமா என்று கேட்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இப்படி ஒவ்வொருவரும் தத்தம் நண்பர்களைப் பற்றி எழுதப் புகுந்து விட்டால் அதற்கு எல்லையுண்டோ இத்தகைய கட்டுரைகளை ஏற்றுக் கொள்வது ஊழியர்களுக்கு அழகாகுமோ என்று வேறு சிலர் வினவலாம். சாதாரணமான நண்பர்களைப் பற்றி யாரும் எழுதமாட்டார். விசேஷமானவர்களைப் பற்றி எழுதவே எவர்க்கும் ஆசை எழும். அப்படி விசேஷமானவர்களைப் பற்றி எழுத எண்ணினால் நான் அவர்களைப் பற்றி முன்னதாகவே எழுதி முடித்து விட்டதாக அறிந்து கொள்வர். அதனால் வியாசத்தின்மேல் வியாசம் வந்து வீண் கஷ்டம் விளைவிக்குமோ என்று யாரும் வீணே அஞ்ச வேண்டியதில்லை.

எனது நண்பருள் விசேஷ அந்தஸ்துடையவர்களைப் பற்றியே எழுதவிருப்பம். அவர்களினும் பல வகுப்பினர் உளர். அவர்களில் பூலோக வாழ் வினரைப் பற்றியே இன்று எழுதப்போகின்றேன். இன்னொரு சமயம் "கந்தர்ப்பர், இயக்கர் சித்தர்" முதலிய வகுப்பிலுள்ள என் ஸ்நேகிதர்களைப் பற்றி எழுத உத்தேசம்.

எனக்கு நண்பர்கள் இந்தியா—பர்மா—மலேயா—இலங்கை யாகிய இடங்களில் மட்டுமே இருக்கக்கூடும் என்று எண்ணற்க. ஐரோப்பாக் கண்டத்தில் இங்கிலாந்து முதல் ருஷ்யாவரையும் நார்வே முதல் இத்தாலிவரையும் என் நண்பர் உளர். அமெரிக்காவிலும் பலர் உண்டு. ஆசியா கண்டத்தில் அரேபியா, பாலஸ்தீனம், பெர்ஷியா, சைனா, ஜப்பான் முதலிய தேசங்களில் சிலர் உளர். சுருங்கச் செப்பினால் எனக்கு நண்பரில்லாத எந்த நாகரிக தேசமுமில்லை.

இவர்களில் சிலர் அரசர்; சிலர் மந்திரிகள்; ஆசிரியர் அறிஞர் குழாங்களிலும் என் நண்பர் உளர். பிரபுக்களும் என் நட்பை விரும்பவே செய்வர். நானும் இவர் சமூக அந்தஸ்தில் தாழ்ந்தவர் என்று யாரையும் விலக்கி விடுவதில்லை. எனக்கு நண்பர் என்னும் ஒரே குலம் தான் தெரியும்.

இவர்கள் அவரவர் நாட்டில் வெகு தூரத்தில் இருந்தாலும் நான் கூப்பிடுவதுதான்—ஓகோ! நான் வாய்விட்டுக் கூப்பிட வேண்டியதில்லை—நான் மனத்



ஸ்ரீஜத் கெ. எப். நாரிமன் தாதார் என்னுமிடத்தில் 'G' வார்டு ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் ஆபீசைத் திறந்து வைத்து, தேசியக் கொடியை ஏற்றியபோது எடுத்த படம். ஸ்ரீ நாரிமன் நடுவில் காணப்படுகின்றார். —S. P. B.

தால் நினைத்து விட்டால் போதும், உடனே ஒரு நிமிஷத்தில் ஓடிவந்து என் பக்கத்தில் என் கிருபா கடாட்சத்திற்குக் காத்திருப்பர். ஆகா அவர்கள் என்னிடம் காட்டும் அன்பும் மரியாதையும்தான் எவ்வளவு!

பகல் வேண்டாம்—நடு நிசியிலும் அழைக்கலாம். அப்பொழுதும் அவர் பிறர்போல் கண்ணைக் கசக்கிக்கொண்டு முணுமுணுத்து எழுந்து மெல்ல நகர்ந்துவருவதில்லை. நான் விரும்புகிறேன் என்று தெரியவேண்டியதுதான் தாமதம்; உடனே முகமெல்லாம் நகை பூத்து அவசரம் அவசரமாக வருவர். வந்தாலும் வந்தவுடன் என்னை அழைத்த காரணம் என்ன என்று இரையமாட்டார். வந்தபின் என் அருளை நோக்கி, கைகட்டி வாய்பொத்தி அடக்க ஒடுக்கமாக அயலே ஒதுங்கி நிற்பர். நான் ஏதேனும் கேட்க ஆரம்பித்தால் மட்டுமே பேசுவர். நான் அவர் பக்கம் திரும்பாமலே இருந்து விட்டாலும் இப்படிச் செய்யலாமோ என்று கேட்கவுமாட்டார். அதற்காகக் கோபித்துக்கொள்ளவு மாட்டார்.

நான் கேட்க அவர்கள் மறுமொழி தரும்பொழுது நான் கோபித்தால் வருத்தமாட்டார்; போதும் பேசியது நிறுத்தும் என்றால் உடனே நிறுத்திவிடுவர். நான் கூப்பிட்டவுடன் வருவர். அவரை வந்தவுடன் போகலாம் என்று கூறினாலோ, உடனே போய்விடுவர். இது நியாயமா என்று கேட்டு நிற்பதில்லை. நான் இட்டதே சட்டம். என் இஷ்டப்படி நடப்பதே அவர்கள் விருப்பமும் கடமையுமாகும்.

சில வேளைகளில் நான் அவர்களைக் கீழே தள்ளிவிடுவதும் எறிந்து விடுவதுமுண்டு. அப்பொழுதேனும் அவர்கள் மலர்முகம் இருள்வதுண்டோ? கைகேயி காட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டபொழுது காகுத்தன் முகம் விளங்கியதுபோலவே விளங்கும். அடித்தாலும் வைதாலும் எனக்குச் சேவைசெய்வதிலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பர்.

அல்லும் பகலும் என் அருகிலேயே இருக்கச் சொன்னாலும் என் உத்தரவை மீறமாட்டார். என் வீட்டில் எந்தத் தாழ்ந்த இடமும் அவர்கள் மனதைப் புண்படுத்தாது. ஆகாரம் ஆடை முதலியன கேட்டார், நீர்க்க இடர்தந்தால் போதும். அவர்கள் விரும்புவதெல்லாம் என் அன்பு ஒன்றையே.

வெளியே போகும்பொழுதும் அவர்களை அழைத்துப் போகலாம். பேசிக்கொண்டு வரச்சொன்னால் பேசுவர். பேசாமல் இருக்கச்சொன்னால் உடனே வாய்மூடி மௌனமாய் இருந்துவிடுவர். போகின்ற காரியத்தைப் பற்றி யோசனைகள் கேட்டால் கூறுவர். போகின்ற இடங்களைப் பற்றி விசாரித்தால் விடை தருவர். பொழுது போக்கக் கதைகள் கூறச் சொன்னால் கதைகள் விரிப்பர்.

அவர்கள் அறியாத விஷயம் ஒன்றுமில்லை என்று கூறத்தகும். அவர்களில் சிலர் முன் கூறியதுபோல் கதைகள் கூறுவர். சிலர் கவிகள் பாடுவர், சிலர் சரித்திர இதிகாசங்களை சவிஸ்தாரமாக எனக்கு எடுத்துரைப்பர். சிலர் வீரர்களைப் பற்றிச் சொல்லி என் ரத்தத்தை வேகமாய் ஓடச் செய்வர். சிலர் நாடகங்களை என்முன் நடத்துவர். சிலர் தத்துவ ஞானிகள். சிலர் "ஸயன்ஸ்" நிபுணர். சிலர் அழகான ஓவியங்கள் தீட்டுவர். சிலர் சங்கீத வெள்ளத்தில் மிதக்க விட்டுவிடுவர்.

எனக்கு மதி மந்திரிகளா யிருப்பர். இடிக்கும் துணையார்; அதனால் என்னைக் கெடுக்கும் தகைமையவர் யார்? சாதாரண நண்பர் போலில்லாமல் அவர்கள் இடுக்கண் எனக்கு ஏற்படும்பொழுது உடுக்கை இழந்தவன் கைபோல் உதவுவர். சிலசமயம் இழுக்க லுடையுழி ஊற்றுக் கோலாய் நிற்பர்.

அவர்கள் வாயில் அவச் சொற்கள் பிறவா. நல்ல அழகான—அறிவான—ஆனந்தமான விஷயங்களை பேசுவர். அவர்கள் உள்ளத்திலுள்ளதில் ஒன்றையும் ஒளிப்பதில்லை. என் பார்வைக்காகத் தம் மனம் முழுவதையும் திறந்து இருட்டுள்ள இடங்களில் விளக்கும் ஏற்றிவிடுவர்.

என்ன துன்பங்கள் ஏற்பட்டாலும்—என்ன சஞ்சலங்கள் தோன்றினும் அவர்கள் அருகேயிருந்து ஆறுதல் மொழிகள் கூறி உள்ளத்தில் விசேஷ ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கிவிடுவர். அவர்கள் முன்னிலையில் சோர்வு, பயம் எதுவும் தோன்றா? அவர்கள் உதவியால் அமரருலகுகூடப் போய் வரலாம். சூர்ய ஒளியில் குளிக்கலாம். அண்ட கோடிகளிடையில் போய்வரலாம்.

இவ்வளவு அபூர்வமான நண்பர்கள் எனக்கு இருப்பதுகேட்டு யாரும் அழுக்காறு அடையவேண்டியதில்லை. இவர்கள் யார் என்று தெரிந்து கொண்டால் போதும்; நீங்களும் அழைக்கலாம்; உங்களிடமும் இதுபோலவே நடந்துகொள்வர். அப்படிச் செய்வதில் எனக்கு ஆட்சேபமும் கிடையாது.

அவர்கள் உங்கட்கு உதவும் பொழுதே எனக்கும் உதவ முடியும். அவர்கள் ஒரே சமயம் பலவிடங்களில் இருப்பர். அவர்கட்கு அழிவும் கிடையாது. அதனால் எனக்கும் உங்கட்கும் ஊழியஞ் செய்வதுபோலவே நம் சந்ததியார்க்கும்—சந்ததியார் நம்மைப்போல் விரும்பினால்—ஊழியஞ் செய்வர். இத்தகைய—எல்லோரும் வேண்டுகின்ற—அமர நண்பர் யார்?



காங்கிரஸ் 50-ம் ஆண்டுப் பூர்த்திவிழா


அக்டோபர் மாதம் கடைசி வாரத்தில் பம்பாயில் காங்கிரஸ் மகாசபை நடைபெறுகையில் காங்கிரசின் 50-ம் வருடப் பூர்த்தி விழாவையும் இந்தியா முழுதும் கொண்டாட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. அந்தத் தினத்தன்று தேசியப் போராட்டத்தில் உயிர் நீத்தோரின் ஞாபகார்த்தமாக எல்லா முக்கிய நகரங்களிலும் கல் சின்னங்கள் நிறுவவேண்டு மென்றும், காங்கிரசின் சரித்திரமொன்றை வெளியிட வேண்டுமென்றும், ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் எங்கும் நடத்தவேண்டு மென்றும் பம்பாய்க் காங்கிரஸ் தலைவர்கள் அபிப்பிராயப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கடல் கடந்த இந்தியர்

இன்னும் கடந்து செல்கின்றனர்

கெட்ட குடியே கெடும்; பட்ட காலிலே படுமென்பது ஒரு பழமொழி; ஆனல் இந்தியர் விஷயத்தில் அது ஒரு புது மொழியாயிருந்து வருகின்றது. இந்தியர் எங்கு சென்ருலும் சனீசுவரன் பார்வை தவறிப்போவதில்லே. இந்திய நாட்டு அவதி பொறுக்க முடியாமல் கடல் கடந்து, நீர் கடந்து, சுற்றம் கடந்து மலாயா சென்று பாடுபட்டனர்; அங்கு ஏற்படும் தொல்லே! சொல்லமுடியாது. கிழக்காப்ரிக்கா, கென்யா சென்று வியர்வை சிந்தினர்; அங்கும் சென்று விட்டான் சனி பகவான். தென்னுப்ரிக்கா புகுந்து (வாக்குறுதி பெற்று) பஞ்சுபடும் பாடு பட்டனர்; அங்கு வெள்ளேக்காரர்களால் ஏற்படும் அவமானம், கஷ்டம், நஷ்டம் இந்திய கல்லுக்கும் மண்ணுக்கும் கூடத் தெரியும்! இன்று தென்னுப்ரிக்கா, தினேவிதைத்தவர் வினேயறுக்கவும் வினே விதைத்தவர் திணேயறுக்கவுமாக மாறிப் போயிருக்கிறது!! ஆம். உண்மையாக அங்கு பாடுபட்ட இந்தியர் சந்தோஷமாக அமர்ந்து இருக்க முடியாதபடி அதிகரிக்கும் ஜனத்தொகையை வெளி நாடுகட்குத் தள்ளிவிட வேண்டியவர்களாக இருக்கிருர்கள். இதுபற்றித் தீர்மானிக்கும் பொருட்டுத் தென்னுப்ரிக்க சர்க்கார் சென்ற வருடம் யங் துரையவர்கள் தலேமையில் ஒரு கமிட்டியை நியமித்தது. அக்கமிட்டி ஒரு வருடமாகத் தேடிவிட்டு, பிரிட்டிஷ் வடபோர்னியோ, பிரிட்டிஷ் கயானு, பிரிட்டிஷ் நியூகினியா ஆகிய இடங்களேக்கண்டு பிடித்தது. இந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கான மைல்கள் நீங்கி யிருக்கின்ற அவ்விடங்கள் வெறும் காட்டு மிராண்டித் தேசங்களாம். அங்கு இந்தியர்கள் அனுப்பப்படுவதற்கான காரணம் யாது? மேற்படி கமிட்டி பக்குவமாக, "அமைதியான பாகங்களில் குடியேறுவதில் மேல் நாட்டினருடன் போட்டிபோட இந்தியாவால் இக்காலத்தில் முடியாது. ஆகையால் குடியேறுவதற்குத் தகுந்த இடம் நாகரிகமடையாமல் காட்டு மிராண்டி நாடுகளா யிருப்பவைகளே யாம்" என்பனபோன்ற வாக்கியங்களால் விளக்குகின்றது. இந்தியர் இக்காலத்தில் "போட்டி போட" முடியாம லிருப்பதற்கு ஜவாப்தாரி யாரோ? யாராக விருந்தாலும் சரி; மேற்படிக் குறிப்பு மறைமுகமாக இந்தியர் தகுதியற்றவர் என்பதை நாட்டிவிடுகின்றது. இது ஒருபாலிருக்க, நிர்க்கதியா யிருக்கும் இந்தியர் காட்டு மிராண்டி நாடுகட்குச் சென்று உழைத்து வாழ்ந்தாலும் அவர்கள் தேட்டத்தை இன்னும் பிறர் பிடுங்காம லிருந்து விட்டால் போதும்.

பூன வெடிக்குண்டு



காந்திஜீ மீது போடப்பட்ட வெடிக்குண்டு தீண்டாமை என்னும் கோட்டையைப் பற்றி யெரிக்கின்றது.

தீண்டாமை ஒழிக!

ஸ்ரீமதி மீராபென் சமரச முயற்சி.

ஸ்ரீமதி மீராபென் ஜூன் மாதம் 21ந்தேதி இங்கிலாந்துக்குப் பயணமானர். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் நேசப்பான்மையை நிலை நாட்டவேண்டுமென்பது அவரது விருப்பம். இந்தியாவில்—விசேஷமாக சபர்மதி ஆச்ரமத்தில்—நீண்ட நாள் தங்கி காந்திஜியின் அந்தரங்கக் கொள்கைகளை நன்கறிந்த ஐரோப்பியர்களில் இவர் ஒருவர். ஒரு ஆங்கில தளகர்த்தரின் புதல்வியாய்ப் பிறந்த இவர் அடிகளின் பரோபகார சிந்தனையென்னும் பேரொளியில் மயங்கி, அதன்பால் ஆசை பூண்டு, மனமார அடிகளின்



சிஷ்யையானர். "மனப்பூர்வமாக மகாத்மாவின் ஸ்வீகார புத்ரியாக அமைந்து கொண்ட" அவருக்குச் சத்யாக்கிரகதர்மத்திலும் காந்திஜியின் பரிசுத்தக்கொள்கைகளிலும் அளவிலாப் பற்று. ஆதலால் "சத்தியத்தின் மூலம் ஆங்கில மக்களின் இருதயங்களை" நல்வழிப் படுத்திவிட முயல்கின்றார். நிருபர்கள் பற்பல குறுக்குக் கேள்விகள் போட்ட போது இங்கிலாந்து சென்று பிரசாரம் செய்ய வேண்டுமென்பது தன் சொந்த ஆசையென்றும் தன் வளர்ப்புத்தந்தை (விடைபெற்றுக் கொண்டபோது) ஆசிர்வாதம் மட்டிலுமே செய்தாரென்றும் கூறினர்.

ஸ்ரீமதி பென்னின் ஆங்கிலப் பெயர் மிஸ் ஸ்லேட் என்பதாகும். அவர் காந்திஜி சிஷ்யையானபோது மீரா பென் என்ற இந்தப் பெயரைச் சூடிக் கொண்டார்.

மகாத்மா மீது வெடிக்குண்டு

இயேசுநாதர் போன்ற பரிசுத்த வேண்டுகோள்

மகாத்மா காந்தி ஜூன் 25-ந் தேதி பூனவுக்கு விஜயம் செய்தபோது உலகம் நடுங்கும்படியான விபரீத சம்பவமொன்று நடைபெற்றது. அடிகளின் உயிரை அழிக்கும் நோக்கத்துடன் எதிரிகள் வெடிக் குண்டொன்றை வீசினர்கள். நல்ல வேளையாக, அக்குண்டு, தப்பிதமாய், அடிகள் சென்ற மோட்டாருக்கு முந்திய மோட்டாரின்மீது வீசப்பட்டதால் அடிகளுக்கு எவ்வித ஆபத்தும் நேரவில்லை. குண்டு விழ்ந்த காரிலிருந்த தொண்டர்கள் எழுவருக்குப் பலமான காயம்பட்டது. அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர். இந்தச் சம்பவத்தைக் காந்திஜி அறிந்ததும் சற்றுமே ஆச்சரியமோ வருத்தமோ கொள்ளவில்லை. வழக்கம் போல், சித்தம் செய்யப்பட்டிருந்தபடி கூட்டத்தை நடத்தி வெற்றிகரமாக முடித்தார். பிரசங்கத்தில் வெடிக்குண்டு வீச்சின் நாமம்கூடக் குறிப்பிடப்படவில்லை. அப்பால் அவர் விடுத்த ஓர் அறிக்கையின் சாரமாவது:—

நான், என்வாழ்வில் பன்முறை இவ்வாறு உயிர் தப்பியிருக்கிறேன். ஆதலால் இப்புதிய நிகழ்ச்சியைக் கண்டு நான் வியப்பெய்தவில்லை. வெடிக்குண்டினுல் எவருக்கும் மிக ஆபத்தான காயமேற்படாதது தெய்வச் செயலேயாகும். நான் அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். கொஞ்சம் அதிகமாகக் காயமுண்டவர்கள் சீக்கிரத்தில் குணமடைந்து விடுவார்களென்று நம்புகிறேன்.

இன்று மாலை நடந்த புத்தியீனமான செயலை எந்த அறிவுபடைத்த சனதனியும் ஆதரித்துத்தூண்டுவரென நான் நம்பவில்லை. சனதனிகள் சார்பாக எழுதியும் பேசியும் வருபவர்கள், தோன்றியதை எல்லாம் எழுதியும் பேசியும் விடாமல், கட்டுப்பாட்டுடன் இருக்குமாறு கவனம் செலுத்துவார்களென்று நினைக்கிறேன்.

இந்த விசனகரமான நிகழ்ச்சி ஹரிஜன இயக்கத்திற்கு வலு வளித்திருக்கின்றதென்பதில் ஐயமில்லை. ஒரு காரியத்திற்காகப் பாடுபடுகையில் உயிர்த்தியாகம் செய்ய நேரிடுமானல் அக்காரியம் மிகவும் பலம் அடையுமென்பது ஓர் உண்மை. நான் உயிர்த்தியாகம் செய்ய வேண்டுமென்று போவல் கொண்டிருக்க வில்லை; எனினும் கோடிக் கணக்கான ஹிந்து மக்களுடன், நானும் கொண்டிருக்கும் ஒரு மத நம்பிக்கையைப் பாதுகாக்கும் விஷயமாக உழைக்கையில் உயிர் நீக்கத் தருணம் ஏற்படுங்காலையில், நான் என் உயிரைக் கொடுத்தாயினும் தீண்டாமையை அகற்றும் விஷயத்தில் தீவிரமாகப் பாடுபடுவேன் என்று ஹரிஜனங்களின் முன்பு செய்து கொண்ட சபதம் நிறை வேறிவிட்டதென்று பிற்காலச் சரித்திராசிரியர் எழுதவும் கூடும். இப்பூவுலக வாழ்வில் எனக்கு எஞ்சியிருக்கும் சொற்பக் காலத்தையும் கூட இல்லாமலாக்கி விட வேண்டுமென எண்ணுகிறவர்கள் எனது பூதவுடலை அழிப்பதைவிட இலேசான காரியமில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். அப்படியானல் பாவியென அவர்களால் கருதப்படும் என்னைக்கொல்வதற்குப் பதிலாக ஏன் வேறு சிலரையும் கொல்ல முயல வேண்டும்?

அவ்வெடிக்குண்டு என் மீதும் என் மனைவி மீதும் தம் தாய் தந்தையர்களால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, என் குழந்தைகள் போலிருந்து வரும் 3 பெண்மணிகள் மீதும் விழுந்திருந்தால் உலகம் என்னசொல்லும்? வெடிக்குண்டு வீசியவர்கள் அப்பெண் மணிகட்கு எத்தகைய தீங்கும் செய்ய வேண்டுமென்று எண்ணியிருக்க மாட்டார்களென்று நம்புகிறேன்.

வெடிக்குண்டு வீசியவர் யாரெனத் தெரியவில்லை; என்ருலும் அவர்கட்காக நான் மிகவும் வருந்துகின்றேன். என்னிஷ்டப்படி விட்டுவிடுவதாயின், நான் தென்னுப்ரிக்காவில், என்னைத் துன்புறுத்தியவர் விஷயத்தில் நடந்து கொண்டது போல, விடுதலை செய்து விடுமாறு தான் வேண்டிக்கொள்வேன்.

குண்டெறிந்தவர் மீதோ, மறை முகமாக விருந்து அவரைத் தூண்டி விட்டவர் மீதோ, சீர்திருத்தக்காரர்கள் ஆத்திரம் கொள்ளலாகாது. தீண்டாமையென்னும் விஷத்தை நாட்டிலிருந்து துரத்தியடிக்க அவர்கள் இரட்டிப்பாக வேலை செய்ய வேண்டுமென்பதனையே நான் விரும்புவேன்.

கவியரசர் தாகூர்

(இலக்கியப்பிரியன்)

இந்திய வைசிராய் லார்டு கர்சன் ஒருக்கால், காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகேலுடன் பேசிக்கொண்டிருந்த போது, "இந்தியர்களில் இரத்தினம் போன்று ஜொலிப்பவர்கள் எல்லோரும் வங்காளிகளாம். பல துறையிலும் இந்தியாவில் அவர்களே முன்னின்று மிளிர்கின்றனர்" என்று கூறினர். இந்துமத சிங்கமாகிய சுவாமி விவேகாநந்தர், பக்திப் பிரவாகத்தில் ஆழ்ந்து மிதந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், பிரசங்கமாரி பொழிந்த சுரேந்திரநாத் பானர்ஜி, சட்டக்கலை நிதியாய் விளங்கிய ஸ்ரீ. கோஷ், அறிவியல் சாஸ்திர நிபுணராய் இலங்கும் ஸ்ரீ போஸ், ஆசிரியர் திலகமாய்ப் பிரகாசித்த பங்கிம் சந்திர சதோபாத்யாயா, 84மணி நேரம் ஒரே யடியாய் நீந்தி உலகைப் பிரமிக்கச்செய்த திரு. கோஷ் போன்ற நூற்றுக் கணக்கான வங்காளிகளை நோக்கினல் யார்தான் அம்மக்களின் ஆற்றலைப் புகழார்! சீர்திருத்தத் துறையிலும், இலக்கியத் துறையிலும், மதத் துறையிலும், பிற துறைகளிலும் நீண்ட நாளாகச் சிறந்து வந்திருக்கின்றது வங்காளம். அதற்கு நவீன காலத்தில் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்குகின்றவர் கவிச் சிங்கமாகிய ரவீந்திரநாத் தாகூர் என்னலாம்.

அவர் உலகம் முழுதிலும் நல்லிசை நாட்டி எத்திறத்தினரும் போற்றுமோர் புலமை வாழ்வுடையவர். சிறந்த இலக்கியத்திற்கு, மக்களின் இருதய மலர்களை வாரிக்கட்டி ஓர் ஆரமாகச் சூடிக்கொள்ளு மாற்றலுண்டேல் அதனை உண்மையாக இன்று கவி தாகூரினிடம் காணலாம். அண்மையில் பெர்ஷியா தேசம் புகுந்தபோது அத்தேச மன்னர் ஷா புரிந்த உபசாரமும், காண்பித்த அன்பும் நினைக்க நினைக்க வியப்பைத் தருவதாகும். உரோமாபுரிக்குச்சென்று இத்தாலியன் சர்வாதிகாரி முசோலினியின் விருந்தினராய்த் தங்கியபோது நடந்த உபசாரங்கள் இத்தாலிய தேச மன்னர் இம்மானுவல்கூடக் கண்டதில்லையென்று சில பத்திரிகைகள் எழுதின. அவ்வண்ணமே ஜப்பான், சீனு, எகிப்து, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய பல தேசங்களும் கவியரசரைப் பொன்னேபோல் போற்றின. இந்தியருக்கு வெளிநாடுகளில் மதிப்பில்லை யென்ற கூற்றைப் பொய்யாக்கி விட்டார் இக்கவிஞர் சிங்கம். அவர் லண்டன் உற்றிருந்தபோது பற்பல இலக்கிய விற்பன்னர்கள் பல்வேறிடங்களிலிருந்து ரயிலிலும், மோட்டாரிலும் ஊர்ந்து வந்து இப்புலவரின் சொற்பொழிவுகளை நுகர்ந்து ஆச்சரியமுற்றனராம். ஆங்கிலத்தில் கவியரசருக்கிருக்கும் ஆற்றல் எவரையும் பிரமிக்கச் செய்யும்: ஆதலால் இங்கிலாந்தில் பெயர்போன பல சர்வகலாசாலைகள் புகழ்ந்து உபசாரப் பத்திரங்கள் வழங்கியிருக்கின்றன.

இவ்வாறு புலவர் பெருமானுக்கிருக்கும் பெருமையின் முதிர்ச்சியால் அவரது நூல்கள் பலவும் பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அந்நூல்களில் கீதாஞ்சலி என்ற நூலே எல்லோராலும் தலை சிறந்ததென்று கொள்ளப்படுகின்றது. வங்காள பாஷைக்கு ஓர் புத்துயிரை—அன்று புது ஊக்கத்தை—அளித்த கவிஞர், செய்யுட்களைப்போன்றே வசன மெழுதுவதிலும் சிறந்த ஆற்றல் உடையாவர். அவரெழுதிய சிறு கதைகளில் ரசம் சொட்டுவதைப் பருகி இன்புறாதார் இருக்க முடியாது. கதைகளில் எல்லாம் காதல், இல்வாழ்க்கை இரகசியம், உலக இயல்பு, ஆன்மீக உணர்ச்சி முதலியவை புதைந்து கிடப்பதோடு பற்பல தத்துவங்களும் மல்கி யிருக்கின்றன. கவி தாகூர் பெரிய புலவர் என்பதோடு தேர்ந்த தத்துவ ஞானியுமாவார். ஒருகால், நோபல் பரிசுபெற்ற ரொமையின் ரோலண்டு என்னும் பெரியார், காந்திஜீயைப்பற்றி ஓர் நூல் எழுதிய போது, 'பரத கண்டத்தில் சிந்து, பிரம்மபுத்திரா என்னும் இருபெரும் நதிகள் இருதிசைகளிலும் கைகள்போல் ஓடி, நாட்டுக்கு வளம் கொடுப்பதுபோல காந்திஜீ, தாகூர் என்ற இருவரும் இருதிசை (எதிரெதிராக)களிலு மிருந்து பாரத அன்னைக்கு வளம் கொடுக்கின்றூர்கள், என்று கூறினர். இதைவிடக் கவியரசின் புகழைப் பொறிக்க வேறென்னவேண்டும்? காந்திஜீ ஒரு சமயத்தில் இப்புலவரைப்பற்றி எழுதிய போது, "ஆசியக் கவிச்சிங்கமாகிய தாகூர்—என் உலகக் கவிசிங்கமென்று கூறலாகாது?" என்று தனக்குள்ளேயே வினவிக்கொண்டார்.

இத்தகைய கவியரசர் வங்காளத்தில் ஓர் பாகத்தில்—கல்கத்தாவிலிருந்து சுமார் நூறு மைல் தூரத்தில்—இயற்கை வளம் செறிந்து செடிகொடிகளால் எழில் செய்யப்பட்டதும், அழகிய நீரோடைகளால் அணி செய்யப்பட்டதும், பாடும் பறவைகளும், இசைக்கும் புட்களும் மல்கியதும், ஒத்த சீதோஷ்ணத்தால் ஊக்கப்படுவதுமாகிய ஓர் இடத்தில்—சாந்தி நிகேதன் என்ற குருகுலத்தை அமைத்து நிம்மதியாக வாழ்கின்றூர். அந்நிலையம் தன் பெயருக்கேற்ப "அமைதியின் உறையுள்" ளாகவே நிலவுகின்றது. பல்வேறு தேசத்தினரும், பல்வேறு பாஷையினரும், பல்வேறு நிறத்தினரும், ஆண் பெண் பேதமின்றி, சமத்துவமாக, சகோதரத்துவமாக அங்கு வாழ்கின்றனர். அங்குள்ள மாணவர்கள் பல தொழில்களிலும் பரிக்ஞானம் பெறுவதோடு சிறப்பாக இலக்கியத்திலும் நாடகத்திலும் கருத்துக் காண்பிக்கின்றனர். ஏனெனில் கவியரசருக்குக் கலை வளர்ச்சியால் உலகை ஐக்கியப்படுத்த வேண்டுமென்பது விருப்பம். இவ்விருப்பத்தை, சமீபத்தில், அவர் இலங்கையில் செய்த ஓர் பிரசங்கத்தால் காணலாம். அங்கு அவர் பேசியதாவது:—

"நான் ஓர் அரசியல் வாதியல்ல; சீர்திருத்தக்காரனுமல்ல. கீழ்நாட்டினருக்கும் மேல் நாட்டினருக்குமுள்ள தொடர்புகளைப் பலப்படுத்தி அவர்களுடைய ஆன்மீக வளர்ச்சியைப் பெருக்கி ஓர் ஐக்கியத்தை உண்டு பண்ணவேண்டு மென்பதுதான் என் விருப்பம். நான் இந்தியாவிலுள்ள அரும்பெரும் கலைப் பொக்கிஷங்களை இலங்கை வாசிகட் கெடுத்துக்காட்டவே வந்தேன். அதுபோல் இலங்கையின் உயர்தரக் கலைகளை இந்தியரும் தெரிந்து கொள்ளவேண்டும். பூகோள அமைப் பின்படி இலங்கை இந்தியாவை விட்டு

நீங்கி யிருக்கலாம்; ஆனாலும் கலைகள் பற்றிய மட்டிலும் இருதேயங்களும் தொடர்புடையவைகளேயாம். இலங்கை புதல்வியும் இந்தியா தாயுமாவார்கள். ஆகவே இருவரும் ஒத்து வாழும்படி செய்வதே எனது ஆசை."

கவிஞர் இலக்கிய ரங்கத்தில் நடனம் செய்து களித்து விளையாடும் மாணவ மாணவிகளுடன் கூடி எப்பொழுதும் பொழுது போக்குகின்றாரா? இல்லை. நிகேதனத்தின் பொருளாதார நிலை எப்பொழுதும் அவரையோரிடத்தில் அமைதியாக இருக்க விடுவதில்லை. எனவே அடிக்கடி, தனது முதிய பருவத்தில், கம்பீரமான வசீகர உருவத்தோடு வெளி நாடுகட்குப் பிரயாணம் செய்து வருகிறார். அங்ஙனம் செல்லும் போதெல்லாம் சில மாணவர்களும் உடன் செல்கின்றனர். ஆங்காங்கு அவர்களது நாடகங்களாலும் சொற்பெருக்குகளாலும் இன்னிசையினாலும் இலக்கிய நயம் சொரிடப்படுகின்றது. அதனை நேரில் சாட்சியாகக் காணும் மக்கள் பொருள் வழங்கி யுபசரிக்கின்றனர். சாந்தி நிகேதனத்தின் நடை முறைக்கு ஏராளமான பொருள் தேவைப்படும். எவ்வழியினும் பெரும் நிதியைச் சேர்த்துவிட வேண்டுமென்று முயல்கின்றார் புலவர்.

பூனா வெடிக்குண்டு

உளவு சொல்வதற்கு ரூ. 1000 இனம்

வெடிக்குண்டெறிந்தவரைப் பற்றிய தகவல் கொடுப்பவர்கட்கு 1000 ரூபாய் இனாமளிக்கப்படுமெனச் சர்க்கார் விளம்பரம் செய்துள்ளார்கள்.

அகில இந்தியக் கதர் சுதேசிக் கண் காட்சி.

அடுத்த ஆகஸ்டு மாதம் 5-8-34ந் தேதி சேலத்தில் அகில இந்தியக் கத்தர் சுதேசிக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதென்று சேலம் அன்பர்கள் தீர்மானித்திருப்பதாகச் செய்தி எட்டுகிறது.

2 நாளையில் 4 குழந்தைகள் பிரசவம்.


கான்பூரில் ஒரு முஸ்லிம் பெண் இரண்டு நாட்களில்—பகலொன்று இரவொன்றாக—4 குழந்தைகளை வரிசையாகப் பெற்றுளாம்.

காங்கிரஸ் அபேதவாதக் கட்சி

"கொள்கை மாறினாலன்றி வரவேற்க முடியாது"

ஜூன் 30-ந் தேதி காந்திஜீ சபர்மதி ஹரிஜன ஆசிரமத்தில் கூடிய காங்கிரஸ் வாதிகளிடம் இவ்வாறு கூறினார்:—


காங்கிரசுக்குள் அபேதவாதக்கட்சி ஏற்படுவதை வரவேற்கிறேன். ஆனால் அதன் திட்டங்களைத் திருத்தி யமைக்க வேண்டும். வகுப்புப் போராட்டத்தின் பொருள் பலாத்காரமா யிருக்குமானால் அது காங்கிரஸ் கொள்கைக்கு முரண்பாடானதாகும். அரசியல் நிலைமை கருதி, சாத்விகத்தைக் கைக்கொள்வதாயின் அபேதவாதக் கட்சிப் போராட்டத்தில் காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்வதில் ஆட்சேபனையில்லை. பண்டித் ஜவஹர்லாலுக்கும் எனக்கும் நடைபெற்ற கடிதப் போக்கு வரவுகளில் நான் சொத்துரிமையைப் பரிஹரிப்பது சம்பந்தமாக ஓரளவு ஒப்புக்கொண்டதின் கருத்து, தனிப்பட்டவர் சொத்தைப் பரிகரிப்பதென்பதன்று. சொத்துக்களைச் சர்க்கார் நியாயமாகவும் அறிவுடனும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். காங்கிரஸ் காரியக் கமிட்டித் தீர்மானத்தைத் தப்பாகச் சிலர் பொருள் கொள்கின்றனர். மக்களுக்கு அறிவு புகட்டுவதா யிருக்கவேண்டும் அபேதவாதம். அதனால் வகுப்புணர்ச்சி ஏற்பட்டாலும் நான் பொருட்படுத்த மாட்டேன். என் கருத்துப்படியுள்ள அபேதவாதத்தை ஸ்தாபிக்க சர்க்காரைக் கைப்பற்றினும் நான் அதனை வரவேற்பேன். சரியான அபேதவாதிகள் காங்கிரசைக் கைப்பற்றுவதில் எனக்கு மகிழ்ச்சி உண்டு.




நன்றாக வளர்ச்சியுற்ற ஆப்ரிக்கன் யானை. இந்தியாவில் காணப்படும் யானைகளை விட மிகவும் வித்தியாசமானது. நீண்ட நாளாகப் பலர் பழக்க முடியாத இயல்புடையவையென்று நினைத்து வந்தார்கள்.




சென்னையிலுள்ள "ஊழியன்" ஆபிஸ் கட்டிடம்.




காந்திஜீ அகமதாபாத்திற்குச் சென்றபோது புலேஸ்வரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். —P.P.B.



சென்னைக் காங்கிரஸ் நிலையத்தில், ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதியின் தலைமையில் நடந்த கொடியேற்று விழா. —P P. B.



காந்திஜீ வால்பக்காடி ஹரிஜன விடுதியைப் பார்வையிட்டார். முன்னிற்பவர்கள் ஹரிஜனச் சிறுவர்கள். —S. P. B.



மகாத்மாவுக்குப் பிரிவுபசாரம் செய்த தலைவர்கள் (வலப்புறமிருந்து) ஸ்ரீ ஆனே, டாக்டர் ராய், பண்டித மாளவ்யா, ஸ்ரீ மதுரதாஸ் வாசன்ஜி. —S. P. B.



மணிபவனில் காந்திஜீ வரவை எதிர்பார்க்கும் காந்தி சேவா சேனா சங்கத் தொண்டர்கள். —S. P. B.



காங்கிரஸ் ஆக்டிங் தலைவர் திரு. பஜாஜ் காங்கிரஸ் நிலையத்தைத் திறந்து தேசியக் கொடியை ஏற்றும் காட்சி. —S.P.B.

வெளிநாட்டு அரசியல் சதுரங்கம்

கீழ்த் திசை நாடுகட்குள் ஐக்கியம்—பொது உடைமை ருஷ்யா முதலாளி சங்கத்தைச் சேர்தல்—வெள்ளையறிக்கை படும்பாடு—ஜப்பானின் தீவிரப் போக்கு—சர்வாதிகாரிகள் சந்திப்பு—

ருஷியா

பிரான்சும் ஜர்மனியும் பகைத்திருக்கின்றன. அதேபோல் ஜர்மனிக்கும் ருஷியாவுக்கும் விரோதம். ஆதலால் பிரான்சும் ருஷியாவும் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளலாமென்றும் அக்கருத்துடன்தான் பிரான்ஸ் சர்வதேச சங்கத்தில் சேருமாறு ருஷியாவை வற்புறுத்துகின்றதென்றும் சில தந்திரிகள் அபிப்பிராயப் படுகின்றனர். எப்படியாயினும், கீழ்த் திசை ஐரோப்பிய தேசங்கள் சில, ருஷியாவை அங்கீகரித்து விட்டிருப்பதாலும் பிற காரணங்களாலும் ருஷியா சர்வதேச சங்கத்தில் சேரப் போவது உறுதி. முதலாளி வர்க்கத்தை யொழிக்கும் கொள்கையுடைய பொதுவுடைமை ருஷியா முதலாளி ஆதிக்கமே உருவான சர்வதேச சங்கத்தில் சேருவதின் இரகசியமென்ன வென்று சில தந்திரிகள் சந்தேகிக்கின்றனர்கள். பெரும்பான்மையும் ஜர்மனியின் எதிர்ப்பைச் சமாளிக்கவும், பிற தேசங்களால் அங்கீகரிக்கப் படவுமே ருஷியா தந்திரம் செய்கின்றதென்று யூகிக்கலாம். சமீபத்தில் அது சர்வதேச சங்கத்திற்கு ஓர் வேண்டுகோள் விடுத்து அமெரிக்காவை மேற்படி சங்கத்தில் சேர்த்துக்கொள்ள முயல வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. இதன் நோக்கம், ஜப்பான் ஒருகால் கீழ்த் திசையிலிருந்து தன்னைத் தாக்க முயன்றால், பசிபிக் மகா சமுத்திரத்தில் பல மடைந்திருக்கும் மற்றொரு தேசமாகிய அமெரிக்காவை, மறுபுறமிருந்து ஜப்பானைத் தாக்கும்படித் தூண்டுவதாயிருந்தாலு மிருக்கலாம்.

ஜப்பான்

ஜப்பான் வியாபாரம் தினே தினே வளர்ச்சியுற்று வருவதைக் கண்டும், பிற தேசங்களால் போட்டி போட முடியாதிருப்பதைக் கண்டும் மேனாட்டார் அஞ்சுகின்றனர். சீனர் முசோலினி



லாஸ் எஞ்சல்ஸ் நாஷனல் பார்க்கில் வளர்க்கப்படும் இரு கலைமான்கள் உல்லாசமாகத் தண்ணீர் அருந்திக் கொண்டிருந்தபோது, திடீரெனக் காட்டிலுள்ள ஓர் சிங்கம் பாய்ந்து வந்தது.

தமது அச்சத்தை விளக்கிப் பிரசங்கமே செய்திருக்கிறார். அரசியல் தந்திரிகள் ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் கடும் போர் ஏற்படலாமென எதிர்பார்க்கின்றனர். ருஷிய நிலைமையால் அது போருக்குத் தயாராகியிருப்பதாகத் தெரிகிறது. பெண்கள் கூடவும் அந் நாட்டில் யுத்தத்திற்கு ஆயத்தமாகின்றனர். ருஷியா, ஜப்பான் போருக்கெழுந்தால் ஜர்மனி முதலிய ஐரோப்பிய தேசங்கள் மறுபுறம் தன்னைத் தாக்கி விடலாகாதென்று கருதி மேல்திசையின் நட்பைப் பெருக்கி வருகின்றது.

துருக்கி

மேல் நாடுகள் தங்கட்குள் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொள்வது போல துருக்கி சர்வாதிகாரியான கமால் பாஷாவும் கீழ்த்தேசங்களை ஒன்றுசேர்த்து, கறுப்பு மனிதர்கட்குள் ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த நினைக்கிறார். தற்போது துருக்கியில் வதிந்து வரும் பாரசீக சக்ரவர்த்தி (ஷா) இதனை முன்னிட்டுத்தான் போயிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அண்மையில் துருக்கிக்கும் பாரசீகத்திற்கும் ரயில் பாதைகள் அமையும்படி ஏற்பாடாகி யிருக்கிறது. அப்கானிஸ்தான் முதலிய மகமதிய நாடுகளும் உடன்படிக்கையில் சேரலாமென்று தெரிகிறது. இத்தகைய கீழ் நாட்டு ஐக்கியம் வெள்ளையர் ஆர்ப்பாட்டத்தை அடக்குமென்பது அரசியல் வாதிகள் அபிப்பிராயம்.

ஜேர்மனி

ஜூன் மாத ஆரம்பத்தில் ஜர்மன் சர்வாதிகாரியான ஹிட்லரும், ஐரோப்பிய அரசியலின் முக்கிய அங்கமான இத்தாலிய சர்வாதிகாரி சீனர் முசோலினியும் ரோமா நகரில் சந்தித்தனர். இருவர் சம்பாஷணையின் இரகசியம் அரசியல் வாதிகட்குக் கலக்கத்தைக் கொடுக்கிறது. சர்வாதிகாரிகள் இருவரும் தாம் போர் செய்வதற்காகக் கூடவில்லை என்றார்கள். ஆனால் ஹிட்லர் ஆஸ்திரியக் கலகத்தில் தலையிடுவதில்லையென்றும் அதனைத் தன் படியே விட்டுவிட வாக்களித்திருக்கின்றாரென்றும் சொல்லப்படுகிறது.

ஹிட்லர் ஆயுதம் வைத்துக் கொள்ளும் விஷயத்தில் சம அந்தஸ்து ஏற்பட்டால் சர்வதேச சங்கத்தில் மீண்டும் சேர்ந்து கொள்ளலாமென்கின்றார்.

பிரான்ஸ்

ஜர்மன்—இத்தாலி நட்பு, பிரான்சில் பரபரப்பை உண்டு பண்ணி யிருக்கிறது. ஏற்கெனவே ஜர்மனி பிரான்ஸ் மீது காண்பித்து வரும் பகைமை இத்தாலி நட்பினால் ஆதாரவு பெற்று, பலம் பெற்று விட்டதென்பது பிரஞ்சு தந்திரிகள் எண்ணம். ஆதலால் பிரஞ்சு வெளி நாட்டு மந்திரி ருஷியா, போலந்து, பெல்ஜியம் போன்ற தேசங்களின் நட்பைப் பெருக்கி விட்டு, கீழ்த் திசை நாடுகளின் சிநேகத்தை அடையும் பொருட்டு பெல்கிரேட், புக்காரெஸ்டு முதலிய நகரங்கட்குச் சென்றிருக்கிறார். ராஜ தந்திரம் தெரிந்தோர் சீக்கிரத்தில் பிரான்ஸுக்கும் அத்தேசங்கட்கும் ஐக்கிய உடன்படிக்கைகள் நடைபெறலாமென்று யூகிக்கின்றனர். இங்ஙனம் பிரான்ஸ் தன்னை எவ்வளவு கெட்டிப் படுத்திக் கொண்டாலும் ஆயுதப் பரிஹரண மகாநாட்டுக்கும், ஜெமனியின் நீக்கத்திற்கும், அதுவே (இங்கிலாந்தோடு) காரணம் என்ற கெட்ட பெயர் நீங்கப் போவதில்லை.

இங்கிலாந்து.

வெள்ளை அறிக்கை சம்பந்தமாக இங்கிலாந்தில் மிகுந்த பரபரப்பேற்பட்டிருக்கிறது. தற்போதியத் தேசீயக்கட்சியின் ஆதிக்கம் சீக்கிரத்தில் விழுந்துவிடுமென்றும், வருகிற டிசம்பருக்குள் மறு தேர்தல் நடைபெறுமென்றும் அரசியல் நுட்பம் தெரிந்தோர் கூறுகின்றனர். ஸ்ரீ. மக்டொனல்டு (முதல் மந்திரி) 3 மாத ரஜாவில் செல்கிறார். அதுகாலை ஸ்டான்லி பால்டுவின் ஆக்டிங்காக வேலைபார்ப்பார் என்று சொல்லப்படுகிறது. சிலர் மக்டொனல்டு ராஜீய காரணங்கள்பற்றியே ரஜா வெடுக்கின்றாரென்றும் திரும்பி வரமாட்டாரென்றும் அதற்குப் பதிலாக லார்டு சபைக்கு அனுப்பப்பட்டு விடுவாரென்றும் நம்புகின்றனர். சர்ச்சில் கோஷ்டியார் ஆதிக்கம் வளர இடமிருக்கிறது. அவர்களுடைய உத்தேசம் ஸ்ரீ மாக்டொனல்டைப் பதவியிலிருந்து நீக்கிவிடுவதாகும்.

வெள்ளையறிக்கை தற்போதிருப்பதை விட எவ்வழியிலும் நன்மைநாடி மாற்றமடையுமென்று சொல்வதற்கில்லை என்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். என்றாலும் சில தொழிற் கட்சி யங்கத்தினர்கள் தற்போதிய பார்லிமெண்ட் அறிக்கையைக் கண்டித்து, தாம் சொந்தமாக ஓர் அறிக்கையை வெளியிடப் போகிறார்களென்று எண்ண விடமிருக்கிறது.

ஜப்பான் கடற்படை முஸ்தீப்பு

தற்போது ஜப்பான் 1935ம் வருடத்திய கப்பற் படை மகாநாட்டில், பிரிட்டனுக்கு 5 அமெரிக்காவுக்கு 5 ஜப்பானுக்கு 3 என்ற விகிதப்படிதான் கடற் படை வைத்துக் கொள்வதென்ற ஏற்பாட்டை மாற்ற முயல்கின்றது. அம் முயற்சி பயன்படவில்லை யானால் வாஷிங்டன் ஒப்பந்தத்தைக் கை நழுவ விட்டுவிடுமாம். பின்னர் தனது மனம் போல் கப்பற் படை சேகரிக்குமாம். எப்படியும் பெசிபிக்கில் பலம் பெற வேண்டுமென்பது ஆசை.

அழகும் பெண்மையும்

மணவாழ்க்கையில் இன்பம் காண்பதெப்படி?

அழகு என்பது வெற்றி கொண்டு அடக்கியாளும் ஓர் அரிய சக்தி. அதனைப் பெற்றிருப்போர் பிறர் கண்ணுக் கணியாய் மிளிர்கின்றனர். அழகு எந்தப் பிராணிக்கும் மனப் பூரிப்பை நல்குவதாகும். பிரக்யாதி பெற்ற ஆங்கிலப் புலவராகிய கீட் என்பவர் "எழிலுடைய ஒரு பொருள் எந்நாளும் இன்பம் ஊட்டவல்லதாகும்" என்று இசைக்கின்ருர்.

* * *

அழகைக் கண்டு ஆநந்தியாதவர்கள் எவருமில்லை. ஆங்கில ஆசிரியராகிய ஸ்ரீ. எமர்சன் "கண்கள் உண்மையாகவே பார்ப்பதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன வென்ருல் கண்களின் வேலை அழகைப் பார்ப்பதாகவேதா னிருக்க வேண்டும்" என்கின்ருர். நேர்மையாகக் கூறுமிடத்து இயற்கையின் ஒரு பகுதியே அழகுக்குக் கவனம் செலுத்துவதாகும். பிரபஞ்சத்தில் உண்மையின் பம் காண விழைவோர்—விசால இருதய முடையோர், ஆகியவர்கள் அழகு நிரம்பிய இடங்களை, பொருட்களை, உருவங்களையே நாடி நிற்பர். அத்தகையோருக்கு அழகைக் காணக்காண ஆநந்தம் பொங்கியெழும்; இருதயம் விகாச மடையும்; சிலகால் பேதையர் போல் கூத்தாடவும் செய்வர்.

* * *

ஆதலால் பெரும் பெரும் புலவர்களும் முனிவர்களும், ஆசிரியர்களும் அழகு சொட்டும் இயற்கைத் தோற்றங்களை அவாவி, சோலைகளிலும், அருவியோரங்களிலும், கானிலும் வசிப்பது காண்க. ஆங்கிலப் புலவராகிய வோர்ட்ஸ்வொர்த் தன் வாழுள் முழுமையும் கிராஸ்மீயர் மலைச் சாரலிலேயே கழித்தார். அதேபோல் பண்டைக் கால இந்திய முனிவர்களும் கானிலலைந்து திரிந்தார்களென்றே படிக்கிருேம். அவர்களைப் போலவே புத்தர், ஜயினர், இயேசு நாதர் போன்ற மத போதகரும் இயற்கை அழகு தொக்கிய இடங்களிலேயே தங்கித் தம் ஆன்ம ஞானத்தைப் பெற்றன ரெனக் கேள்விப்படுகிருேம்.

* * *

ஆ! அழகின் ஆற்றல் தான் என்னே! என்னே! அது மனிதனின் கவலையைத் தீர்த்து, புத்தியை வசீகரித்து, இருதயத்தைப் பூரிப்பித்து, ஆநந்தமென்னும் அருந்தேனைப் பிரவகிக்கச் செய்கின்ற தன்ருே? அதனாலன்ருே பெரும்பெரும் கற்பனு சக்தியுடையோ ரெல்லாம் பித்தர்களைப்போல் மரத்தையும் கொடியையும், செடியையும் விலங்கையும், அருவியையும் பறவைகளையும், பார்த்துப் புலம்புகின்றனர்! நம்போன்ருர் ஆம்! ஆம்! அவற்றைக் காணும்போது அப்புலவர்கள் பேதையர் என்று தவருகத் தள்ளி விடுகின்ருேமே!

* * *

மானிடர்கட்குள், அழகின் மூர்த்திகாரமாய் விளங்குபவர்கள் பெண்கள் என்பதில் சந்தேகமில்லை. ஒரு ஆங்கிலக் கவிஞர் "கடவுளின் படைப்பிலெல்லாம் மேலான படைப்பு அழகுடைய ஓர் பெண்மணியைப் படைப்பதாம்" என்று கவிபாடுகின்ருர். உண்மையில் வசீகர இன்ப வெள்ளம் தோய்ந்த ஓர் வனிதா மணியின் கடைக் கண் பார்வையில்—பவள அதரத்தில் இலங்கும் புன் முறுவலில்—நாணம் கலந்து உடல் குழைத்துப்பூமியை நோக்கி நிற்கும் சாயலில்—மலர்ந்த முகத்துடன் பொழுது போக்குப் பகர்ந்து களியாடி நிற்கும் தோற்றத்தில்—இன்பம் காணுதார் யார்! ஒருவருமிலர்! ஆகையாலன்ருே தூய்மை இருதயம் படைத்த பெரும் பெரும் புலவர்கள் எல்லாம் பல படப் பெண்மையைப் புகழ்கின்றனர்! போற்றுகின்றனர்!!

* * *

விக்டர் ஹூகோ என்ற ஆங்கில ஆசிரியர் பெண்களின் புன்முறுவற் பேரெழிலைப் பற்றிச் சொல்லு மிடத்து, "புன்சிரிப்புக் கடவுள் தன்மை வாய்ந்ததாம். உலகத் துன்பத்தை யோட்டும் தன்மை பெண்களின் புன்முறுவலுக் கெவ்வாறு அமைந்ததோ தெரியவில்லை" என்றும் அப்பால் ஓர் இடத்தில் "பெண்களால் இல்லம் பூரிப்படைகின்றது. பெண்கள் நம்பக்கம் வரும்போது மனம் மலர்கின்றது. நம்மோடு பேசுகையில் இன்பம் பொங்குகின்றது. நம்மை நோக்கும்போது திருப்தி பெருகுகின்றது. நம் பக்கத்தில் சற்று நின்ருல் மனம் குளிர்கின்றது" என்றும் சொல்கின்ருர்.

* * *

இயல்பாகவே, எந்தப் பெண்ணும் தன்னை அழகு படுத்தவே நினைக்கின்ருள்; சதா அதிலேயே கவலை செலுத்துகின்ருள்; அழகைப் பெருக்கவே எப்போதும் நினைக்கின்ருள்! ஒவ்வொரு பெண்ணும் தம் அழகைக் கண்டு ஆடவர் வியக்கின்றனர் என்று நம்புகின்றனர். ஆதலால் தம் அழகினுல் உலகை வெல்லக்கருதுகின்றனர். பெண்கள் புருஷர் மீது ஆட்சி செலுத்துவதும் ஜன சமூகத்தில் ஆதிக்கம் காண்பிக்க நினைப்பதும் தம் அழகு ஆயுதத்தின் சக்தியை நினைத்தாகும். ஆதலால் எப்பொழுதேனும் தான் பழிக்கப்பட்டால், தன் அழகு இகழப்பட்டால் அதனைப் போல் அவளுக்குக் கொலைக் கருவியாய்த் தோற்றுவது ஒன்றுமில்லை. ஆடவர் இந்தப் பெண்களின் இயல்பைத் தெரிந்து கொண்டால் மண வாழ்க்கையில் அமிதமான இன்பத்தைக் காண்பதோடு மனைவியரை எவ்வழியிலும் உபயோகித்தும் கொள்வர். பெண்கள் வேண்டுவதெல்லாம் தாம் அழகுடையோர் என்ற புகழ்மொழி யோன்றே.

இந்த நுட்பத்தை யுணராததாலேயே பல புருஷர்கள் தம் கல்யாண வாழ்க்கையில் நிரம்பிய இன்பத்தைக் காணுது போகின்றனர். அடிக்கடி சண்டை இடுவதும் ஒருகால் உயிர்போல் நேசித்த மனைவி பிணங்கி நிற்பதும் பெண்ணியற்கையைப் புருஷர் தெரிந்துகொள்ளாத குறையின் பயனுகும்.

இந்தியாவில் கொடூரமான உஷ்ண அலைகளின் காரணமாகச் சிலர் வீண் ணுகினர்கள்.

—வாரப் பத்திரிகை.

முமுக்ஷுக்களே! எல்லோரும் இந்தியாவுக்கு வாருங்கள்! தருணத்தைத் தவறவிடாதீர்கள்.

ஆயுதப் பரிஹாரண ஜாலம்

டாக்டர் P. D. தாம்ப்சன் என்ற பாதிரியார் சமீபத்தில் ஒரு மகாநாட்டில் பேசியபோது, “தற்போதிய ஜன சமூகம் நல்லொழுக்கம் கெட்டு, பேராசை, வஞ்சகம், போர்க்குணம், போட்டி, பொறாமை முதலிய தீக்குணங்கள் மல்கி, எப்படியாவது எதிரியை அழித்துத் தன்னாதிக்கத்தைப் பெருக்கிக்கொள்ளவேண்டு மென்பதில் கண்ணுங் கருத்துமா யிருந்து வருகிறது” என்று குறிப்பிட்டார். ஐரோப்பிய அரசுகளின் ஜாலத்தைப் பார்க்கும்போது மேற்படி கூற்று அக்ஷரம் பிரதி மெய்யானதென்றே தோற்றா நிற்கும். ஒவ்வொரு அரசாங்கமும் ஓயாது “சமாதானம், ஐக்கியம், சமநிலை” என்று கூறிக்கொண்டு பிறரைக் குழியில் வீழ்த்திவிடத்தான் முயல்கின்றன. இக்காரணத்தால் எத்தனையோ மாதங்கள் ஆயுதப் பரிஹாரண மகாநாடு நடைபெற்றும் கடைசியில் உப்புக்கு முதவாது பாழாய்ப் போயிற்று. உலக அறிஞர் ஸ்ரீ ஜார்ஜ் பர்னார்டு ஷா இம்மகாநாடு பற்றிக் கூறியிருப்பதாவது:—

“ஆயுதப் பரிஹாரண மகாநாடு ஜினீவாவில் மாதக் கணக்காய் நடைபெற்று, ஒரு ஜர்மானியனை 16 அங்குலக் குண்டு போட்டுக் கொல்வதற்குப் பதிலாக எப்போதும் 10 அங்குலக் குண்டையே போட்டுக் கொல்வதாக இங்கிலாந்து வாக்களித்தால் அதேபோல இங்கிலாந்து விஷயத்திலும் ஜர்மனி நடந்துகொள்ள வாக்களிக்கும் என்றே வாதிக்கப்பட்டது. ஒரு வெடிக்குண்டால் கொல்லப்படுவதா யிருந்தால் அது எவ்வளவு நீளமுடையதா யிருந்தால்தான் என்ன?”

இது ஒருபாலிருக்க, ஒவ்வொரு தேசமும் படை சேர்ப்பதிலும் இதர முஸ்தீபுகள் தயாரிப்பதிலும் காண்பிக்கும் முயற்சி பயப்படத் தகுந்ததாகும். பிரான்ஸ் தேசம் ‘ஆயுத பலமின்றிச் சம்மதமேற்படாது’ என்று கூறிக்கொண்டு தன் படையைப் பெருக்கும் பொருட்டு 500 லட்சம் பொன் செலவிட உத்தேசித்திருக்கிறது. இங்கிலாந்தும் விமானப்படையை விரைந்து பெருக்கி வருவதோடு கடற்படை அபிவிருத்திக்காக மட்டும் 30 லட்சம் பொன் ஒதுக்கி வைத்துள்ளது. அமெரிக்கா 2000 லட்சம் பொன்னிற்குத் திட்டம் வகுத்திருக்கின்றதாம். அதுபோல் இத்தாலியும் தகுந்த முஸ்தீபுகளை அமைத்துக்கொண்டு 25000 டன் நிறையுள்ள யுத்தக்கப்பல் ஒன்றைக் கட்டப்போகிறது. இக்குறிப்புகளோடு, ஜர்மனியும் ஜப்பானும் பிறரறியாதவாறு யுத்த தளவாடங்களைக் கையடக்கம் செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன வென்றும் பல நாட்டிலும் விஞ்ஞான நிபுணர்கள், ரசாயன சாஸ்திரிகள், அறிவியல் சாஸ்திர அறிஞர்கள் புதுப்புதுக்குண்டுகளையும், புதுப்புதுத்துப்பாக்கிகளையும், புதுப்புது விமானங்களையும் கட்டிக்கொண்டு மிருக்கின்றார்களென்றும் தெரியும் போது யார்தான் சமாதானப் பேச்சு நிலைபெறுமென்று நம்புவர்? ஒருக்கால் அமைதிபோல் தோற்றினால் புறத்தோற்றமே யன்றி, உள்ளுக்குள் சுழற்சியும் நீரோட்டமும் இல்லாமலிருக்க முடியாது என்பது உறுதி.

"தீண்டாமை வேரோடு அழியவேண்டும்"

இந்திய தாழ்த்தப்பட்ட வகுப்பு மிஷன் சொஸைட்டியின் வேண்டுகோள்

பம்பாயிலிருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மிஷன் சொஸைட்டியார், இந்திய சட்டசபையில் எம். ஸி. ராஜா அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீண்டாமை யொழிப்பு மசோதாவைப்பற்றி அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கும் அபிப்பிராயமாவது :—

தீண்டாமை யொழிப்பு மசோதாவின் முகவுரையில் காட்டப்பட்டுள்ள காரணங்களையும் நோக்கங்களையும் மனமார நாங்கள் ஆதரிக்கிறோம்.

இந்தியா முழுமையுமுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பார், தேசீய, சமூக, பொருளாதார, மத சம்பந்தமான அநந்தம் குறைபாடுகட்காளாகி மிகவும் வருந்துகின்றனரென்பது தெரிந்த விஷயம். அவர்கட்கிருக்கும் முட்டுக் கட்டைகளே அவர்களை இதுகாலை மிகவும் கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. ஒரு சாரார் பொருளாதார சீர்திருத்த மேற்பட்டால் சமூக நிலைமை உயர்ந்து விடுமென்று வாதிக்கின்றனர். இது ஒருவிதக் குழப்பமான வாதமும் அனுபவத்திற் கொத்து வாராததுமாகும். எத்தனையோ தாழ்த்தப்பட்டவர்கள் ஜாதி ஹிந்துக்களைப் போன்ற பொருள் நிலைமை படைத்திருப்பதை நம்மால் காண்பிக்க முடியும். அந்த ஜனங்கள் யாவரும் தாழ்ந்தவர்களாகவேதான் கருதப்படுகின்றார்கள் ; என்பதோடு பல இடைஞ்சல்கட்கும் அவர்கள் ஆளாகி வருகின்றார்கள். சனாதனிகளில் சிலர் தீண்டாமை என்பது மதத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும் அது நீக்கப்பட்டால் மதம் அழிந்து போகுமென்றும் சொல்வதுண்டு ; அப்படியொன்றுமில்லை. சாஸ்திரங்கள் யாவும் ஒன்றன்பின்னொன்றாய் எழுந்தவைகளும் அவ்வக்காலத்துக் கோட்பாடுகளை உள்ளடக்கியவைகளுமாகும். ஆதலால் சாஸ்திரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கின்றனவென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சாஸ்திரங்களை அப்படியே ஒப்புக்கொள்வதென்பது பரிணாம தத்துவத்திற்காளாகிக் கொண்டிருக்கும் மனிதனின் கொள்கைகளையும், அறிவையும் நீதி நியாய உணர்ச்சியையும் மறைப்பதற் கொப்பாகும். சுவாமி விவேகானந்தர் என்ற ஹிந்து "ஒரு ஸ்மிருதியும் மற்றொரு ஸ்மிருதியும் கருத்தில் வித்தியாசப்படுமானால் இரண்டையும் இரக்கமின்றி அப்பால் வீசு" என்று கூறியிருக்கிறார்! நமது செயலும் அதுவேயாகும். ஹிந்து மதத்திலுள்ள எல்லா சாஸ்திரங்களும் ஏகமுகமாக, தீண்டாமை தற்போதிய பிசாசுத் தன்மையில், நிலவவேண்டு மென்று முழங்கினாலும், அல்லது எந்த உருவத்தில்—நியாய முறைபற்றியோ, அறிவியல் பற்றியோ, தர்க்க முறை பற்றியோ, பிறப்புரிமை பற்றியோ, எப்படி—இருக்க வேண்டுமென்று கூறிய போதிலும், தீண்டாமை வேரோடு அழிந்து போகவே வேண்டும்.

நேர்மையாகக் கூறின், தீண்டாமை மதத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதன்று. அது ஓர்வித வழக்கமும் பழக்கமுமேயாம். பழக்கமும் வழக்கமும் காலத்திற்குத் தகுந்தவண்ணம் மாற்றமடையவேண்டும். அப்படித்தான் பண்டைக்காலத்தில் வந்திருக்கின்றன. ஜாதிப் பாகுபாடும்கூட தற்போது முன்னிருந்தது போன்ற வன்மை பெற்றிருக்கவில்லை. ஜாதி வேற்றுமை தெய்வீகமானதென்று சிலர் சொல்கிறார்கள். அது நகைப்பிற் கிடமானதாகும். உண்மையில் ஜாதி பேதம் மக்களால் வகுக்கப்பட்டது. ஆகவே, தற்பெருமையாலும் அகந்தையாலும் உயர் ஜாதியா ரென்போர் வகுத்திருக்கும் மனிதத் தன்மையற்ற நிலைமையில் தாழ்த்தப்பட்டோர் எப்போதுமிருந்து வரவேண்டு மென்பதில்லை. மனிதர்களென்ற நிலைமையில், தாழ்த்தப்பட்டவர்களும், மற்றவர்களைப் போன்ற சாரீர மானசிக உணர்ச்சி யுற்றிருக்கின்றார்களென்ற நிலைமையில் அவர்களும் உயர்ந்தோர் என்போர், அனுபவித்து வரும் உரிமைகளுக்கும், சௌகரியங்களுக்கும் ஆளாக வேண்டுவதாகும். உயர்ந்தோர் என்பவர்கட்கு "எங்கட்கிருப்பது போன்ற சமூக உரிமை, தேசீய உரிமை, பொருளாதார உரிமை, மத வுரிமை கூடவும் உங்கட்கில்லை" என்று தாழ்த்தப்பட்டவர்களைப் பார்த்துக் கூறுவதற்கு எத்தகைய அதிகாரமுமில்லை.

ஜீவரக்ஷா குணமமைந்த இந்த மசோவுக்கு எல்லோரும்-விசேஷமாகவும் வைதீகர்கள்—ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது சோம்பேறித்தனமாகும். "சதி"யை யொழிப்பதற்கு இயற்றப்பட்ட சட்டம் போன்ற ஒரு முறையாலேயே தீண்டாமையை ஹிந்து மதத்திலிருந்து துடைத்தெறிய முடியும்.

—"ஹரிஜன்".

கற்றவர்க்கும், நலன் நிறைந்த
கன்னியர்க்கும், வண்மைகை
உற்றவர்க்கும், வீரர் என்று
உயர்ந்தவர்க்கும், வாழ்வுடைக்
கொற்றவர்க்கும், உண்மையான
கோதில் ஞான சரிதாம்
நற்றவர்க்கும் ஒன்று சாதி
நன்மை தீமை யில்லையால்.

—ஸ்ரீ வில்லிபுத்தராழ்வார்.

ஆகவே, இப்போது ஜாதி பேதம் காண்பிப்பவர்கள் வகைக்குச் சேராதவர்களா ?

ஜூன் 4-ந் தேதி ஆயுதப் பரிஹரண மகா நாட்டு விவாதம் நடைபெற்ற போது கதவுகள் தாளிடப்பட்டு விட்டனவாம்.

—ராய்ட்டர்ச் செய்தி.

மெம்பர்களை ஓடிவிடாமல் பிடித்து, ஆயுதங்களைப் பரிஹரணம் செய்து விடுவதற்குப்போலும்.

* * *

கணவன்:—ஆ! என்பொக்கிஷமே.

மனைவி:— என் பொக்கிஷதாரே.

கனவில் கல்யாணம்

இ. சிவம் எழுதியது

எனக்கு ஒரு பஞ்சாபி 150 ரூபாய் தரவேண்டுவ துண்டு. அவனிடம் எத்தனையோ தரம் நான் பணிந்து கேட்டும் தருவதாகவில்லை. ஒருநாள் மாலையில் கொஞ்சம் கடுமையாகக் கேட்டேன். அதற்கு, அவன் நயமான விடை சொல்வதற்குப் பதிலாக, என்மீது சீறி விழுந்து பயப்படுத்தினான். பஞ்சாபியர் சாதாரணமாக முரடர்கள் என்பது என் அபிப்பிராயம். ஆதலால் நான் பயந்து வீட்டுக்குத் திரும்பி விட்டேன். என்றாலும் எனக்கு வந்த வருத்தத்திற்கு அளவில்லை. இரவு மணி 9-க்கு நான் தூங்கப்போனது வரையிலும் அவ்வருத்தம் மனதை உறுத்திக்கொண்டே யிருந்தது.

தூக்க மேற்பட்டு 2 நிமிஷமானதும் என் மனதில் இன்னொரு கவலை வந்தது. அது என்ன தெரியுமா ?

எங்கள் தெருவில் விளக்குப் போடுவதற்காக ஒரு பெண்ணை நியமித்திருந்தார்கள்; முனிசிபாலிடியார். அவள்—ஏழ்மையால் அந்த வேலைக்கிறங்கி யிருந்தாலும்-நல்ல அழகும் யௌவனமும் வசீகாமும் பெற்றிருந்தாள். ஆதலால் அவளுக்கு வேலைசெய்ய வருவது அவ்வளவு ருசிகரமா யிருக்கவில்லை. ஆதலால் இரண்டு நாட்களுக்கு ஒருதரம், மூன்று நாட்களுக்கு ஒரு தரந்தான் விளக்கேற்ற வருவாள். இந்தச்செயல் எனக்கு மிகவும் கஷ்டமாகத் தோற்றியது. ஏனெனில் விளக்குமரம் நின்றது என் வீட்டண்டையாகும்.

ஆதல்பற்றி எரிச்சல் மிகுந்து முனிசிபாலிடிக்கு மெதுவாக ஒரு கடிதமெழுதி அனுப்பினேன். பதில் கடிதம், "நீங்கள் எந்தக் குறிப்பிட்ட பெண் ஒழுங்காக விளக்கேற்றவில்லையோ அவள் மீது பிராது தொடுக்கவும்" என்று வந்தது. இதனைக் கண்ட நான் "அடடா! சும்மா கிடக்கும் நான் ரூபாய் 150 இழந்ததுபோக—வழக்கும் தொடரவா! போதும் போதும்....மேலும் அப்பெண் என்ன கஷ்ட காலத்தாலோ முனிசிபல் வேலை செய்கிறாள்!!—அவளை இதமாகக் கண்டிப்பார்களென்று நினைத்தால்—அதற்குப் பதிலாக வழக்காடவும் சாட்சி தயார் செய்யவுமா சொல்கிறார்கள் ? அடுத்த வீட்டு பஞ்சாபி என்னென்ன இடுக்கண்கள் செய்யவேண்டுமோ அத்தனையும் செய்வான். வேண்டாம் வேண்டாம் இந்த வழக்கு சமாசாரம்" என்று சும்மா விருந்தேன்.

* * *

நான் கடிதமெழுதிய விஷயம் அந்தப் பெண்ணுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது. அவள் அதுமுதல் ஒருவாரம் வரையிலும் விளக்கே யேற்றவில்லை. அதற்குப் பதிலாக, பஞ்சாபி வீட்டை நாடி ஏதேதோ இரகசியம் பேசிப் போய்க்கொண்டிருந்தாள். அப்படியே சில நாட்களானதும் இருவரும் காண்பித்த நட்புக்கு அளவு சொல்ல முடியாது. இருவருமே என் வாயில் வழியாகச் செல்வதும், நகைப்பதும், கனைப்பதும், ஜாடை பேசுவதும், ஏளனம் பண்ணுவதுமாகி விட்டது. அஃதுடன் அவளுடைய தழுக்கு, நடை, யுடையெல்லாம் அதிகரித்தும் விட்டன. என்னை அவமானமொரு பக்கமும் கோபமொரு பக்கமுமாக வந்து செய்த தொல்லை சொல்லி முடியாது.

இங்ஙனம் சிலநாள் செல்லவும் ஒரு நாள் மாலை வேளையில் முனிசிபல் சேவகன் கடிதமொன்று தந்தான். அது வருமாறிருந்தது :—

நீங்கள் குறிப்பிட்ட குற்றவாளியின் மேல் இரண்டு நாளைக்குள் வழக்குத் தொடரவேண்டும் ; இல்லையானால் முனிசிபல் சிப்பந்தியைப் பொய்யாகக் குற்றம் சாட்டியதற்காக உம்மேல் வழக்குத் தொடர்ந்து தண்டனை விதிக்கப்படும்.

—முனிசிபல் காரியதரிசி.

* * *

"அடடா ! இதென்ன வினை? தெருவில் விளக்குப் போடாததுபோக, என் மீது வழக்கு! எனக்குத் தண்டனை!! உம்...நல்ல ஸ்தலசுயாட்சி" என்று கலங்கிச் செயலற்றுத் திகைத்து விழித்திருந்தேன். அப்போது பாருங்கள் திடீரென்று வந்தான் பஞ்சாபி. "அடே! பணம் பெற்றுக்கொண்டதாக 'ரசீது' தருகிறாயா ; இறக்கிறாயா ?" என்று அவன் வாய்கூறி நிற்க, கை கூரிய கத்தியொன்றை உயர்த்திற்று. கண்கள் சிவக்க மீசை துடிதுடித்தது. நான் பயந்த பயத்திற்கு அளவு கிடையாது. விளக்கிடும் பெண்ணோ சற்றுத் தூரத்தில் என்னை நோக்கி நின்று "பார்த்தாயா" என்று குழைந்த மேனியில், கனிந்த பார்வையில், அறைந்த வாயுடன், அசைத்த விரலோடு நின்று கொண்டிருந்தாள். அந்த நிலைமையில் எப்படி யிருக்கும் எனக்கு? என் பகைவர் இருவர் கூடிக்கொண்டனர்! போலீசாரிடம் சொல்லலாமென்றால் நான் பொய்யனென்று முனிசிபாலிடியார் முடிவுகட்டி விட்டிருக்கிறார்கள். எனவே என் வார்த்தைக்குப் போலீசார் எப்படி மதிப்பு வைப்பர்? மேலும் கத்திமுன் வந்து நிற்கும்போது போலீசை நாடுவதுதான் எப்படி ?

உடன் ஒரு ரசீதை எழுதி பஞ்சாபி கையில் கொடுத்தேன். அவன் வாங்கிக் கொண்டு, தன் பக்கத்தில் நின்ற அழகிய பெண்ணுக்கு, (என்னைப் பார்த்துக் கொண்டே) ஒரு முத்தம் கொடுத்தான். அதனைக் காணவும் என் கண்களிலும் வாயிலும் நீர் சொட்டிற்று.

கொஞ்ச நேரத்திற்குப்பின் ஆ! என்ன ஆச்சரியம்! இருவரும் திருமணத் திருக்கோலத்துடன் என் வாயில்படியில் வந்து தோன்றினர். பஞ்சாபி நன்றியறிதலுடன் "ஏ தமிழா! நீ மிக நல்லவன். எங்களிருவருக்கும் நட்பும், அப்பால் காதலும், பிறகு இன்பமும், அதன்பின் திருமணமும் ஏற்பட நீதானே காரணம்? நீ முனிசிபாலிடிக்கு மனுப் போடவில்லையானால் அவள் என்னிடம் நேசம் கொள்ளமாட்டாளே. உனக்கு நன்றி சொன்னால் தகும்" என்றான். உடனே பொறாமை அதிகரித்த நான் அப்பெண்ணைப் பார்த்து "எனக்கு நீ யொரு முத்தம் தரமாட்டாயா" என்று கெஞ்சினேன். அப்போது, "இதென்ன மணி ஏழாகியும் தூக்கமா ? குளிக்க வேண்டாமா, காபி சாப்பிட வேண்டாமா ? இதென்ன இன்று—இவ்வளவு தூக்கம்" என்று யாரோ சொல்லும் சத்தம் செவியைத் துளைத்தது. நான் திடீரெனக் கண்ணை விழித்தேன். என் மனைவி பத்மினி பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். முகத்தில் அன்பு கனிய, புன்னகை வழிந்தது. ஆ! எவ்வளவு ஆனந்தம் பத்மினியின் அன்பு! விளக்கேற்றுபவளைப்போல் 50

சந்திர மண்டலத்திற்கு ஜனசமூகம் போனால் தங்க முடியுமா?

(கால்வின் பிரேசர் எழுதுகிறார்)

விஞ்ஞான அறிவு விளக்கம் பெற்று வரு மிக்காலத்தில், மனிதன் வானைத் துளைத்துக்கொண்டு சந்திரன், செவ்வாய் முதலிய கிரகங்கட்குச் செல்ல விரும்புகின்றானென்பதை நேயர்கள் தெரிந்திருக்கலாம். ஜர்மன் நிபுணராகிய புரொபசர் நெபல் "மக்கள் வானத்தில் பறக்க முயலு முன்பு, வானத் தீவுகள் பலவற்றை அமைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு அமைத்துக்கொண்டால்தான் விமானிகட்கு வழியில் தங்கி இளைப்பாற முடியும்" என்கின்றார். அஃதோடு எவ்வாறு வானத் தீவுகளை அமைக்க முடியும் என்ற முறைகளையும் தருகின்றார். இவர் கூற்று ஒருபாலிருக்க, லியான்ஸ் வான சாஸ்திர கழகத்தார்கள் ரேடியத்தினாலியங்கும் விமானமொன்றைக் கட்டுவதானால் சற்றேறக்குறைய 48 மணி நேரத்தில் சந்திரனை அடைந்து விடலாமென்கின்றனர். இங்ஙனம் பலருடைய கூற்று பலமாதிரியாக விருந்தாலும், சந்திரனில் மக்கள் வசிக்க முடியுமா, அதன் இயல்பு என்ன என்றறிவது மிகவும் அவசியமானதாகும். மிஸ்டர் கால்வின் பிரேசர் இவைபற்றி எழுதும் சில குறிப்புகளைக் கீழே தருகிறோம் :—

அதிக உஷ்ணமில்லை.

இது வரையிலும் பலர், சூரிய வெளிச்ச மேற்கும்போது சந்திரன் மிக்வும் அதிகமான வெப்பத்தைப் பெற்றிருக்குமென்றும், இராக் காலங்களில் மிகவும் குளிர்ச்சி யடைந்திருக்குமென்றும் எண்ணி வந்தார்கள். (காரணம் சந்திரனைச் சுற்றிலும் சூட்டை வாங்கிச் சேமித்து வைத்துக்கொள்ளும் வாயு மண்டலமில்லை என்பதே) சமீபத்தில் சில அமெரிக்க நிபுணர்கள் "தெர்மோகூபில்" என்ற ஒருவித சூடளக்கும் கருவியைச்செய்து மௌண்டு வில்சனிலிருக்கும் தூரதர்சினியோடு இணைத்துச் சந்திரனைப் பரிசோதித்ததில், சூரிய வெளிச்சம் எவ்வளவு செங்குத்தாக விழுந்தாலும், தண்ணீர் கொதிப் பெடுக்கும் அளவுக்குக்கூட சூடேறுவதில்லையென்று தெரிந்துகொண்டார்கள். அஃதுடன் சந்திரனைசுற்றி யிருக்குமிடம் இராப்பகல் பனிக்கட்டி போன்றே குளிர்ந்திருக்கின்றதென்றும் கிருஷ்ண பக்ஷத்தின்போது (அதாவது 15 நாட்கள்) சந்திரகோளம் குளிர்ந்து ஜீரோ டிக்ரியின் கீழ் 240 டிக்ரிக்கு வந்து விடுகின்றதென்றும் தெரிந்து கொண்டார்கள். ஆகவே நிதானமாக நடு நிசியிலும் நடுப்பகலிலும் சந்திரனில் சீதோஷ்ணம் 450 டிக்ரி வித்தியாசப்படுகிறது என்று சொல்லலாம். எனவே மனிதர்கள் அங்கு தங்குவதெப்படி ?

மேற்பரப்பு சாம்பல் மயம்.

பண்டைக்கால வானசாஸ்திரிகள் சந்திரனின் மேற்பரப்பைப் பற்றி என்ன மாதிரி நினைத்திருந்தாலும், நாம் நிச்சயமாகவும் சந்திரனை எரிமலைச் சாம்பலே மூடி யிருக்கின்றதென்று உணர்வோம். R. W. வுட் என்ற நிபுணர், கலர் "ஸ்க்ரீன்"களும் பிலேட்டுகளுமுள்ள புகைப்படக் கூண்டின் மூலம் சமீபத்தில் சந்திரனைப் படம் பிடித்தார். அப்படத்தால் அந்தக் கோளம் கந்தகம் பொதிந்த பல பாறைகளோடு, எண்ணிறந்த கந்தகக் குவியல்களையும் உடைத்திருக்கின்றதென்று தெரிந்தது. எனவே சந்திரனிலுள்ள சூடு முழுதும் பல எரிமலையுடைவுகளால் வெளியாகி விட்டதென்பதற்கும், நம் கண்ணுக்குப் புலப்படுகின்ற இருண்ட இடங்களெல்லாம் அவ்வெரிமலைகளிலுள்ள துவாரங்களேயென்பதற்கும் சந்தேகமில்லை.

எரி வெள்ளித் துவாரங்கள்.

அஃதோடு எரி வெள்ளிகள் பல அவ்வப்போது சந்திரன்மீது பாய்ந்து அதனால் ஏற்பட்ட வடுக்களும் குகைகள் போன்று தோற்றுகின்றன என்ற கொள்கையையும் ஏற்றுக்கொள்ளலாம். பூமியை, வாயு மண்டலம் நன்றாகக் காத்து நின்றாலுங்கூட எத்தனையோ எரி வெள்ளிகள் தாக்கித் தொளைப்பதை நாம் அறிவோம். உதாரணமாக அரிஜோனாப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால், அநந்தம் வெள்ளிகள் ஊடுருவிச் சென்றிருப்பதைக் காணலாம். சில ஆராய்ச்சியாளர், உண்மை தெரியும் பொருட்டு, ஈயத்தால் சிறிய சந்திரனை அமைத்து, துப்பாக்கியால் சுட்டுப் பார்த்ததில் அவ்வடுக்கள் சந்திரனின் காயங்களைப் போலவே தோன்றின. ஆகவே அளவிட முடியாத வேகத்தோடு பாயும் எரி வெள்ளி சந்திரனைத் தொளைத்து விட்டதென்று கொள்வதில் பிசகில்லை.

விசேஷ "வெண்" ஒளி.


இந்த விடத்தில் சந்திரனிலிருந்து வெளிப்படுவதும், விஞ்ஞானிகளை மயக்குவதுமான "வெண்" ஒளியின் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளலாம். பல பாறைகள் எரி வெள்ளி வீழ்ச்சியால் உருகிப்போனதிலிருந்து பிரகாசிக்கும் வெளிச்சமே அவ்வெண்ணொளி.

சந்திரனின் கவர்ச்சி.

சந்திரன் பூமியோடு சேர்ந்து பிரகாசித்துக் கடல் நீரை மேனோக்கி இழுத்து வேலி யேற்றத்தை உண்டு பண்ணுகின்றானென்பதையும், பூமியை இழுத்துச் சில பாகங்களை உயரும்படிச் செய்கின்றானென்பதையும் பலர் தெரிந்திருக்கலாம். ஒரு சிலர் பூகம்பத்திற்கும் சந்திரனின் கவர்ச்சி வலி காரணம் என்றெண்ணுவது சிலகால் உண்மையாக இருக்கலாம். சீதோஷ்ணம் சந்திரனால் மாறுபடுகின்றதென்பது வெளிப்படை.

பிராணி சாஸ்திர ஆராய்ச்சியாளராகிய மிஸ்டர் H. மன்ரோ பாக்ஸ் என்பவர், சந்திரப் பிரகாசமிருக்கும் காலத்தில் தான் சில ஜீவிகள் முட்டை யிடுகின்றனவென்கின்றார். செங்கடலி (Red Sea)லுள்ள ஒருவித மீனும், பெசபிக் மகா சமுத்திரத்திலுள்ள பவழப் புழுக்களும் பௌர்ணமியன்றுதான் (வருடத்தில் ஒருமுறை) முட்டையிடுகின்றனவாம்.

ஆயிரந்தாம் அழகு மிக்கவள், தூயமேனியள், புனித சிந்தையள் என் மனைவி! நான் தூக்க மெழுந்ததும் பத்மினியை ஒரு முத்தத்தால் அலங்கரித்தேன். அவள் அன்பாக ஏற்றுக்கொண்டு "இன்றென்ன புதுமையாயிருக்கிறதே" என்று ....என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அன்பு—என் காதல் ஜொலிக்க தம் பவள இதழ்களை என் முகத்திற்கெதிராக...... .....!!



விகடத்திரள்

ஆசிரியர்:— வினைச்சொல்லைக் கண்டு பிடிப்பது எப்படி ?

மாணவன்:— ஊரில் வருகிற சண்டைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து எந்த வார்த்தை சண்டைக்கு ஆதாரமாயிருந்தது என்று தெரிந்து கொண்டால் இன்னதுதான் வினைச்சொல் என்று கூறிவிடலாம்.

* * *



எஜமானி:— இந்தக் கலர்ப் புடவை நன்றாக வெளுத்து விட்டதே.

வண்ணான்:— கலர் எல்லாம் தண்ணீரில் கரைந்து போயிற்று, அம்மா.

எஜமானி:—இது ஏன் வெளுக்காமலிருக்கிறது?

வண்ணான்:—அதில் வெள்ளை யெல்லாம் கரைந்து போய் விட்டது.

* * *

"நாவாய் என்றால் என்ன"

" நாயின் வாய், சார் "

* * *

புதல்வன்:—என் அப்பா பட்டைப் பார்த்து சிலுக்கு சிலுக்கு என்கிறார்கள்?

நாட்டுப்புறத்தான்:—கண்ணுக்கு சிலுக்கு சிலுக்கென்றிருப்பதால்.

* * *

ரயில்வண்டி நகரத் தொடங்கியதும் ஒரு கிச்சலிப்பழத்தோட்டை வெளியே போட்டார் ஒருவர்.

கார்டு:—இப்படிப்பட்டவற்றைக் கம்பனி ஒப்புக்கொள்ளாது.

பிரயாணி:—அப்படியானால் போர்ட்டர்களை அழைத்துப் பங்கு வைத்துக் கொள்ளச் சொல்லுங்கள்.

* * *

இன்ஸ்பெக்டர்:— பூமி உருண்டை வடிவமானதென்பது எப்படித்தெரியும்.

ஒரு மாணவன்:—வாத்தியார் சொல்லிக் கொடுத்ததால்.

* * *

தாய்:—ஏண்டா? அந்தக் கிழவியைக் கட்டவேண்டு மென்கின்றாய்?

சிறுவன்:—அவள் பணக்காரி அம்மா.

தாய்:—எப்படித் தெரிகிறது?

சிறுவன்:— தங்கப் பல் கட்டியிருக்கிறாளே.



மானேஜர்:— அடே, நேற்று நீ உன் மாமியின் துக்கத்துக்குப் போக வேண்டுமென்று லீவ் எடுத்துக்கொண்டாயல்லவா? இன்று அவள் இறக்க வில்லையென்று கேள்விப்பட்டேனே.

வேலைக்காரன்:— நான் மாமி இறந்ததாகக் கூறவில்லையே.

* * *

அமெரிக்க சென்றிருக்கும் நீலநாகினி தேவி (நீல கிராம் குக்) இந்தியாவைப் பற்றியொரு புஸ்தகம் எழுதப் போகிறாளாம்.

—வாரப் பத்திரிகை.

அத்தனையும் பைத்தியமாயிருக்கும் போலும்.

* * *

இலக்கண போதகர்:— பிழைதிருத்துக: நீரழிவுக்கு கைகண்ட மருந்து.

சீடன்:—உம் அழிவுக்குக் கைகண்ட மருந்து என்றிருக்க வேண்டும்.

* * *

சொற்பொழிவாளர்:— எனக்குப் பேசக் கொடுத்திருக்கும் நேரம் 10 நிமிஷம். ஆதலால் எங்கிருந்து ஆரம்பிப்பதென்று தெரியவில்லை.

கூட்டத்திலிருந்து ஒருவர்:—ஒன்பதாவது நிமிஷத்திலிருந்து தொடங்குங்கள்.

* * *

மனைவி:— (கோபத்தோடு) நான் கல்யாணமாகிவந்த இத்தனை நாட்களுக்குள் நீங்கள் துணிகரமாக ஏதேனும் செய்ததுண்டா?

புருஷன்:— உன்னை மணம் செய்த அன்றைக்கே தற்கொலை செய்து கொள்ளாது உயிர் வாழ்கின்றேனே; அது ஒரு துணிகரச் செயலல்லவா ?

* * *

வர்ணமென்ன?

மஞ்சக்குளத்தில் ஒரு கருமானிருந்தான். அவன்பெயர் நீலன். அவனுடைய புதல்வன் பெயர் கறுப்பன். கறுப்பனுக்கு ஒரு பெண் கட்டப்பட்டது; அவள் பெயர் சிகப்பி. சிகப்பியுடைய தந்தையின் பெயர் இருளன். அவனுடைய சொந்தவூர் வெள்ளூர்.

* * *

குபேர பரம்பரை

செட்டிமார் நாட்டிலுள்ள அளகாபுரியில் பாக்கியம் பிள்ளை யென ஒருவர். அவர் மனைவியார் பெயர் செல்வம். அவளுக்கு ஒரு பெண் பிறந்திருந்தது. அதன் பெயர் தனம்.

மின்வெட்டு

12

"அந்தோ! பத்துப்பேர் காயமுண்டனர். —செய்தி

வருத்தம் வேண்டாம். உடனே பேதிக்குச்சாப்பிட்டுவிட்டால் போதும்.

* * *

ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே அறியவேண்டும்.

—"பெண்கட்கு உபதேசம்"

அதற்கு வயது பதின்மூன்றுக்கு மேலாவது ஆகவேண்டும்.

* * *

ராசீபுரத்தில் ஜூன் 2, 3 தேதிகளில் கனத்தமழைபெய்து பல மரங்கள், செடி கொடிகள் அழிந்து பட்டன. இவ்வூரில் அடிக்கடி இவ்வாறு மழைபெய்து நாச மேற்படுவது இயல்பு.

—பத்திரிகைச் செய்தி.

மழைக்கும் அவ்வூருக்கும் ராசியில்லை போலிருக்கிறது.

* * *

முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பதென்றாலென்ன?

—நண்பர் கேள்வி.

எலக்ஷன் காலத்தில் அபேக்ஷகர் காண்பிக்கும் தேசாபிமானம்.

* * *

அமெரிக்காவிலுள்ள கல்லெண்டர் என்ற விடத்திலிருக்கும் 22 வயதான ஓர் பெண் ஒரே தடவையில் 5 பெண் குழந்தைகளைப் பெற்றுளளாம்.

பிராணிநூலறிஞர்களே! இப்பெண் பெற்றாளென்று சொல்வதா, குட்டி போட்டாளென்று கூறுவதா? எது பொருத்தம்?

* * *

பெயர் போர்ட் (அமெரிக்க) என்ற விடத்தில் ஒரு பெட்டைக்கோழி, ஒன்றக்குள் ஒன்றாக விருக்கும் இரட்டை முட்டை யொன்றைப் போட்டதாம்.

வழக்கத்தைக் கைவிட்ட இக்கோழியை இந்திய வைதிகர் கண்டிருந்தால் ஒரு பெட்டிஷன் தயாரித்திருப்பர்.

* * *

முத்துச் சிப்பிகட்குச் சிந்தனைசக்தியோ பேசு மாற்றலோ கிடையாது என்கின்றார் ஒரு தத்துவ சாஸ்திரி.

அப்படியானல் எந்த முத்துச்சிப்பியும் ஸ்ரீ சங்கராச்சாரியாரைப் பின்பற்றலாம்.

வடமதுரையிலுள்ள காண்டி சரூப் என்ற ஒரு பீ. எ. பட்டதாரி வயிறு வளர்ப்பதற்காக செருப்புத் துடைக்கும் வேலையை மேற்கொண்டிருக்கிறார்.

—பத்திரிகைச் செய்தி.

ஆங்கில பாடசாலைசெல்லாதவர்களே! பட்டதாரிகளாவதின் பயனென்னவென்று காண்பிக்கும் திரு. சரூப் அவர்கட்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளியுங்கள்.

* * *

பர்மாப் பிரிவினையைப் பற்றி அபிப்பிராயங்கூறும் ஒரு நிபுணர் டில்லியிலிருந்து பர்மா மிகமிகத் தூரமாயிருப்பதால் இந்தியாவின் ஆட்சியிலிருக்கக்கூடாதென்றும், இங்கிலாந்தின் நேர் ஆட்சியிலிருக்க வேண்டுமெனவும் கூறுகிறார்.

—பத்திரிகைச் செய்தி.

இங்கிலாந்து, டில்லியைவிட பர்மாவின் சமீபமல்லவா? அதுதான் சிபார்சு செய்கிறார் நிபுணர்.

* * *



சென்னையில் தயாரிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீநிவாச கல்யாணம் என்னும் தமிழ்ப் பேசும் படக்காட்சியில் விஷ்ணுவாக நடிக்கும் மிஸ்டர். ஸ்ரீநிவாச ராவ், B.A.-யும் லக்ஷ்மியாக நடிக்கும் மிஸ். லக்ஷ்மிதேவியும்,

ஆன்மாவின் ஆஸ்பத்திரி

பூர்வீகப் புத்தகாலயங்களின் வரலாறு

'கூரியர் மெயில்' என்னும் ஆங்கிலப் பத்திரிகை எழுதுவதாவது :—

பண்டைக் காலம் முதல் இந்நாள் வரையிலும் புத்தகங்கள் பலவற்றைச் சேகரித்து வைப்பது ஓர் சிறந்த நாகரிக சின்னமென்றும், அவற்றை அழிப்பது அறிவற்ற ராக்ஷசத் தன்மை யென்றும் எல்லாத் தேசத்தினரும் கருதி வந்திருக்கின்றார்கள்.

பழம் சரித்திரங்களை எடுத்துப் பார்த்தால் நாகரிகம் முதிர்ந்த பல தேசங்கள் பெரும் பெரும் புத்தகாலயங்களை நிறுவிக் காப்பாற்றி வந்திருப்பதாகக் காணலாம். அவற்றில் மிகப் பழமையான ஒரு புத்தகசாலையின் நாமத்தை சிசிலி தேச வாசியான டியோடாரஸ் என்னும் சரித்திராசிரியர் குறிப்பிடுகிறார். அவர் (டியோடாரஸ்) சற்றேறக் குறைய இயேசுநாதர் சிலுவையி லடிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்து வந்தவராவர். ஆசிமாண்டியாஸ் என்ற அரசரால் எகிப்து தேசத்தில் கிருஸ்துவுக்கு 1400 வருடங்கட்கு முன்பு நிறுவப்பட்ட புத்தகாலயமே மிகப் பெரிது என்பது அவரது அபிப்பிராயம். இந்த (பிரஸ்தாப)ப் புத்தகாலயத்தில்தான் மோஸஸ் என்னும் பெரியார் (விவிலியத்தில் காண்க) கல்வி கற்றுப் பெரும் பண்டிதரானாராம்! எனில் இப்புத்தகசாலையின் புனிதம் எவ்வளவு!

இந்தப் புத்தகசாலை மிகமிகப் பிரயோஜனமுடையதா யிருந்ததினால் அதன் முன்னால் (வாயிலின் மேல்) "ஆத்மாவின் ஆஸ்பத்திரி" என்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்ததாம். டியோடாரஸ் அதனைக்கண்டு பிரமித்து விட்டதாகக் கூறுகிறார்.

இந்த அரும்பெரும் புத்தகாலயத்திற்குப் பிற்காலத்தில் என்ன நேரிட்டதென்று திட்டமாகக் கூறமுடியவில்லை; எனினும் பாரசீகர் (பெர்ஷியன்ஸ்) படையெடுத்துச் சென்று எகிப்தை யழித்தபோது, நெருப்புக்கு இரையாகியிருக்க வேண்டுமென்று யூகிக்கப்படுகிறது.

அடுத்தபடியாகப் பிரக்யாதி பெற்றவோர் புத்தகாலயம் கிரேக்கர்களால் போற்றப்பட்டதாகும். அதனை அமைக்கக் காரணபூதரா யிருந்தவர் அசுர்பானிபால் என்பவராவர். அவர் காலத்தின் பின்னர் இந்தப் பெரும் பொக்கிஷம் அழிந்து படவில்லை. மோஸல் என்ற குன்றின்கீழ் புதைந்துவிட்டது. அதனை கி. பி. 1850ம் வருடம்—அதாவது இற்றைக்குச் சுமார் 80 வருடங்கட்கு முன்பு—லேயார்டு என்ற ஆங்கில பண்டிதர் கண்டு பிடித்தார். அவர் (லேயார்டு) நினவே என்னும் பூர்வீக அரசிருக்கையைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவராவர்.

இந்தக் கிரேக்கப் பொக்கிஷம் 2500 வருடமாக மண்ணில் புதைந்து கிடந்தது என்றால் எவ்வளவு பெரும் வியப்பு! அதிலுள்ள புத்தகப் பெட்டிகள் பலவும் நொறுங்கிப் போயிருந்தன. ஏடுகளும் சில சிதைந்தே இருந்தன. எனினும் பிரயோசனப்பட்டவை பல. அவை ஒரு அங்குலம் முதல் ஒரு அடி வரையிலும் விஸ்தாரம் பெற்றிருந்தனவாம். அவற்றிலெழுதப் பெற்றிருந்த எழுத்துக்கள் சிலவற்றைப் பூதக்கண்ணாடியினாலேயே வாசிக்க முடியும். அசீரிய மொழி தெரிந்தோர் நன்றாக வாசித்துப் பல சரித்திர உண்மைகளைத் தெரிந்து கொள்கின்றார்கள். இன்று அவ்வேடுகளில் பலவற்றைப் பிரிட்டிஷ் பொருட்காட்சிச்சாலையில் காணலாம். அவைகளில் சூரிய சந்திர கிரகணங்களின் வரலாறும், பாபிலோணியன் சாம்ராஜ்யத்தில் ஏற்பட்ட பிரளயங்களும் அழிவும் விளக்கப்பட்டுள்ளன. அதனை வான சாஸ்திரிகள் பெரும் விருந்தாகக்கொள்கின்றனர். அப்புத்தகாலயத்தைச் சேர்ந்த ஒரு ஏட்டினால், நோவா என்ற பூர்வீக மனிதன் (அதாவது பிரளயத்தில் அழிந்து விடாமல் பல்லாயிர வருடம் மிதந்துகொண்டிருந்தவர்) "உட்நாபிஷ்திம்" என்ற ஒரு பெரிய கப்பலைக்கட்டி அதில் வாழ்ந்தார் என்று தெரிகிறது.

அந்தப் புத்தகாலயத்திலுள்ள ஒவ்வொரு ஏட்டிலும் அதனைச் சேகரித்த அரசரின் முத்திரையும் ஒரு சாப வாக்கியமும் காணப்படுகின்றன. சாப வாக்கியம், "இந்த ஏடுகளை யார் யார் எடுத்துக்கொண்டு போகிறார்களோ, யார் யார் என் பெயரோடு அவர்களுடைய பெயரையும் பொறித்துக் கொள்கிறார்களோ அவர்களை 'அசுரும், பெலிட்டும்' அழிப்பார்களாக. இத் தேவதைகள் ஏட்டை யெடுப்போரின் பெயரையும் சந்ததியாரையும் மண்ணோடு அழித்திடுக" என்பதாகும்.

இங்ஙனமே பண்டைக் காலத்தில் அநேகப் புத்தகாலயங்கள் இருந்திருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. அவற்றில் நன்கமைந்த சில, ஆதன்ஸ் நகரத்திலும் (கிரீஸில்) ரோம் நகரத்திலு மிருந்தவைகளாகும். ஆதன்ஸிலிருந்தவை கிருஸ்துவுக்கு முன்பு ஏற்படுத்தப் பட்டவைகளும், ரோமில் அமைந்தவை கிருஸ்துவுக்குப் பின்பு ஏற்பட்டவையுமா மென்பதில் ஐயமில்லை. இவற்றைவிடச் சிறந்ததாக அலக்ஸாண்ட்ரியாவில் இருந்த டோலிமிகள் (ஒரு ஜாதியார்) புத்தகாலயத்தையே குறிப்பிடலாம். அதில் கிட்டத்தட்ட 4 லட்சம் நூல்களிருந்ததாகத் தெரிகிறது. டோலிமிகட்குப் புத்தகங்கள் சேகரிப்பதிலிருந்த ஆசையைக் குறிப்பிட முடியாது. ஒரு காலத்தில், ஆதன்ஸ் நகரத்தில் பஞ்ச மேற்பட்டதாம். அதுபோது ஒரு டோலிமி கப்பல் கப்பலாகக் கோதுமையைக் கொடுத்துவிட்டு எய்ஷிலஸ், சோபோக்லிஸ், யூரிபிடிஸ் என்ற மூன்று கவிவாணர் பாடல்களையும் பெற்றாராம். சிறிது காலத்திற்குப் பிறகு, அப்பாடல்களை "காபி" எடுத்துவிட்டுத் திருப்பியனுப்பி விட்டாராம். இதே போல அந்த டோலிமி அரசர் பன்முறை, பற்பல கிரேக்க பண்டிதர்கள், புலவர்கள், தத்துவ ஞானிகளாகியவர்களைத் தம் நாட்டுக்கழைத்துப் புத்தகங்கள் எழுதித் தரும்படி பணித்தும், ஹீப்ரூ முதலிய வெளி நாட்டுப் பாஷைகளிலிருந்த நூல்களை மொழி பெயர்த்துக் கொடுக்கச் சொல்லியும் உபயோகப்படுத்திக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

இப்படி யெல்லாம் அரும்பாடுபட்டுச் சேகரித்த எகிப்தியப் புத்தகாலயத்தின் ஒரு பகுதியை (டோலிமிகள் தேட்டத்தின் ஒரு பகுதியை) ஜூலியஸ்சீசர் என்ற ரோமச் சக்ரவர்த்தி படையெடுத்துச் சென்றபோது அழித்து விட்டார்!

அந்த ஜூலியஸ் சீசரே பிற்காலத்தில் அவருடைய நாட்டில் ஓர் பெரிய இலவச வாசகசாலையை ஆரம்பிக்க முயற்சி செய்தாரென்று சரித்திரத்தில் படிக்கிறோம்.

அது ஒரு பாலிருக்க, அலக்ஜாண்டிரியன் புத்தகாலயத்தின் கதி என்னவாயிற்று? அதனை நினைக்க நினைக்கப் பரிதாபமாகும். காலிப் உமார் என்பவர் எகிப்தை அடக்கியபோது "எனது கொரான் வேதத்தில் உலகிலுள்ள சகல அறிவுமிருக்க இவ்வளவு பெரிய புத்தகாலயம் எதற்கு?" என்றுகூறி அப்புத்தகாலயத்திலுள்ள நூல்களையெல்லாம் விறகாகப் பல மாதங்கள் உபயோகித்து எரித்தாராம்!! அந்தக் கொடும் செய்கையோடுதான் பூர்வீக கால அறிவு கெட்டுப்போக உலகையோர் பெரும் இருள் வந்து சூழத்தொடங்கியது.

என்றாலும் முற்றிலும் இருண்டுவிடவில்லை. ஆங்காங்கு சிறிது சிறிது அறிவு விளக்குப் பிரகாசித்து வந்தது. அந்த விளக்கிற்கான எண்ணெயைச் சிறு சிறு சந்யாசி மடங்களின் சுவர்களுக்குள் அடங்கியிருந்த, குட்டிப் புத்தகாலயங்கள் வழங்கின. அவற்றை அவ்வப்போது பகைவர்கள் அழித்ததாகச் சரித்திரம் கூறுகிறது; எனினும் இன்று சிலவற்றையேனும் நாம் காணலாம்.

அச்சு இயந்திரங்கள் தோன்றியதும், படிப்பு நாட்டில் முதிர்ந்துவிட, புத்தகங்கள் கோடிக் கணக்கில் தலைகாட்ட ஆரம்பித்தன; அதோடு புதுப் புத்தகாலயங்கள் நிறுவவேண்டுமென்ற ஆசையும் தலையெடுத்தது. அவ்வாசையால் பாதிக்கப்பட்ட உரோமப் பெரியார் ஐந்தாவது நிக்கோலஸ், 1453-ல் துருக்கியர் வீழ்ந்ததோடு அவர்களிடமுள்ள நூல்களைக் கொணர்ந்து வட்டிகனில் (ரோமில்) ஒரு பெரிய ஆலயத்தை உண்டு பண்ணினார். அதேபோல காஸிமோடி மெடிஸி என்பவர் பிளாரன்ஸ் நகரில் மற்றொரு புத்தகாலயத்தை ஏற்படுத்தினார். நல்ல வேளையாக அவைகள் இன்றுமிருக்கின்றன.

தற்போது உலகம் முழுவதிலும் புத்தகாலயங்கள் அமைக்க வேண்டுமென்ற ஆசை பரந்து வருகிறது. எனவே தனவந்தர்கள் அரசர்கள் தலைவர்கள் ஆகியோரமைத்த புத்தகாலயங்கள் எண்ணிறந்தவற்றை காண்கிறோம்.

உலகப் போக்கு

லாகூருக்குச் சமீபம்

ஒரு மௌல்வி ஒரு பெண்ணுக்கு ஒழுங்காகப் பாடம் போதித்து வந்தார். பெண்ணும் முறையாகப் பாடத்தைக் கேட்டு வந்தாள். அப்படியே இருக்க, ஒருநாள் ஆசிரியர் மெதுவாகப் பாட முறையை வேறு வழியில் செலுத்தப் பார்த்தாராம். பெண்ணுக்கு அந்த முறை பிடிக்கவில்லை. உடனே அவள்—ஏதாவது அவரிடம் கூறினாளோ என்னவோ; அந்தச் செய்தி மௌல்வி வாத்தியாரினால் சொல்லப்படவில்லை—உடன் அவள் லக்ஷ்மணனாக ஆக்டு செய்து, அவரைச் சூர்ப்பணகையாக்கிவிட்டாள். அதன் பயனாக அவருடைய மூக்கில் ஒரு பெரும் பகுதி உடம்பை விட்டு நீங்கிவிட்டது. உடனே அவருடைய காமவேட்கையும் ஓடிவிட்டதாம்.—பெண் கெட்டிக்காரி! மௌல்வியின் வேட்கை எந்த விடத்திலிருக்கிறதென்று கண்டுகொண்டாள்! இப்போது மாணவியிடமிருந்து பாடம் கற்றுக்கொண்ட வாத்தியார், தன் மூக்கைத் திருப்பிக் கொடுக்கவேண்டும்; அல்லது பெண்ணைத் தண்டிக்கவேண்டுமென்று மாஜிஸ்திரேட் ஒருவரிடம் பிராது கொடுத்திருக்கிறாராம். பாவம்! தனக்கு வரவேண்டிய சம்பளத்தைப் பற்றிய ஞாபகமொன்றுமே அவருக்கில்லை. இப்போது மாஜிஸ்திரேட்டைப் பார்ப்பதும், பெண்ணை நினைத்துக் கனவு காண்பதும், மூக்கிற்கு எண்ணெய்ப் போடுவதுமாய்க் காலம் தள்ளுகிறார்.

பாகால் ராஜா என்ப்வர்

ஒரு சிற்றரசர். அவர் 12 வருடத்திற்கு முன்பு இறந்து போய்விட்டாராம். அதுபோது அந்தத் தேசத்திலுள்ள இருவர் மொட்டை யடிக்கவில்லையாம்; அதற்காக இருவருக்கும் ரூபாய் 600 அபராதம் போட்டு ஜங்கம சொத்துக்களை ஏலம் போட்டுவிட்டார்களாம் சர்க்கார்! என்ன வேடிக்கை! ஒரு அரசர் செத்தால் சமஸ்தான வாசிகளெல்லாம் தாற்காலிகமாக விதவைகளாகிக் கொள்வதென்றால் ராஜா வைத்திருக்கும் வைப்பைப் பார்க்கவில்லையா?—குற்றவாளிகளிருவரும் அயல் நாட்டு வாசிகளாம். ஆதலால் அவர்கள், "ராஜா இறந்தபோது நாட்டிலில்லை; இருந்தால் அம்பட்டனுக்குத் தயங்காது காசு கொடுத்திருப்போம்" என்று கூறி இப்போது அப்பீல் கொடுத்திருக்கிறார்களாம்! அதிகாரிகள் மொட்டை போடுவது குடிகள் வழக்கமென்றும், அதனை மீறி நடப்பது பாவமென்றும் சொல்கிறார்கள். அட பாவி வழக்கம்! எதற்குள் போய் நுழைந்திருக்கிறது! அரசர்களே இப்படி வழக்கங்களை வற்புறுத்தினால்—குடிகளை முண்டங்களாக்குவதில் மரியாதை நுழைந்திருக்கிறதென்று நினைத்தால்—என் வைதீகர்கள் வழக்கம், வழக்கமென்று கத்தமாட்டார்கள்! உலகமெல்லாம் அரசன் வேண்டாம், ஜனங்களே ஜனங்களை ஆண்டுகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி பரந்துவரும் இக்காலத்தில், ஒருவர் தன் மரணத்திற்காக லக்ஷக் கணக்கான பேரை மொட்டை யடிப்பதென்றால்—அதில், யாரோ ஒருவரிருவர்—எக்காரணம் பற்றியோ மயிர் நீக்கத் தவறிவிட்டதற்காக 600 ரூபாய் அபராதம் போடுவதென்றால் எவ்வளவு ரசம்! வேடிக்கை.

இந்த நவீன காலத்தில்—

புருஷனும் பெண்ணும் இரவு ஒன்பது மணி வரையிலும் தனியாகக் கடற்கரையில் இன்பொழுது போக்கியும் ஒன்றும் அசம்பாவிதம் நிகழ்ந்து விடாத இந்தக் காலத்தில்—பெண்கள் சட்டசபை மெம்பர்களாகவும் மந்திரிகளாகவும் தளகர்த்தர்களாகவுமிருந்து வரும் இப்புது யுகத்தில்—சில பெண்களை முகத்தையெல்லாம் மூடிப் புதைத்து, உடம்பு வெளியே தெரிந்தால் கருடன் வந்து தூக்கிக்கொண்டு போய்விடுமென்று அஞ்சுகின்ற மாதிரியில் வைத்திருக்க வேண்டாமென்றால் சிலர், அப்பேச்சை மீசையைத் திருகும் ஓர் தருணமாகக் கொள்கின்றனர்; சிலர் கபத்தை யகற்றும் நேரமாகக் கொள்

உலகப் போக்கு

இன்றனர்; சிலர் கை கால்கட்குப் பயிற்சி கொடுக்கின்றனர்; வேறு சிலர் தங்கள் கண்கள் எவ்வளவு பெரியவை யென்று பிரகடனம் செய்கின்றார்கள். இவர்கட்கு, மறைந்திருக்க இருக்க வெளியாரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை மிகுமென்பது தெரியாமலிருப்பது ஒரு துரதிர்ஷ்டம். போகட்டும். சில நாட்களுக்கு முன்பு சென்னை வண்ணாரப்பேட்டையில் ஒரு முஸ்லீம் வீடு நெருப்புப் பற்றிக் கொண்டபோது வீட்டிலுள்ளாரெல்லாம் வெளியில் ஓடி வந்து தப்பிக் கொள்ள, கோஷா முறை இத்தத்தி ஊறிப் பலம் பெற்றுப்போன இரு பெண்மணிகள் வெளியே வர நாணி நெருப்புக் கிரையாகிப் போனார்களாம்! ஆ! அவர்கள் உயிர் எப்படித் துடிதுடித்திருக்கும்! அதைவிட அவசியம் பற்றி வெளிவரப் பழகுவது கெடுதியானதா?

பீஹார் பூகம்பம்

திடீரெனத் தோன்றி பல கோடிக் கணக்கான பொருள் நஷ்டத்தை உண்டுபண்ணி விட்டதென வருத்தப்படுகிறார்கள் பல்லோர். ஆனால் பகல்பூர், ஷேக் கனீப் என்ற "முஸ்லீம்", வருந்துவது தவறென்றும், கடவுள் பேரதிர்ச்சியோடு பூமியைத் துளைத்துக்கொண்டு வெளிப்பட்டுத் தனக்கு ஞானோதயம் கொடுத்துவிட்டுப் போனதுவே பூகம்பமென்றும் கூறுகிறார். இந்தத் திடீர் மகான், அந்த ஞானோதயத்தால்—ஒருக்கால் பூமி யதிர்ச்சியால் மூளை கலங்கிப் போய்விட்டதோ என்னவோ—தன் புதல்வனாகிய 4 வயதுச் சிறுவனொருவனை மசூதிக்கு அழைத்துச் சென்று கசாப்புக் கத்தியொன்றினால் பிளந்துவிட்டார். பிளந்ததும் உடன் வெளிப்பட்டு—மூளையில் வெடிப்பேற்பட்டு விட்டதல்லவா?—"நான் ஆண்டவன் ஆணைப்படிக்கு என் புதல்வனைப் பலியிட்டிருக்கிறேன்" என்று ஊளையிட்டாராம். பலர் கொலை செய்ததாகக் கூறியும் "இல்லை; ஆண்டவனுக்குப் பலியே போட்டேன்" என்றாராம். என்ன நயம்! ஆண்டவன், இந்தியாவில் 35 கோடிப் பேரிருக்க, எல்லோரையும் விட்டுவிட்டு, இந்த மகானுபாவரைப் பார்த்தல்லவா குழந்தையைக் கொல்லும் அருங் காரியத்தைச் செய்யச் சொல்கிறார்!—பார்த்தார்கள் போலீசார் கனீபின் பைத்தியத்தை—உடனே பிடித்து பள்ளிக்கூடத்துக் கனுப்ப, மாஜிஸ்திரேட் "ஜன்மபரியந்தம் வெளியிலிறங்காதே; உன் பெருமையை ஜனங்கள் பார்த்து விடுவார்கள்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். இப்போது கனீப் சர்க்கார் விருந்து சாப்பிடுகிறார்; குழந்தையைக் கேட்ட கடவுள் அந்தத் திசைப்பையே இதுவரையிலும் எட்டிப் பார்க்கவில்லை. இப்படி பீகார் பூகம்பத்தால் எத்தனை கனீபுகள் ஏற்பட்டிருக்கிறார்களோ? தெரியவில்லை.

பண்டைக் காலத்தில்

மன்னர்கள் வெடியினால் சண்டை போட்டார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; இப்பொழுதோ வெடிக்காகச் சண்டை போடுகின்றார்கள் அவர்கள்! என்ன கால வித்யாசம்! இந்தியாவில் ஐக்கிய சர்க்கார் ஏற்பட்டால் எங்கு, தங்கட்குப் போடப்படும் வெடிகள் குறைந்து விடுமோ என்று பயந்து, சில சுதேச அரசர்கள் கூச்சல் போடுவதாக லண்டனிலிருந்து ஒரு செய்தி கிடைக்கிறது. அச் செய்தி மேலும், பாடியாலா மகாராஜா தனக்கு 17 குண்டுகள் போடப்படுவது கௌரவத்திற்குப் போதுமானதல்லவென்கிறாரென்றும், அதுபோலவே பிறரும் அதிகப்படியாகக் கேட்கின்றார்களென்றும், அதுபற்றி இந்திய சர்க்காரும் இந்தியா மந்திரியும் மிகக் கடுமையாக யோசிக்கிறார்களென்றும் கூறுகிறது. அப்பால், "தங்கள் குடிகளின் க்ஷேமலாபங்களைக் குறிவைத்து ஒரு சிறிதும் கவனிக்காமல் இருக்கும் மன்னர்கள் தான் இவ்விஷயத்தைக் குறித்து அதிக மும்முரமாக வாதாடி வருகிறார்கள்" என்கின்றது அந்த லண்டன் செய்தி. வெடியினால் ஒரு மனிதனின் கவுரவம் புலப்படுவதென்றால் என்ன விசேஷம்! என்னைப் போன்றவர்கட்கு வெடியிலென்ன விருக்கிறது என்று தோற்றலாம்; ஆனால் அதன் உண்மைப் பெருமை மகாவிஷ்ணுவின் அவதாரமாயிருக்கும் இந்திய அரசர்கட்குத் தான் தெரியும்.

சென்னைச் சிறைச்சாலை அறிக்கை.

சென்னை மாகாண சிறைச்சாலைகளின் 1933-ம் வருடத்திய நிர்வாக அறிக்கையை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அனுப்பியிருக்கிறார். அதில் 1933-ம் வருடக் கடைசியில் 14581 கைதிகளிருந்தனர் என்றும் அதற்கு முந்திய வருடக்கடைசியில் 15216 கைதிகளிருந்தனரென்றும், காங்கிரஸ்காரர்கள் பலர் சிறைவிதிகளை மீறி நடந்தனர் என்றும், 1932-ம் வருடத்தில் சிறை நிர்வாகச் செலவு மொத்தம் 1750920 ரூபாயாயிருக்க 1933-ல் 1638986 தான் செலவாயிற்றென்றும் கூறப்பட்டுள்ளது.

மலாயா ரப்பர் அபிவிருத்தி.

ஜூன் 23-ந்தேதி நாகபட்டணத்திலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்ட ரஜூலா கப்பலில் மலாயா சர்க்கார் உதவிபெற்றுப் போகும் 355 கூலிகளும் தாமாக செல்லும் 1800 கூலிகளுமிருந்தனர். அனைவரும் ரப்பர்த் தோட்ட வேலைக்காகச் செல்கின்றனரென்று தெரிகிறது.

சர்தார் படேல் உடல் நிலை

சிறையிலிருக்கும் சர்தார் படேல் நண்பர்கட்கு எழுதியுள்ள கடிதத்தில் இடையே சில எழுத்துக்களும் வார்த்தைகளும் அடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படித்துப் பார்த்தால் அவர் சிறையில் நோய்வாய்ப் பட்டிருக்கின்றாரென்று நம்புவதற்கு இடமிருக்கின்றதென வோர் செய்தி கூறுகிறது.

"அராபி பாஷை எல்லாமொழிகளுக்கும் தாயாகும். உலகில் அதுவே மூலமானது" என்று குறிப்பிட்டார் ஹஜ்ரத் மிர்ஜா பாஷிர் உத் தீன் மஹ்மத் அஹமத் என்பவர்.

பெயரைப் பார்த்தாலே உண்மை பெரிதாயிருக்கும்போல் தோற்றுகிறது.

* * *

சிந்து தேசத்தில் பிரியா என்ற ஊரிலிருக்கும் இருநாய்கள் யாரேனும் செத்தால் பிணத்துடன் சுடுகாடு சென்று, திரும்புகையில் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டுக்கு வருமாம்.

—சண்டே டைம்ஸ்.

ஏதேனும் கருட புராணம் கற்ற சாஸ்திரியார் வீட்டில்வளரும் நாய்கள் போலிருக்கிறது.

சோவியத் ருஷ்யாவில்

கல்வி போதிக்கக் காட்சிச் சாலைகள்

சோவியத் ருஷ்யாவில் ஏராளமான பொருட்காட்சிச் சாலைகள் உண்டு. அழிந்து பட்ட கொடுங்கோலன் ஜார் அரசனின் காலத்தில், அரச குடும்பமும், அரசாங்கமும் பொருட் காட்சிச் சாலைகள் நிறுவுவதில் ஓர் பிரத்யோக ஆசையைக் காட்டின. அவ்வாசையைப் பின்பற்றிப் பொது மக்களும்—விஷேசமாக தனவந்தர்கள்–தத்தமக்குச் சொந்தமாகக் கணக்கற்ற பொருட் காட்சிச் சாலைகளை நிறுவிக் காப்பாற்றி வந்தனர்.

அவற்றிலெல்லாம் பற்பல சரித்திரக்குறிப்புகள், விஞ்ஞான வளர்ச்சி பற்றிய ரிக்கார்டுகள், கலாஞான மூட்டும் விளக்கங்கள், ஓவியஞானம் பயக்கும் சித்திரங்கள் முதலியவை நிரம்பியிருந்தன. அவைகளை யெல்லாம் 1917ம் வருடத்தில் முடிவான பொதுவுடைமைப் புரட்சி கைப்பற்றித் தேசத்திற்குச் சொந்தமாக்கிக் கொண்டது.

*   *   *

அவர்கள், பொருட் காட்சிச்சாலைகளை எடுத்துக்கொண்டதோடன்றிச் சரித்திர சம்பந்தமாகப் பெயர்போன பெரும் மாளிகைகள் பலவற்றையும் கைப்பற்றிக் கொண்டனர். இன்று ருஷ்யா புகுந்து நோக்கினல், எத்தனையோ பொருட் காட்சிச் சாலைகள் இத்தகைய கட்டிடங்களிலிருக்கக்காணலாம். அவைகட்கெல்லாம் தற்போது அதிகாரிகளாயிருப்பவர் கல்வியிலாகாத் தலைவர்களாவர். அத்தலைவர்கள்—தனியுடைமைத் தனவந்தர்கள் காட்சிச் சாலைகளைத் தம்மட்டில் வைத்துக் கொண்டு பிரயோசனமில்லாமல் பூட்டி ஆண்டது போலல்லாமல்—எல்லா மக்கட்கும் பயன்படும்படியாகத் தேசிய சொத்தாய் உபயோகிக்கின்றனர். ஆதலால் அவற்றைப் பார்த்து அறிவு பெறும் சாதாரண மக்கள் அநந்தமாம்.

*   *   *

சாதாரணமாக, சரித்திர ரிக்கார்டுகளைக் காட்சிச் சாலைகளில் வைக்கும் போது, வருஷ வாரியாகப் பரப்புவதே வழக்கம். ஆனல் சோவியத் ருஷ்யாவோ அம்முறையைக் கைப்பற்ற வில்லை. தேசிய ஞானம் மக்களுக்கு வளர்ந்து எவ்வாறு அவ் வக்காலத்தில் கொள்கை மாறிக் கொண்டு வந்திருக்கின்ற தென்பது விளங்கத் தகுந்த மாதிரியில், யாவற்றையும் கோத்து வைத்திருக்கின்றது. ஆதலால் அங்கு தென்படும், ஓவியங்கள், விஞ்ஞான சாஸ்திரக் குறிப்புகள், சாகித்யப் பகுதிகள் யாவும் மக்களுணர்ச்சியைக் காண்பிக்கும் பகுதிகளாகவே இருந்துதவுகின்றன. ருஷ்யர்களுக்கு ஏற்கனவே பொருட் காட்சிகள் நிறுவுவதில் ஆசை ஜாஸ்தி.

*   *   *

வெளிநாடுகளை எடுத்துக் கொண்டால் காட்சிச் சாலைகள் பெரும்பான்மையும் கற்றோருடைய உபயோகத்திற்கே இருந்து வருகின்றன வென்று காணலாம். ஆனல் ருஷ்யாவிலோ பாமர மக்களே பெரும் பான்மையும் அவற்றை உபயோகிக்கின்றனர்.

*   *   *

சர்க்கார் பாமர மக்கட்குக் காட்சிச் சாலைகளால் நன்மை யேற்படும் பொருட்டுப் பல சௌகரியங்கள் செய்துள்ளனர். அவற்றிலொன்று வருடந்தோறும் உல்லாச யாத்திரைகள் நடத்துவதாம். இவ்வுல்லாசப் பிரயாணங்கட்குச் சில திட்டங்கள் போடப்பட்டுள்ளன.

*   *   *

மாஸ்கோவில் வியாபார சங்கமொன்றிருக்கின்றது. அதனைச் சென்று பார்வையிட்டால் பல வருடங்களாக வியாபாரம் என்னென்ன மாற்றங்களடைந்து வந்திருக்கிறது, புரட்சிக்கு முன்பு அதன் நிலைமையென்ன, புரட்சி என்ன செய்தது என்பன போன்ற விஷயங்கள் நன்கு விளங்கும். மற்றொரு காட்சிச்சாலை 'தாயும் குழந்தைப் பாதுகாப்பும்' என்பதாகும். அங்கு சென்று நோக்கினல், புரட்சிக்கு முன்பு தாய் மார்களின் நிலைமை யெப்படி யிருந்தது, அவர்கட்குச் சர்க்கார் என்னென்ன உதவி செய்து வந்தார்கள், அப்பால் புரட்சியின் பின் அடைந்த மாற்றமென்ன என்பன போன்ற விஷயங்கள் தெளிவாகப் புலப்படும்.

*   *   *

மற்றொரு பெரிய பொருட் காட்சிச் சாலை "தொழிலாளிகள் ஆரோக்கியம் பாதுகாப்பு" என்பதாகும். இக் காட்சிச் சாலை பல நகரங்களில் அமைந்திருக்கின்றன. அவற்றில் குறிப்பிட்ட காலங்களில் கூட்டம் கூட்டிச் சித்திரங்களாலும், தீபப்படங்களாலும், பிரசங்கங்களாலும் அறிவு புகட்டப்படுகின்றது. சிற்சில காலங்களில் இவ்வறிவூட்டும் பொருட்கள் நாட்டில் ஆங்காங்கும் கொண்டு போகப்படும்.

*   *   *

மேற் சொன்ன பற்பலவிதக் காட்சிச் சாலைகளில் மிகவும் சிறந்தது உடற் பயிற்சிக் காட்சியாகும். அது லெனின் குன்று என்ற விடத்தில் நிலவுகின்றது. அதில் பற்பலவித விளையாட்டுக் கருவிகள், நூல்கள், இதர சாமான்களிருக்கின்றன. வருடந்தோறும் அங்கு நடத்தப்பெறுகின்ற காட்சி சோவியத் ருஷ்யாவில் மிகவும் முக்கியமானது.

*   *   *

வேறு குறிப்பிடத் தகுந்த ஒரு காட்சிச் சாலை "நாகரிகச் சாலை" என்பதாம். இங்கு முதன் முதலில் புரட்சியின் சரித்திரம் விளக்கப்படுகின்றது. அதற்காக அவர்கள் பல பகுதிகளாகச் சாலையை பாகுபாடு செய்துள்ளார்கள். ஒரு பகுதியில் சிவப்புப் படையும் அதனோடு சேர்ந்த கடற் படையும் காண்பிக்கப்பட்டுள்ளன. மற்றொரு பகுதியில் ஐரோப்பாவில் நிகழ்ந்த பல புரட்சிகள் சித்திரிக்கப் பட்டுள்ளன. மற்றொரு பகுதியில் 1905 டிசம்பரில் நிகழ்ந்த புரட்சி தீட்டப்பட்டுள்ளது. மற்றொரு பகுதி (சமூக) ஐக்கிய சங்க வளர்ச்சியை நிரூபிக்கின்றது.

*   *   *

கைத்தொழில் காட்சிச்சாலை யொன்றில் எகிப்தியப் பொருட்களும் பண்டைக் கால சிற்பங்களும் சேமிக்கப் பட்டுள்ளன. இங்ஙனம் ருஷ்யாவில் ஒவ்வொரு பகுதிக்குமாக நிறுவப்பட்டுள்ள சாலைகள் ஏராளம். அவற்றை யெல்லாம் உழவர்கள், மாணவர்கள், போர் வீரர்கள், தொழிலாளிகள் முதலியோர் அவ்வப்போது பார்த்து வருகின்றனர். விசேஷமாக மாணவர்கள் ஒழுங்காக மூன்று வருடம் இக்காட்சிச் சாலைகளைப் பார்ப்பதில் பயிற்றப்படுகின்றார்கள். எனவே ஆசிரியர்கட்குப் போதிக்க வேண்டிய சிரமமும் இல்லாமலாகின்றது; என்பதோடு சரித்திரம் கைத்தொழில், சுகாதாரம் போன்ற அநேக விஷயங்கள் தாமாகவே தெரிந்தும் விடுகின்றன.

பட்டணம் பார்த்த கிருஷ்ணய்யர்

(தாத்தா)

என் சொந்த ஊர் விஷ்ணுபுரம். விஷ்ணுபுரம் திருநெல்வேலி ஜில்லாவின் ஓர் மூலையில் திருவாங்கூரை யொட்டி யிருக்கிறது. அதனையோர் சிறிய பட்டி என்றுதான் சொல்லவேண்டும். அதில் சுமார் 80 வீடுகளுண்டு. அதிலுள்ள மனிதர்கள் எல்லோரும் உலகம் தெரியாதவர்கள். அங்குள்ள நாலா ஜாதியாரும் அவரவர் குலாசாரப்படி யொழுகி யமைதியாகப் பொழுது போக்கி வருகிறார்கள். அவர்களில் ஒருவர் பார் பார் கிருஷ்ண ஐயர் என்பவர்.

இந்தக் கிருஷ்ண ஐயர் ஓர் வயோதிக சனாதனி. நான் குறிப்பிடுகின்ற இப்போது அவருக்கு வயது 60 இருக்கும். அவர் தர்ம சாஸ்திரங்கள் திருவாய் மலர்ந்தருளுபவைகளில் நின்று ஒரு மில்லி மீட்டராவது அடியெடுத்து வைத்துவிட மாட்டார். நழுவவேண்டுமென்றாலும் அவர் உடம்பு சம்மதியாது. ஏனெனில் பூரி, சிராத்தம், தர்ப்பணம் முதலியவற்றை வாங்கி வாங்கி, யுண்டு உண்டு, நன்றாகப் பறங்கிக்காய் மாதிரி கொழுத்து, பேயம்பழம்போல் பழுத்துப் போயிருந்தார். அவர் வயிறு வேறு யாருடையவோ உடம்பில் இருந்திருக்கவேண்டியதாம். அவரது தலைக்கும் கழுத்துக்கும் ஏதாவது உருவ சம்பந்தம் உண்டாவென்றால் எந்தச் சிற்பியாலும் மைக்ரோஸ்கோப் வைத்துப் பார்த்தாலும்கூடச் சொல்லிவிட முடியாது. கழுத்தின்மீது தலையொட்டிக் கொண்டிருக்கும் சம்பந்தத்தைத் தவிர வேறு யாதொரு சம்பந்தமும் பார்த்துவிட முடியாது. கால் அவர் நடப்பதற்காக அமைந்தனவோ அன்றி உடம்பைத் தாங்கத்தான் ஏற்படுத்தப் பட்டிருந்தனவோ; அச் சந்தேகம் இன்னும் தீரவில்லை.

இந்தக் கிருஷ்ண ஐயருக்கு ஒருநாள் பட்டணம் பார்க்க வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அவருக்கு ரயிலையும் மோட்டாரையும் பற்றி வெறுப்பதிகம். ஒருநாள் திருச்செந்தூருக்குச் செல்கையில் ரயிலில் போனார். அப்போது உடன் சென்ற மகன் தோசை சாப்பிட, அது தண்ணீரில்லாக் குறையினால்தொண்டையில் போய்ச் சத்தியாக்கிரகம் செய்து கொள்ள, அந்த அபாய நிலைமையைச் சமாளிக்க ஐயர் அபாய அறிவிப்பைப் பிடித்திழுத்து விட்டார். உடனே ரயில் நின்றது; உத்யோகஸ்தர்கள் வந்தனர்; காரணம் விசாரித்தனர். அதற்குள் தோசை வயிற்றை எட்டி ஏப்பம் வந்துவிட்டதால் ஐயரும் மகனும் மிரள மிரள விழித்தனர்.

அதிகமேன்? ஐயர் சனாதனிகள் பரிசுத்தத் தன்மையை யெல்லாம் எடுத்துக்கூறி எப்படியோ தப்பினார். ஆனால் மானம் தீரவில்லை. ஆதலால் அன்று முதல் ரயில் பிரயாணத்தோடு சண்டை போட்டு விட்டார்.

எனவே பட்டணம் பார்க்க விரும்பிய ஐயர் எங்கு சென்றார் தெரியுமா? எங்களூருக்குச் சற்று 35 மைல் தூரத்தில் திருக்குறுங்குடி யென்று ஒன்றிருக்கிறது; அங்கு சென்றார் அவர்.

திருக்குறுங்குடி எனக்கு நன்றாகத் தெரிந்த ஊர். அது இயற்கை வளங்களும் நீர் நிலைகளும், மலைகளும், சிறு சிறு கானாறுகளும் உடைய ஓர் அழகிய ஊர். அதில் நகரத்தின் லட்சணங்களும், கிராமத்தின் அடையாளங்களு முண்டு. அங்கு கிருஷ்ண ஐயர் வந்து நான்கு நாள் உல்லாசமாக விருந்தார். ஐந்தாம் நாள் காலையில் அவர் கண்ணாடி பார்த்ததும் "பெருமாள் என் முகம் எப்படிக் காடடர்ந்து தோற்றுகிறது, பார்த்தீரா? க்ஷவரம் செய்தால் நல்லது ஓய்" என்றார். நானும் "ஆம்" என்றேன். அப்பால் அவரையோர் நல்ல பார்ப்பர்ஷாப்புக்கு அழைத்துச் சென்றேன். அந்த ஷாப்புதான் திருக்குறுங்குடியில் மேலானது. அந்த ஷாப்பை நெருங்கியதும் ஐயர் "ஐயா பெருமாள்! நீங்கள் அம்பட்டன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்குப் பதிலாக ஏதோ வியாபாரம் நடக்கும் கடைக்கல்லவா இட்டுச் செல்கின்றீர். மயிரைக் கிரயம் பண்ணச் சொல்கிறீரா?" என்று வெருண்ட தோற்றத்தோடு கேட்டார்.

நான், "வாருங்கள் அம்பட்டன் வீடுதான் இது" என்றேன்.

ஐயருக்கு நான் சொன்னசொல் ஏறவில்லை. முகம் கடவுள் வேண்டாமென்று சுயமரியாதைக்காரர்கள் செய்யும் பிரசாரத்தைக்கேட்ட திருநெல்வேலி சைவர்கள் முகம்போல் கோணலாயிற்று.

கிருஷ்ண ஐயர் ரசமில்லாது பார்ப்பர் ஷாப்புக்குச் சமீபம் வந்ததும் கடைக்கு முன் போடப்பட்டிருக்கும் போர்டை (விளம்பரப் பலகையை) கூர்ந்து பார்த்தார்; அதனை வாசித்தார்.—வாசித்தது தான்; ஓடினார் ஓட்டம் தொந்தியைச் சுமந்து கொண்டு. இரண்டு நிமிஷத்தில் அடுத்த தெருவை யடைந்தது அவரது புனித சரீரம்! நான் பின்னாடி ஓடிச் சென்று "ஏன் சாமி ஓடுகிறீர்கள்? ஏன்?" என்றேன். எனக்கு விஷயம் விளங்கவில்லை. ஐயர் உடல் நடுங்க, வாய் குழற, உதடு விறைக்க, கண் சிவக்க ஏதோ ஒரு பெரிய அபாயத்திலிருந்து தப்பிவிட்டாற்போல பெருமூச்சு விட்டு "என்ன ஓய்! என்னை எருமைமாடென்று நினைத்தீரா? ஐயரென்று பாராமல் கேலி பண்ணப் பார்க்கிறீரே" என்றார். நான் ஒன்றும் புரியாது 'ஏன் ஐயா கடையை நெருங்கியதும் ஓடுகின்றீர்கள்? என்றேன்.

ஐயர்:— 'பார் பார் ஷாப்' என்று எழுதி யிருக்கிறானே. உன்னைத் தொலைத்து விடுகிறேனென்பதல்லவா அதன்பொருள்? இது கசாப்புக் கடையோ என்னவோ? அபாயகரமான விடத்திற்கு என்னை ஏன் அழைத்துச் செல்கின்றீர்?

என்றார். அவர் வியாக்கியானத்தையும், பார்ப்பர் "ர்" ஒற்றை விட்டிருப்பதையும் பார்த்ததும் எனக்கு வந்த சிரிப்பு நான் எங்கிருக்கின்றேனென்பதையும் மறந்து விட்டது.

பிறகு நான் பார்ப்பர் ஷாப்பின் அமைப்புகளையும் அங்கு வேலை செய்வதின் சுகத்தையும் பற்றிக் கூறினேன். ஐயர் கவனமாகக் கேட்டாரெனினும் நாற்காலியி லுட்கார்ந்திருந்து க்ஷவரம் செய்யவேண்டுமென்றதை உண்மையிலேயே ஏளனம் செய்வதாக நினைத்துக் கொண்டு கோபம் கொண்டார். நான் அதிகமாகப் பேசினால் ஐயர் போய் விடுவாரென்று எண்ணி, நீண்ட நேரத்திற்

குப் பிறகு அய்யரைச் சாந்தப்படுத்தினேன். அப்பால் அவர் ஓர் வைதீக அம்பட்டன் வீட்டுக்குப் போகவேண்டுமென்றார். அந்தச் சமயத்தில் கோவிந்தசாமி என்ற ஓர் குறும்பன் ஐயர் கதையைக் கேட்டு முத்து என்பவன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான்.

முத்துவோர் "பாடாவதி" நாவிதன். அவனைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். அவன் வைத்திருக்கும் கத்திகளெல்லாம் சுத்தச் சுதேசிகள். அந்த வூரிலேயே உள்ளூர்க்கொல்லர்களைக்கொண்டு அடித்தவைகளாம். அவன் க்ஷவரம் செய்வதென்பது கிட்டத்தட்டக் கசாப்புப் போடுவதுதான். அவனிடம் க்ஷவரம் செய்து ஒருவன் வெளி வந்தானென்றால் ஏதோ ஒரு யுத்தகளத்திற்குச் சென்று மீண்டதுபோலவே யிருக்கும். வழியில் அவன் ஏதாவது ஒரு டாக்டரைப் பாராமல் வீட்டுக்கு வர முடியாது.

இந்த முத்துவிடம் கிருஷ்ண ஐயர் போனதும், நான் என்னவாகுமோவென்று நினைத்துக்கொண்டு சிற்றன்னை வீட்டுக்குப் போனேன். அங்கு சென்று உட்கார்ந்து ஐந்து நிமிஷமானதும் ஒரு மனிதன் கொலையாளியிடமிருந்து தப்பி வந்தவன் போல் ஓடிவந்தான். நான் திடுக்கிட்டு அவனைக் கூர்ந்து நோக்கவும் அவன் கிருஷ்ண ஐயரென்று தெரிந்தது. அவர் உடம்பு முழுதும் வியர்வை சிந்த நடு நடுங்கியது. முகத்தில் ஓர் துண்டைப் போட்டு மறைத்திருந்தார். நான் ஒன்றும் பேசாது எழுந்து துண்டை எடுத்தேன். ஆ! என்ன வேடிக்கை! முகத்தின் ஒரு பக்கம் க்ஷவரமாகி இருந்தது; அது முழுதும் இரத்தக் காடு. மற்றப் பாகம்—காடு.

நான் அதனைக் கண்டு சிரிப்பும் வருத்தமும் கொண்டு, "சாமி என் ஓடி வந்துவிட்டீர்கள்" என்றேன். ஐயர் அழுதுகொண்டு "பாவி அம்பட்டன்! கலப்பையைக் கொண்டல்லவா உழுகிறான்" என்றார்.

நான்:—எப்படி வந்தீர்கள்?

அய்யர்:—கூடிய வரையிலும் பொறுத்திருந்தேன். கடைசியில் முடியவில்லை. அப்போது அவன் கத்தியைத் தீட்டுவதற்காகக் கையை யெடுத்தான். நான் இதுதான் தருணமென்று ஓடி வந்து விட்டேன். பிற்பால் அவன் 'சாமி எங்கு போறீங்கோ, எங்கு போறீங்கோ" வென்றான். அதற்கு நான் கொஞ்சம் குளோரோபாரம் போட்டுக் கொண்டு வருகிறேன்; இல்லாவிட்டால் உன் கத்தி வீச்சை எதிர்த்து நிற்க முடியாது." என்று சொல்லிக் கொண்டு ஓடி வந்து விட்டேன்.

என்னாசம்! கிருஷ்ண ஐயர் க்ஷவரம் பெரிய வேடிக்கையாகி விட்டது; ஊர் முழுதும் சிரிக்கத் தொடங்கி விட்டது. ஐயர் அமங்கலிபோல் தலை வழியாக மூடிக்கொண்டு படுத்துக்கொண்டார். கடைசியாக வெகு பிரயாசைப்பட்டுக் கதவை மூடிக்கொண்டு மற்றொரு நாவிதனை அழைத்துப் பாதி வேலையை முடித்தோம்.

அதிகமேதற்கு? அடுத்த நாள் ஐயர் கால் நடையாக விஷ்ணுபுரம் நோக்கிப் புறப்பட்டு விட்டார்.

ஐயர் பட்டணத்தில் கண்டது கொஞ்சமானாலும் பார்பார் கிருஷ்ணன் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டது லாபம்.

ஜர்மனியில் படுகொலை

ஜூன் 30ந் தேதி பர்லினில் படுகொலைகள் பல நடந்திருப்பதாகச் செய்தி எட்டுகின்றது. ஜர்மனியின் மாஜி முதன் மந்திரியாகிய ஷிலீச்சர், அவர் மனைவியார், நாஜிப் படைத் தலைவரான காப்டன் ரோஹிம், அவர்போன்ற சில பிரமுகர்கள் ஆகியோர் துடிக்கத் துடிக்க உயிரழந்தார்களாம். ஒரே நாளையில், ஓரிரவில், சில மணி நேரங்கட்குள் அத்தனை பேரும் படுகொலை செய்யப்பட்டு விட்டதால் ஜர்மனி தேசம் விலவிலத்து ஸ்தம்பித்திருக்கிறது. பலருடைய மனதில் கோபத்தீக் கொழுந்து விட்டெரிகின்றதாம்; ஆனால் தற்சமயம் யாதும் செய்ய முடியாமல் வாளாவிருக்கின்றனர். இந்தக்கொடும் செய்கைக்குக் காரணம் என்ன? காப்டன் கொயரிங் வெளியிட்டிருக்கு மறிக்கையொன்றினால் தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்க இவர்கள் சூழ்ச்சி செய்தனரெனத் தெரிகிறது. அந்தச் சூழ்ச்சி எவ்வளவு தூர முண்மை, அதில் யார் யார் எந்த அளவுக்குச் சம்பந்தப்பட்டிருந்தார்களென்பது ஒன்றும் போதிய அளவு விசாரணை செய்து தெரிந்துகொள்ளப் படவில்லை. சர்வாதிகாரி பீடத்தில் ஏறியுட்கார்ந்து கொண்ட ஹிட்லர் அதிகார மமதையால் எதுவும் செய்துவிடலாமென்று நினைக்கிறார். மக்களைப் போதிய அளவு விசாரணைகூடச் செய்து பார்க்க இரக்கம் வையாமல், அநாகரிகரும் இக்காலத்தில் வெறுக்கின்ற கொலைத் தண்டனையைக் கையாளப் பார்ப்பதென்றால் அவருடைய ஆட்சி எத்தனை மைல் ஓடுமென்று தெரியவில்லை. கடுங்கையினாலும் தடியினாலும் உலகை ஆண்டு விடலாமென்று நினைப்பது முட்டாள் தனத்தில் மாற்றேறியதாகும். தடியடி யெப்போதும் நில்லாது; என்றைக்காவது தடி அடுப்புக்குள் நுழைய வேண்டுவதுதான். மனதை யுருக்கும் அன்பினால் மனிதர்களை ஆட்சி செய்யலாமேயன்றி தடியினால் ஆளக்கருதுபவன் தடி முறிந்ததும் துணையற்றவனாகியே போவான். அப்போது அவன் உறுங்கதி சரித்திரத்தால் காணத்தகுவதாம். எந்த நாட்டுச் சரித்திரத்தில் தடியடி ஒரு அரசை நீடித்திருக்கச் செய்திருக்கின்றது? சூழ்ச்சியாலோ ஆர்ப்பாட்டத்தாலோ, பேச்சினாலோ வேறு வழியினாலோ மக்கள் கசப்பைக் காண்பிப்பார்களானால் அதன் காரணத்தைக் கண்டுணர்ந்து குற்றத்தைப் பரிஹரிப்பது தான் நேர்மையாகுமேயன்றி, சட்டம், தடியடி, ராணுவமாகியவற்றால் கசப்பை நீக்கிவிடலாமென்பது தற்கால சாந்தியாகவே தானிருக்க முடியும். கசப்புக்கேற்ற மருந்து இனிப்பேயன்றி வேறில்லை. இதன் உண்மையை சர்வாதிகாரச் சகடம் ஓடுவதிலிருந்து தெரிந்து கொள்வார் ஹிட்லர்.

ஊழியன் சந்தா.

உள்நாடு வருடச் சந்தா	ரூ	6-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	3-0-0
வெளிநாடு வருடச் சந்தா	,,	10-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	5-0-0

காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.

செய்தித் திரட்டு

திவான்பகதூர் சபாரத்னம் செட்டியாருக்குப் பாராட்டு.

கானாடுகாத்தான் திரு. சபாரத்னம் செட்டியாரவர்கட்கு திவான்பகதூர் பட்டம் கிடைத்ததைப் பாராட்டி திருச்சி பிராமணரல்லாதார் வாலிப சங்கத்தார் ஜூன் 23-ந் தேதியோர் தீர்மானம் நிறைவேற்றினர்.

ஷில்பெரூர்டு முயற்சி

சென்ற வருடம் இங்கிலீஷ் கால்வாயைத் "தண்ணீர் சைகில்" ஒன்றினால் கடந்து சென்ற ஹாலந்து தேசவாசியாகிய ஷில்பெரூர்டு என்பவர் இவ்வருடம் "ஒயின்வெசல்" ஒன்றினால் கடக்க விரும்புகிறார். அம்மாக்கலத்தில் பாயும் ரேடியோவும் தானிருக்கும்.

பச்சை சர்ப்பம்

சமீபத்தில் திருவனந்தபுரம் காட்சிச்சாலைக்குப் பச்சை நிறமான ஓர் சர்ப்பம் கொண்டு வரப்பட்டதாம். அதனை தேவிகுளம் (வடதிருவாங்கூர்)கமிஷனர் முயற்சியால் 4000 அடி உயரத்திலிருந்து பிடித்து வந்தார்களெனவும் அதன் தலையில் நாமம் காணப்படுகின்றதென்றும் சொல்லப்படுகிறது. (இதேபோழ்து பச்சைப் புள்ளிகளுடைய ஒரு வெள்ளை நாகத்தைப் பர்மாவில் கண்டதாகச் செய்தி கிடைக்கிறது).

ஆச்சரியக் கல்

அப்கானிஸ்தானத்திலுள்ள பாதக்ஷானுக் கருகில் ஒரு அதிசயக் கல்லைக் கண்டெடுத்தனர். அக்கல்லிலிருக்கும் ஒரு சிறு குழி மூலமாக ஓயாது தண்ணீர் கசிந்து கொண்டிருக்கிறது.

சாக்கோட்டை சமதர்ம வாசகசாலை

சாக்கோட்டை சமதர்ம வாசகசாலையின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 24-6-34-ந் தேதி திரு. எஸ். வீரப்பா தலைமையில் நடைபெற்றது. ஒரு புத்தக நிலையம் நிறுவவேண்டுமென்றும் அங்கத்தினர் சந்தாவாக 4 அணா வசூலிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிரமஞான சங்கத் தலைவர்

டாக்டர் அன்னிபெசண்டின் பின்னர் பிரம்மஞான சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் அருண்டேலுக்கு ஜூன் 21-ந் தேதி அடையாற்றில் முடி சூட்டப்பட்டது.

காக மகரிஷி

பர்மாவைச் சேர்ந்த மாண்டி கிராமத்தில் பேசும் காகமொன்றிருக்கிறது. அது "பாயா, பாயா" என்று கத்துகிறதாம். பிற காகங்கள் அதற்கு ஆகாரம் கொடுக்கின்றனவாம்.

குர்ஜரம் கொடுத்த காணிக்கை

மகாத்மாவுக்கு குர்ஜரப் பிரயாணத்தின்போது மொத்தம் 46 ஆயிரம் ரூபாய் ஹரிஜன நிதிக்காகக் காணிக்கை கிடைத்ததென்று தெரிகிறது.

பூமியிலிருந்து புகை

தர்ப்பங்கா என்ற இடத்தில் ஜூன் 29-ந் தேதி பகல் 12 மணிக்குத் தரையிலிருந்து 10 நிமிஷ நேரம் புகை கிளம்பியது; சூடு பொறுக்க முடியவில்லை. பூமியில் வெடிப்புகளில்லாதிருந்தாலும் புகை கிளம்பியதைக் கண்டு ஜனங்கள் ஆச்சரிய முற்றனர்.

சர். சாப்ரூ 7000 கொடுக்கிறார்

சர். தேஜ்பகதூர் சாப்ரூ ஒரு ஹரிஜன வைத்யசாலை ஸ்தாபிக்கும் பொருட்டு 6000 ரூபாய் நன்கொடையும் காந்திஜீயின் ஹரிஜன நிதிக்கு ரூபாய் 1000 மும் கொடுத்துள்ளார் என்று தெரிகிறது.

வைசிராய் பூகம்ப நிதி

ஜூன்மாதம் 23-ந் தேதி வரையிலும் வைசிராய் பூகம்ப நிதியிலிருந்து பீஹார் புனருத்தாரணத்திற்காகப் பதினேழுலட்சத்து எழுபத்தெண்ணாயிரம் ரூபாய் விநியோகம் செய்யப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

பவநகரில் காந்தி பக்தி

ஜூன் 30-ந் தேதி காந்திஜீ பவநகரம் சென்றபோது சில பொதுக்கூட்டங்களில் 30000 ரூபாய்கொண்ட பணமுடிப்புகளைக் கொடுத்தனரெனத் தெரிகிறது.

6 வயதில் பிரசவம்

1932-ம் வருடம் ஜூன்மாதம் 7-ந் தேதி டில்லியிலுள்ள விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியில் 6½ வயதுள்ள ஒரு சிறுமிக்கு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. இச்சம்பவம் டாக்டர்கட்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளதாம்.

திருக்கோஷ்டியூரில் தரும ஆஸ்பத்திரி

காரைக்குடி திரு. எம். எஸ். எம். மெய்யப்ப செட்டியார் உதவியால் திருக்கோஷ்டியூரில் ஓர் தரும ஆஸ்பத்திரி நிறுவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மந்திரத்தின் முடிவு

காயிர்ப்பூர் என்ற விடத்தில் ஒரு நாகம் இரவில் ஒரு வீட்டினுள் நுழைந்தது. அதனைக் கண்டு அவ்வீட்டினுள்ளார் பயந்து கூக்குரல் போட்டனர். பக்கத்து ஜனங்கள் வந்து உதவிசெய்ய முயல அவர்களோடு வந்த ஒரு பிராமணன் ஏதோ மந்திரம் சொல்லி, மருந்தைப் போட்டுப் பாம்பைப் பிடித்துக் கொண்டான். மறுநாள் காலையில் அதனைக் கழுத்தில் போட்டுக்கொண்டு ஆலய மொன்றில் நுழைய, பாம்பு தூபதீபத்தைக் கண்டதும் விழித்து, பார்ப்பனனைக் கழுத்தில் இருமுறை கடித்து விட்டது. உடன் அவன் அந்த விடத்திலேயே மரணமானான் என்று தெரிகிறது.

அரிசி இறக்குமதிக்குத் தடை

இந்தியச் சட்டசபை சமீபத்தில் ஆரம்பமானதும், சர்க்கார், அரிசி இறக்குமதியாவதைத் தடை செய்யும் தங்கள் திட்டத்தைச் சமர்ப்பிப்பர் என்று தெரிகிறது.

தேவகோட்டை சரஸ்வதி வாசகசாலை

தேவகோட்டை சரஸ்வதி வாசகசாலையின் கூட்டமொன்று ஆனிமீ 17உ மாலை 5 மணிக்கு கண. கதிரேசன் அவர்கள் தலைமையில் நடந்தது. மு. வீரப்பா அவர்கள் தற்கால ராஜீய நிலைமை என்பது பற்றியும், கா. சுந்தரம் அவர்கள் விதவைகளின் துயரம் என்பது பற்றியும், ராம சுப்பிரமணியன் அவர்கள் கதர் கட்டுவதின் அவசியமென்பது பற்றியும் பேசினார்கள்.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd.,
at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.